4257

# அரிச்சந்திரன்

மே. பொன்னுசாமி பிள்ளை

1914

O-,2MPP2A
N14
170151

# ரிச்சந்திரன்.

(கமலாக்ஷி, விஜயசுந்தரம், ஞானசம்பந்தம்,
ஞானம்பிகை இயற்றியவர்.)

ன் பேபர்சுறென்ஸி ஆ'பீஸ் பொக்கிஷதாரராக இருந்தவர்,
ராய் சாயிப்

பிரபுரம் - ம. பொன்னுசாமி பிள்ளை
இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUL 1914
MADRAS.

A 2377

சென்னை:
வா அச்சுக்கூடம்.

Rights Reserved.

[தபால் வர்த்தனை வேறு.

170151

சென்னை-600 008

OF THE REGISTRAR OF ... MADRAS. 23 JUL 1912

Printed by Thompson & Co., at the "Minerva" Pr
33, Popham's Broadway, Madras.

உ

கடவுள் துணை.

# அரிச்சந்திரன்.

## Act I.

### Scene 1.—Interior. இந்திரன் ஸபை.

(வசிஷ்டர், விஸ்வாமித்திரர், நாரதர், தேவர்கள்.)

இராகம்-பிலஹரி. தாளம்-ஏகம்.

தேவர்.—

திங்கள்சடைமுடிதரித்த தேவனைச் சாற்றித்
தேடித்துதிக்குமுன்தன் திருவடிபோற்றி.
எங்குமுன்தன் புகழைப்பேசி எந்தலே ஏற்றி
இருநிலம்துதிக்குமுன்தன் ஈரடி போற்றி.
மலையின்சிறகரிந்ததாலே மாநில மாற்றி
வாழ்த்தும்இனம் உம்முடைய மலரடிபோற்றி.

தவேந்திரன்.—தேவர்களே! நவநாயகர்கள் கதிமாறாது நடக்கிறார்களா?

தேவர்.—தேவரீருடைய ஆக்கினைக்கடங்கி நவநாயகர்கள் கதிமாறாது நடக்கிறார்கள்.

இந்திரன்.—சப்தமேகமும் உலகத்துக்கு வேண்டிய காலத்தில் மழை பெய்கிறதா?

தேவர்.—யாதொருகுறைவும் வராமல் உலகத்தார்மகிழ வேண்டிய காலத்தில் மழை பெய்கிறது. அமரர்கோனே !

நாட்டியப்பெண்கள்.—

இராகம்-நாதநாமக்கிரி-தாளம் ஆதி.—(ஒனதிலராம் என்றமெட்டு.)

வாடுகிறதித்தினம் வருந்தமனம்
மன்னனேமாற்றுவீர் மதன்சினம் — வா

மலரம்புகளைவாரித் தாவியே வஞ்சகமாய் பாவியே
வலிகொண்டாவியே தாவியே தாவியே வருந்தமனம் — வா

அரசனே உன்னிடம் அடைந்தேன் அடியாளை
அகற்றும வென்தனை ஆதரிப்பீ ரிவ்வேளை — வா

இந்திரன்.—தேவர்களே ! நாட்டியப்பெண்களுக்கு வேண்டிய வெகுமதி கொடுத்தனுப்புங்கள்.

தேவர்.—பாக்கியம் இந்திரபூபதி.

இந்திரன்.—

இராகம்-ஆபேரி தாளம்-ஆதி.—(நடுபோமு கலேனி என்றமெட்டு.)

பல்லவி.

அறைவீரே முனிவோரே — அவனியாள்வோரில்
பொறையோடு பொய்யாத — புண்ணியருமுண்டோ (அ)

அநுபல்லவி.

மறையோதும் அந்தணரை — வணங்கியேதினம்
குறைசொலாமற் பொருள்பூமியை — கொடுப்பவரெவரோ (அ)

சரணம்.

மன்னுயிரைத் தன்னுயிர்போல் — மதித்துப்பிறருடைய
மனையாளைத்தாயென்றெண்ணி — வழக்கோரஞ்சொலாமலும்
இன்னலேபிறருக்கு — இழைக்காமல் அரசுரிமை
இயற்றும்புரவலர்கள் — எங்குண்டு அறிந்தாலே (அ)

உலகத்தில் அரசாட்சிசெய்யும் அரசர்களில் பொய்சொல்லாமல் மெய் பேசும் உத்தமர்களிருந்தால், அவர்கள் யார் என்று சொல்ல வேண்டும் முனிவோர்களே.

வசிஷ்டர்.—அப்பா! தேவேந்திர மஹாராஜனே! நீ சொல்லியவிதம்,



OFFICE OF THE REGISTRAR OF … 23 JUL 1914 MADRAS.

இராகம்-மோஹனம். தாளம்-ஆதி.

(பொன்னே இவருடையதேசம் என்றமெட்டு.)

பல்லவி.

மண்ணுலகோர்க்கு மித்ரன் — பொய்சொலவே
மனதிலுமெண்ணாத சற்புத்ரன்

அநுபல்லவி.

பண்ணவரின்சீர்ப் — பாதம்முடிசூடி
பரதாரம் தாயெனப் — பாலுகாப்பான்நாடி
நண்ணலர்களுக்கு — நமனெனவேதேடி
ஞாலத்தில் சிங்கம்போல் — நவமணிமுடிசாடி (ம)

சரணம்.

கண்ணுதலெரித்த — காளையே உருக்கொண்டு
கண்காணவந்த மாரன் — பெருவிதியில்
எண்ணிலா அரசரும் — இணையாகச்சொலவே
ஏற்காதவனே குபேரன் — எளியோருக்கு
அண்ணல்தனத்தையே — அள்ளிஅள்ளிதினம்
அளித்திடு முதாரன் — அந்தரத்தினில்
ஒண்ணியதிரிசங்கு — ஒப்பிலாத்தவத்தினால்
உதித்தசுகு மாரன் — உரைப்பேன்கேளும்
திண்ணியன் தனைப்போல் — திரிலோகத்திலுமில்லை
தேவர்கோனே அரிச்சந்திரன் — சீட்டெனக்குத் தொல்லை
மண்ணோரறிந்ததே — மன்னன் புகழுக்கெல்லை
வரையில்லை மெய்யென — மதிப்பாயே சொல்லை (ம)

அப்பா ! தேவேந்திரா ! கோசலநாட்டையாளும் அரிச்சந்திர மஹாராஜன் பொய்சொல்லாதவன் சத்தியமே உருவாயவதரித்தவன். அவனுக்கு மிஞ்சினவ ரொருவருமில்லை.

விஸ்வாமித்திரர்.—ஆ! ஆ! என்ன சொன்னீர் ! அரிச்சந்திரனை ! அடடா ! அவனையா சிரேட்டமாகப் பேசத்துணிந்தீர்! ஸபாஷ்! ஸபாஷ் ! அரிச்சந்திரனைப்போன்ற பொய்யன் உலகில் இல்லையென்று சொன்னால் பொருத்தமாயிருக்குமே.! இவ்வசிஷ்டருக்கு

இராகம்-அடாணா. தாளம்-ஆதி.—(பாவி யெனைத்தொடாதே.)

**பல்லவி.**

ஓ ! ஓ ! மதிகெட்டதோ ! இச்சபையினில்
உண்மை சொலப் போகாதோ ! (ஓ)

**அநுபல்லவி.**

ஆ ! ஆ ! இவருடைய அருமைச் சீடனையிங்கு
அதிகம் புகழ்ந்தாரே ! அடைந்திடவே பங்கு (ஓ)

**சரணங்கள்.**

எண்ணி நூறுயிரம் எண்ணுமலவ்விதம்
இயம்புவான் நாள்தோறும் பொய்யே
மண்ணி லிவனைப்போலும் மாபாவியிலையென்று
மதித்தும் மறைப்பதேன் மெய்யே
விண்ணவர் முன்பாக விளம்பலாமோ இதை
ஒண்ணாது புகழ்ந்து உரைப்பதேனிக் கதை (ஓ)

பரதாரம் தனதெனப் பாவித்து அவர்கற்பைப்
பதைத்திட அழிக்குஞ் சண்டாளன்
வழியார்க்கொன்றீயாமல் மாநில மிசைழவே
வஞ்சகன் கொலையில் திண்டோளன்
அருநெறி நிற்போர்கள் அன்பவன் மேல் நாட்டி
பொருந்ாததையின்று புகன்றுரே பல்லைக் காட்டி (ஓ)

தனக்குச்சீடனானதாலோ அவனையேற்றிச்
சாற்றினுரிது வல்லோ வீரம்
புனைந்தொன்றைச் சொன்னாலும் பொருந்தவேண்டாமோவீணில்
புலம்பினுரிதுவென்ன தீரம்
நினைப்பதற்கரிதான சிந்தை வஞ்சனை சூதே
அனைத்துமவனிடத்தில் அடுகிடைகொண் டதே (ஓ)

ஒருவன் மேன்மையடைய வேண்டுமாயின் வசிஷ்டருக்குச் சீடனாக வேண்டும். வசிஷ்டருக்குச் சீடனான ஒருவன் பஞ்சமா பாதகனா யிருந்தாலும் அவன் இந்திரன் ஸபையில் மேன்மை யடைவான். தன் சீடனை உயர்த்திப் பேசினால் தமக்கும் ஓர் பங்கு அகப்படுமென்று இவ்விதம் அப்பஞ்சமா பாதக னாகிய அரிச்சந்திரனைப் புகழ்ந்தார்.



வசிஷ்டர்.—சிவ-சிவா!

இராகம்-மோஹனம். தாளம்-ஆதி.—(படுபாவி மகன் றலைக்கேட்டாய்.)

**பல்லவி.**

இவரென்ன யோசனை பண்ணி வந்து
இகழ்ந்தாரிச்சபைதனை நண்ணி (இ)

**அநுபல்லவி.**

தவமுனி திரிசங்கு தனையனை தூஷித்தார்
சத்தியம்தப்பிப் பொய்யைத் தரணியில் போஷித்தார். (இ)

**சரணங்கள்.**

கோபத்தைக்கொண்டிதைச் சொல்ல வந்தீர்
குறியேதோ மறைத்தீர் நன்றல்ல
பாபத்துக் காளாகப் பதைத்தால் தெய்வம் சீறும்
பார்த்திபனைவீணே பழித்தல் நீதியோ கூறும் (இ)

அரசனை யிகழ்ந்தென்ன வாகும் வாய்
அக்னியால் வெந்து போகும்
தரணியிலவனைப்போல் சற்புத்திரனிலை யென்று
தாமறிந்த பின்னும் சாற்றிலீரிது நன்று (இ)

ஏ ! விஸ்வாமித்திரா ! துற்செய்கையின்றி நற்செய்கைகளே நிறைந்து மெய்யே பேசுகின்ற அரிச்சந்திரனைக் கேவலமாகப் பேசிய உன்வாயும் வேகவில்லை ! உன்னுடைய மனமும் வேகவில்லை ! இவ்வீனான வார்த்தை சொன்ன நீயும் வேக வில்லை ! இதனால் தெய்வமும் உன்னுடன் கூடிக்கொண்டது போல் காண்கிறது.

விஸ்வாமித்திரர்.—ஏ ! வசிஷ்டா ! பொய் சொன்ன உன் வாயில் புழுக்கள் புழுக்குமே யல்லாமல் மெய்பேசிய என்வாய்வேகாது!

வசிஷ்டர்.—(எழுந்து) அடா ! நீ என்ன சொன்னாய் ?

விஸ்வாமித்திரர்.—(எழுந்து) அடா ! நீ என்ன சொன்னாய் ?

இந்திரன்.—(எழுந்துவந்து) ஆ ! ஆ ! தவத்திலுயர்ந்த நீங்கள் இவ் விதம் கடுங்கோபங்கொள்ளலாகுமா ? நீங்கள் கோபங்கொள் ளாமல் உட்காருங்கள் (இருவரும் உட்காரல்). நீங்கள் இரு

வரும் மாறுபடச் சொல்லுவதால், உங்களிருவரில் யார் சொல்வது மெய்யென்று கண்டறிந்தால், தோற்றவர்கள் என்ன செய்யவேண்டுமென்பதைத் தெரிவிக்கவேண்டும்.

வசிஷ்டர்.—நான் சொல்லியது தவறென்று இந்த விஸ்வாமித்திரன் மெய்ப்பித்து விட்டால், அப்பொழுதே நான் என் தவமெல்லாம் இழந்து தாழ்ந்த புலைச்சேரிக்குப் போய்த் தலையோட்டிலே பிச்சைவாங்கி யுண்டலைந்து யமலோகத்துக்குத் தனித்துப் போகக்கடவேன். இது சத்தியம்!

நாரதர்.—(*Aside*) நாம் இந்த ஸமயத்தைக் கைவிடக்கூடாது. இரண்டு பேரையும் மூட்டிவிட்டே வேடிக்கை பார்க்கவேண்டும். (விஸ்வாமித்திரரைப் பார்த்து) விஸ்வாமித்திரரே! நீரென்ன வதிஷ்டருக்குத் தோற்றுப்போனவரா! இல்லையே! நீர் அரிச்சந்திரனைப் பொய்யனென்று மெய்ப்பிக்காவிட்டால் உம்முடைய சபதமென்ன?

விஸ்வாமித்திரர்.—நான் அந்த வசிஷ்டனைப்போல் பெரிய சபதம் செய்யமாட்டேன். வசிஷ்டனுடைய சொல் நிலைநிற்குமானால் நான் செய்திருக்கிற தவத்தில் பாதிக்குக்குறையாமல் அவ்வரிச்சந்திரனுக்குக் கொடுப்பேன். இது சத்தியம்! இது சத்தியம்!

நாரதர்.—தேவேந்திரா! இவர்கள் செய்த சபதம் போதுமானது. நான் இவ்விடத்தில் நடந்த ஸமாசாரங்களை அரிச்சந்திரனிடம் சொல்லிவிடுவேன் என்ற சந்தேகம் இவர்கள்கொள்ளுவார்கள். ஆனதால் விஸ்வாமித்திரர் உண்மையைக் கண்டு வருமளவும் தேவர்களுடைய காவலிலிருப்பேன். விஸ்வாமித்திரரே! நீர் இவ்விடத்தில் சொல்லியதை மெய்ப்பிக்க உம்முடைய வல்லமையால் அரிச்சந்திரனை சோதிக்க வேண்டியதைச் செய்யும்.

விஸ்வாமித்திரர்.—ஆம்! ஆம்! நாரதமாமுனியே! நான் ஒருவிநாடிக்குள் அரிச்சந்திரனை ஆயிரம் பொய்சொல்லச் செய்கிறேன் என் சமர்த்தைப் பாரும். நான் போய்வருகிறேன் தேவேந்திர மஹாராஜனே!

இந்திரன்.—போற்றி! போற்றி! விஸ்வாமித்திரமாமுனியே!

விஸ்வாமித்திரர்.—வாழி! வாழி! [விஸ்வாமித்திரர் போகல்.]



இந்திரன்.—அரிச்சந்திரனைப்பொய் சொல்லும்படி நிர்ப்பந்திக்க விஸ்வாமித்திரர் அவனுக்கென்னென்ன துன்பங்கொடுப்பாரோ தெரியவில்லை.

வதிஷ்டர்.—தேவேந்திரா! அரிச்சந்திரனுக்கு விஸ்வாமித்திரன் என்ன கெடுதி செய்தபோதிலும் அவன் சத்தியந்தவறான்.

---

## Scene 2.—Front Forest. விஸ்வாமித்திரர், முனிவர்.

[விஸ்வாமித்திரர் தோன்றல்.]

ஆ! ஆ! நான் என்ன செய்துவந்தேன்.

இராகம் - மோஹனம். தாளம் - ஆதி. (ஜனு.பாவிம்ப.)

பல்லவி.

கோபம் பொல்லாதெனக் கூறுவதை யறிந்தேன்
கொடுமை புரிந்தேனே (கோ)

அநுபல்லவி.

பூபாலர்களுக்கெல்லாம் புரவலன் மேலோனே
பொய்சொல அறிந்திலன் புண்ணியத்திலுயர்ந்தோன் (கோ)

சரணம்.

சுரர்பதி முன்னுகத் துடிதுடித்தரசனை
தூஷித்தேன் உலகமென் சொலுமென்பதறியாது
அருமை முனியின் வார்த்தை அவமதித்துக்கொதித்து
அநியாயம் பேசினேன் அரகரா! என்செய்வேன்! (கோ)

நான் அரசனுகவிருந்து என் நூறுபிள்ளைகளுடன் வனவேட்டைக்கு வந்தபொழுது என்பிள்ளைகளைத் தன் தவ வலிமையால் எரித்து நான் விட்ட பாணங்களைத் தண்டால் தடுத்த வசிஷ்டனை நான் பார்க்கும்பொழுதெல்லாம் கோபம் அதிகரிக்கிறது. அதனால் மெய்யே உருவாகக்கொண்ட அரிச்சந்திரனைப் பொய்யனென்று சொல்லவேண்டியதாயிற்று. இனிமேல் என்னசெய்ய விருக்கிறது? எவ்விதமும் அரிச்சந்திர

னைப் பொய்சொல்ல நிர்ப்பந்தப்படுத்த வேண்டியதே ! வசிஷ்டனை வெல்லவேண்டிய ஸமயம் கிடைத்திருக்கிறது. நம்முடைய வல்லமையால் அரிச்சந்திரனைப் பொய்யனாக்கிவிட்டால் வசிஷ்டன் தோல்வியடைவான். நாம் மேன்மை யடையலாம். அதோ ரிஷிகூட்டம் வருகிறது. நாம் இந்திரன் ஸபையில் நேரிட்டதை மறைத்தே சொல்லவேண்டும்.

[ரிஷிகள் தோன்றல்.]

ரிஷிகள்.—நமஸ்கரிக்கின்றோம் முனிநாதா !

விஸ்வாமித்திரர்.—வாழி ! வாழி ! முனிவர்களே !

ரிஷிகள்.—ஸ்வாமி ! தேவரீர் தேவலோகம் போயிருந்தீரே ! அவ்விடத்தில் ஏதாகிலும் விசேடமுண்டா ?

விஸ்வாமித்திரர்.—முனிவர்களே ! ஒரு விசேடமுமில்லை. முனிவர்கள் செய்யக்கூடிய யாகங்களில் அருமையான யாகமொன்றைச் செய்வதாகக் குறிப்புக்கொண்டு வந்திருக்கிறேன். அது விஷயத்தில் நான் சொல்வதொன்றிருக்கிறது. அதை நீங்கள் கேட்க ஸம்மதிப்பீர்களாகில் அனுகூலமாகும்.

ரிஷிகள்.—முனிநாதா! தாங்கள் தகாத காரியமொன்றைச் சொன்னாலும் நாங்கள் அதைத்தடுக்க வல்லவர்களோ?

விஸ்வாமித்திரர்.—நான் உங்கள் வார்த்தையைக்கேட்டு அதிகம் ஸந்தோஷமடைந்தேன். கொடுப்பதே தொழிலாக உடைய அரிச்சந்திரனிடம் சென்று நான் செய்யப்போகும் யாகத்துக்கு நான் கேட்குந் திரவியத்தை அவனை எவ்விதமாவது கொடுக்கும்படி ஸம்மதப்படுத்தி வரவேண்டும்.

ரிஷிகள்.—அவ்விதமே செய்து வருவோம். போற்றி ! போற்றி ! போய் வருகிறோம்.

விஸ்வாமித்திரர்.—வாழி ! வாழி ! போய்வாருங்கள்.

[ரிஷிகள் நீங்கள்.]

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரன் திரவியங்கொடுக்க ஸம்மதித்தால் அதுவே அவனைப் பொய்யனாக்கிவிடும்.

[விஸ்வாமித்திரர் நீங்கல்.]



## Scene 3.—Interior. அரிச்சந்திரன், மந்திரிகள்.

இராகம்-பியாக். தாளம்-ஆதி.

பல்லவி.

பரிதிமரபில் வரும் பார்த்திபாமெய்யே
உருவாகவந்த உன்னடிபோற்றி ! (ப)

அநுபல்லவி.

அருமறை முறைப்படி அரனைத்துதிக்கும்
திரிசங்கு ஈன்ற செல்வனே போற்றி ! (ப)

சரணம்.

மன்னுயிரனைத்தையும் மதித்துத் தன்னுயிராய்
மகிழ்வோடு காக்கும் மலரடி போற்றி
துன்னலர் மாளவே சுடர்படைதாங்கிய
ஸுந்தரரூபனே துணையடிபோற்றி. (ப)

அரிச்சந்திரன்.—நமது நாட்டிலுள்ள தேவாலயங்களிலெல்லாம்குறைவறப்பூஜை நடந்தேறி வருகிறதா மந்திரி ஸத்தியகீர்த்தி ?

சத்தியகீர்த்தி.—யாதொரு குறைவின்றி உத்ஸவங்களோடு நடந்தேறி வருகிறது மஹாராஜனே!

அரிச்சந்திரன்.—குடிகள் மனங்களிக்கும்படி வேண்டிய காலத்தி மழை பெய்கிறதா மந்திரி ?

சத்தியகீர்த்தி.—மறையோர்கள் செய்யும் யாக விசேடத்தால் குடிக மனம் எக்களிப்படைய மழை பெய்கிறது மஹாராஜனே !

அரிச்சந்திரன்.—நமதாளுகைக்கடங்கிய அரசர்கள் பகுதிகளை க் மாகக் கட்டிக்கொண்டு வருகிறார்களா ?

சத்தியகீர்த்தி.—தேவரீருடைய ஆக்ஞைக்கஞ்சிப் பகுதிகளை மாகவே கட்டி வருகிறார்கள்.

[ரிஷிகள் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—(எழுந்துநின்று) போற்றி ! போற்றி ! முனிவர்களே ! ஆசனத்திலமருங்கள்.

ரிஷிகள்.—வாழி ! வாழி ! அரிச்சந்திரா (யாவரும் உட்காரல்.)

அரிச்சந்திரன்.—(உட்கார்ந்து) ஸ்வாமிகளே! அடியேன் ஸபையைத் தேடிவந்த காரணம்யாதோ? தெரிவிக்கவேண்டுகிறேன்.

ரிஷிகள்.—அரிச்சந்திரா! விஸ்வாமித்திரமுனி ஒன்றை விரும்பி உன்னிடத்தில் கேட்கச் சொன்னார். அவர் விரும்பியதைக் கொடுக்க நீ ஸம்மதப்படுவாயானால் அதைச் சொல்லுகிறோம்.

அரிச்சந்திரன்.—முனிநாதரே! உங்களுக்குக் கிட்டாததாய் எங்களுக்குக்கிட்டுவதானால் கெடுதி வருகிறதானாலும் நல்லதே! விஸ்வாமித்திரர் விரும்பியதைக் கொடுக்க அரசர்களாகிய நாங்கள் தடைசொல்லமாட்டோம். ஆனதால் விஸ்வாமித்திர மாமுனி வேண்டியதைச் சொல்லவேண்டுகிறேன்.

ரிஷிகள்.—ஒருவராலும் செய்தற்கரிதான யாகமொன்றைச் செய்ய யோசித்து அந்த யாகத்தைச் செய்யப் பொருள் கொடுப்போர் யாரென யோசித்து உன்னையன்றி வேறொருவர் கொடுக்க முடியாதென அறிந்து உன்னிடத்தில் பொருள் கேட்க விஸ்வாமித்திர முனி எங்களை அனுப்பினார்.

அரிச்சந்திரன்.—ஸ்வாமிகளே! உங்களுக்குத் திரவியங் கொடுப்பது எனக்கு நீதியே! அப்பா! சத்தியகீர்த்தி! முனிவோர்களுக்கு வேண்டிய திரவியத்தைக் கொண்டுவருவாய்.

ஷிகள்.—அரிச்சந்திரா! எங்களுக்குத் திரவியம் இப்பொழுது வேண்டாம். விஸ்வாமித்திரமுனியாகம் செய்யத் தொடங்கும் பொழுது நாங்கள் வந்து பெற்றுக்கொள்ளுகிறோம். நாங்கள் போய் வருகிறோம்.

ிச்சந்திரன்.—தங்களுடைய இஷ்டம்போல் செய்யலாம். போற்றி! போற்றி! முனிவோர்களே!

கள்.—வாழி! வாழி!

[ரிஷிகள் நீங்கல்.]

சந்திரன்.—மந்திரிமார்களே! விஸ்வாமித்திரர் விரும்பிய திரவியத்தை நாம் கொடுப்போமானால் அதனால் நமக்குப் பெரும் புண்ணியம் சேரும்.

சத்தியகீர்த்தி.—ஆம்! மஹாராஜனே!



[விஸ்வாமித்திரர் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—ஆ! ஆ! விஸ்வாமித்திர மாமுனியா!

(எழுந்துவந்து முழங்காலிலிருந்து சொல்லல்.)

இராகம்-சஹானா தாளம்-ஆதி.—(ரகுபதே ராமா.)

பல்லவி.

செங்கமலப்பாதா சீரடிதாதா (செ)

அநுபல்லவி.

தங்குபுகழ் மனங்கசிந்து இன்று தந்தீர்தரிசனைவந்து (செ)

சரணம்.

முற்பிறப்பில் செய்தவமோ மூதறிவோர் செய்தபுண்ணியமோ
முனியே அறியே னென்னமோ.
அற்பனைத் தேடிவந்தீரையனே. அரனைத்துதிக்கும் மெய்யனே!
அறைவீர் கருத்தை வேதனே! அடிவணங்கினேன் நாதனே! (செ)

விஸ்வாமித்திரர்.—வாழி! வாழி! அரிச்சந்திரா! நான் அருமையான ஓர் யாகஞ் செய்யவேண்டி அதற்கு திரவியம் வேண்டுமென்று முனிவோரை யனுப்பிக் கேட்கச் சொன்னேன். நீ கொடுக்க ஒப்புக்கொண்டதாக முனிவோர்கள் வந்து சொல்லினர். ஸந்தோஷமடைந்து அந்த திரவியத்தை வாங்கிப்போக வந்தேன்.

அரிச்சந்திரன்.—மாமுனியே! இப்பொழுதே கொடுப்பேன். தேவரீருக் கெவ்வளவு வேண்டுமென்று சொல்லப் பிரார்த்திக்கிறேன்.

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! எனக்கதிகம் வேண்டாம். ஒரு யானையை நிறுத்தி அதன்மேல் ஒருவன் நின்று கவண்கல்லெறிந்து அக்கல் போகிற உயரம் பொன்கொட்டிக் கொடுக்க வேண்டும்.

அரிச்சந்திரன்.—மாமுனியே! தேவரீர் விரும்பிய விதமே கொடுப்பேன். அப்பா! மந்திரி! நீ விரைவில் யானையைக்கொண்டு வரச் செய்வாய்.

விஸ்வாமித்திரர்.—அப்பா! அரிச்சந்திரா! நீ கொடுக்க யோசித்த பொன் என்னுடையதாய்விட்டது. அது உன்னிடத்திலேயே அடைக்கலமாக வைத்தேன். நான் யாகம் செய்யத் தொடங்கும்பொழுது என் திரவியத்தை எடுத்துக்கொண்டு போகிறேன். நான் போய்வருகிறேன்.

அரிச்சந்திரன்.—தேவரீர் இஷ்டம்போல் செய்யலாம். போற்றி! போற்றி! மாமுனியே போய்வாரும்.

விஸ்வாமித்திரர்.—வாழி! வாழி! (*Aside*) அரிச்சந்திரன் என்கையிலகப்பட்டுக் கொண்டான். இனி வசிஷ்டனை வெல்வது அரிதல்ல. நான் காட்டிலுள்ள மிருகங்களைக்கொண்டு நாட்டைப் பாழாக்கிவிடச் செய்வேன்.

[விஸ்வாமித்திரன் போகல்.]

அரிச்சந்திரன்.—மந்திரிகளே! விஸ்வாமித்திரர் அருமையான தவம் புரிந்து எல்லா வரங்களையும் பெற்றிருப்பது போதாதென்று யாகமும் செய்யத்துணிந்தார்.

சத்தியகீர்த்தி.—ஆம்! மஹாராஜனே! தமது தவ்பலத்தாலல்லவா விஸ்வாமித்திரர் தேவரீருடைய தந்தை திரிசங்குமஹாராஜனுக்கு ஒரு ஸ்வர்க்கத்தை உண்டுபண்ணிக் கொடுத்தார்.

## Scene 4.—Street. குடிகள்.

[குடிகள் இருவர் தோன்றல்.]

1-வது குடிகள்.—அண்ணேன்! பார்த்தீரா! நமக்குள் ஒற்றுமையில்லையென்பது இதனால் விளங்குகிறதல்லவா. நமக்கு நேரிட்டிருக்கும் கெடுதியை அரசனிடத்தில் சொல்லிக்கொண்டால் அரிச்சந்திர மஹாராஜன் எதாகிலும் உதவி செய்வாரென்று நாம் பல தடவை அந்த மடையர்களுக்குச் சொன்னபொழுது ஆம்! ஆம்! என்று தலையை யாட்டிவிட்டு இப்பொழுது நம்மைத் தள்ளிவிட்டு ஒருவரும் வரவில்லையே, நாம் இருவர் மட்டும் போவதில் என்ன பிரயோசனம்.

2-வது குடிகள்.—ஆம்! தம்பி! என்னசெய்யலாம்! அவர்களெல்லாம் நாடகம் ஆடுவதைப்பார்க்கப் போகவேண்டுமென்று நேற்று



பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனதால் காலை எழுந்திருக்க நேரம் சென்றிருக்கும்.

1-வது கு.—ஆம்! ஆம்! பெண்பிள்ளைகளும் நாடகத்தில் சேர்ந்திருக்கிறதாகக் கேள்வி.

2-வது கு.—பெண்பிள்ளைகளில்லாமற் போனால் நாடகம் ரம்மியப்படாது. நேற்றிரவு ஆடிய நாடகத்தில் இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தார்கள் அதோ அவர்களெல்லாம் வருகிறார்கள்.

[குடிகள் யாவருந் தோன்றல்]

பெரிய கருப்பன்.—அடே! சுக்கிரமணியா ராத்திரி கூத்து எப்படியிருந்தது

சுக்கிரமணியன்.—ஆ! ஆ! மோகனசுந்தரத்தை பிரமன்வாகனமென்றே சொல்லவேண்டும். அவள் குரல் குயிலும் நாணும்படியிருந்தது. அவள் ஆட்டத்தைக்கண்டு யாவரும் புகழ்ந்தார்கள். நான் மற்றவர்களைப்போல் செய்யாமல் அவள் ஆடியதைப் பார்த்து அவ்விதம் ஆடக் கற்றுக்கொண்டேன்.

பெரியகருப்பன்.—அடே சொள்ளை முத்து! சுக்கிரமணியன் சொன்னதைக் கேட்டாயா?

மற்றவர்கள்.—நீ சொல்வதுபோல் செய்தால் அல்லவா நம்புவோம்

சுக்கிரமணியன்.—உங்களில் யாராகிலும் தாளம் தட்டினால் நான் ஆடுகிறேன்.

சொள்ளைமுத்து.—நான் தாளம் தட்டுகிறேன். அவள் பாடியதுபோல் பாடுகிறேன். நீ ஆடலாம். (பாடல், தாளம் தட்டல்.)

சுக்கிரமணியன்.—(ஆடல், பாடல்.)

பெரியகருப்பன்.—அடே போதும். நீ என்ன ஆடினபோதிலும் மோகன சுந்தரத்தைப்போல் ஆகமாட்டாய். அவளைப் பார்த்திருந்தால் பசிதீருமே!

சொள்ளைமுத்து.—அவளுக்கு முகமட்டும் கொஞ்சித்து ஸௌந்தரமாயிருந்து பல் வெளிப்படாமல் உள்ளடங்கியிருந்தால் அவளை

இரம்பை என்றே சொல்லலாம்.

பெரியகறுப்பன்.—அவளுக்குச் சதைப்பிடித்து சிவப் பாயிருந்தால் அதிகம் அழகாயிருப்பாள். மனோரஞ்சிதத்துக்கு சுரம் வந்து உடம்பு இளைத்தால் பார்க்க அழகாயிருப்பாள்.

1-வது குடிகள்.—அடே! இல்லாததெல்லாம் உண்டாயிருந்தால் சுந்தரமாகவே யிருப்பார்கள். அவர்களைக்குறித்துப் பேசுவதை நிறுத்தி நாம் அரசன், ஸபைக்குப் போகலாம் வாருங்கள்.

2-வது குடிகள்.—அண்ணேன்! அவர்கள் வாலிபர், சிலருக்குக் கலியாணமாகவில்லை, பெண்பிள்ளைகள் நாடகத்தில் சேர்ந்திருக்கிறார்களென்றறிந்தால் இவர்கள் அப்பெண்களுடைய முகதரிசனத்துக்காகச் சென்று வாயைத்திறந்து பார்த்திருப்பார்களென்பது நாம் அறிந்ததே தம்பிமார்களே! இன்னம் காலம் போக்கவேண்டாம். நாம் அரசனைக்கண்டு நம்முடைய குறைகளைச் சொல்லிக் கொள்ளலாம் வாருங்கள்.

யாவரும்.—ஆம்! ஆம்! போகலாம்.

[எல்லோரும் போகல்.]

## Scene 5.—Interior. அரிச்சந்திரன், மந்திரி.

[குடிகள் தோன்றல்.]

நமஸ்காரம் மஹாராஜனே!

அரிச்சந்திரன்.—வாழி! வாழி! குடிகளே! என்னகாரணத்தால் என் ஸபையைத் தேடிவந்தீர்கள்.

1-வது குடிகள்.—ஸ்வாமி! நாங்கள் என்ன சொல்லுவோம். நாங்கள் எக்காலத்திலும் பார்த்தும் கேட்டுமறியாத பலவித மிருகங்கள் அதிகம்தோன்றி நாங்கள் கஷ்டப்பட்டு இட்டபயிர்களை யெல்லாம் அழித்து நஷ்டஞ்செய்தும் குடிகளில் அனேகரைக் கொன்றும்விட்டன. நாங்கள் இரவிலும் பகலிலும் தலையை வெளிக்குக் காட்டப்பயந்து பதுங்கவேண்டியதா யிருக்கிறது. மஹாராஜனே! தேவரீர் வேட்டைக்கேகி அம்மிருகங்களை வதைக்காமற்போனால் நாங்கள் இவ்வூரில் குடியிருக்கவே முடியாது நாங்கள் பெரும் நஷ்டமடைந்திருக்கிறோம். (நமஸ்கரித்தல்)



அரிச்சந்திரன்.—பரமசிவன் திருவிளையாடல் அவ்விதமானால் நாமென்ன செய்யலாம். கங்கைபாயும் உங்கள் நிலம் பலனற்றுப்போனால் என்செய்வது? நீங்கள் கட்டவேண்டிய பகுதி இரண்டு வருஷத்திற்குக் கட்டவேண்டாம். மந்திரி! நாம் வேட்டைக்குப் போகவேண்டும். வேடர் வில்லியர் முதலானவர்களை வரவழைப்பதோடு இக்குடிகளுக்கு வேண்டியபொருளைக் கொடுத்தனுப்புவாய்.

சத்தியகீர்த்தி.—பாக்கியம் பிரபோ! என்னோடு வருவீர் குடிகளே!

குடிகள்.—நமஸ்காரம்! மஹாராஜனே! போய்வருகிறோம்.

அரிச்சந்திரன்.—வாழி! வாழி! போய்வாருங்கள்.

[குடிகள் மந்திரி போகல்.]

*Curtain falls.*

## Scene 6.—Interior. அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன்.

[அரிசசந்திரன் சந்திரமதி தேவதாஸன் மாறித்தோன்றல்.]

அரிச்சந்திரன்.—பெண்மணி! நமது நாட்டில் மிருகங்கள் அதிகரித்து நஷ்டம் விளைப்பதாகக் குடிகள் முறையிட்டுக்கொண்டார்கள். நான் சேனையோடு சென்று காட்டில் வேட்டையாடவேண்டும். ஆனதால் நீ

இராகம். பியாக் தாளம் ஆதி. (செலுவுடநீவு.)

| | | |
|---|---|---|
| விடை தருவாயே | வேல் நிகர்கரும் விழியாளே | |
| வேட்டையாடியே நான் | விரைவினில் வருவேனே. | (வி) |

சந்திரமதி.—

| | | |
|---|---|---|
| அடர்வனவேட்டை | அடியாளும் பார்த்திடவேண்டும் | |
| அழைத்தேகு மென்தனை | அண்ணலே மனமகிழ்ந்தின்று. | (அ) |

தேவதாஸன்.—

| | | |
|---|---|---|
| அன்னையை விட்டுநான் | அரைநொடி பிரிந்திருக்கேன் | |
| ஆதலால் நானுமே | அடர்வனம் வருவேனே. | (அ) |

அரிச்சந்திரன்.—பெண்ணே! நீ வருகிறேன் என்றதைக் கேட்ட தேவதாஸனும் வருகிறேன் என்று சொல்வதைக் கேட்

டாயா! வனத்தில்வந்து ஓடித்திரிய உங்களால் முடியுமா நீங்கள் வர வேண்டாம். அரண்மனையிலிருங்கள் நான் சேனையோடு போய்வருகிறேன்.

சந்திரமதி.—நாதா! வனத்தில் வேட்டையாடுவதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு நெடுநாளாக இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வதற்கிசைந்து எங்களை யழைத்துப் போக வேண்டும்.

தேவதாஸன்.—அப்பா! என்னை அழைத்துக்கொண்டு போகாமற் போனால் நீங்கள் வரும் பரியந்தம் அழுதுகொண்டே இருப்பேன்.

அரிச்சந்திரன்.—நீ அழுது கொண்டிருக்கவேண்டாம் என் கண்மணி! (முத்தங்கொடுத்தல்) நாம் யாவரும் போகலாம் வாருங்கள்.

[யாவரும் போகல்.]

# Act II.

## Scene 1.—Interior.—அரிச், சந், தேவ, மந்திரி—வேடர்; வில்லியர்; சேனை.

[யாவரும் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—மந்திரி! நான் சந்திரமதி தேவதாஸனோடு இங்கிருக்கிறேன். நீர் சேனைகளோடு சென்று நாட்டை யழித்துக்கொண்டிருக்கும் மிருகங்களை வேட்டையாடிக் கொன்றுவிடுங்கள்.

சத்தியகீர்த்தி.—பாக்கியம்! மஹாராஜனே! யாவரும் என்னோடு வாருங்கள்.

[அரிச்சந்திரன் சந்திரமதி தேவதாஸன் ஒரு பக்கம் போகல்.]

சத்தியகீர்த்தி.—வேடர்களே! அதோ நமக்கெதிரில் பெருங் கூட்டமாகப் புலிகள் வருகிறது தெரிகிறதா? நீங்கள்சென்றுஒன்றையும்விடாமல் கொன்றுவிடுங்கள்.

1-வது வேடன்.—அடே சாமி! அதோ கரடிகள் திடுதிடென ஓடி வருகிறது.

2-வது வேடன்.—அடே அப்பா! அங்கேபார்! யானைகள் தலையை ஆட்டிக்கொண்டு நிற்கிறது. எனக்கு பயமாக இருக்கிறது.

வீரப்பன்.—பயந்தவர்களெல்லாம் இங்கே யிருங்கள். தைரியமுள்ளவர்கள் எங்களோடு வாருங்கள்.

சத்தியகீர்த்தி.—ஒருவரும் பயப்படவேண்டாம். என்னோடு வாருங்கள். அந்த மிருகங்களை ஒரு நொடியில் கொன்றுவிடுகிறேன்.

[சத்தியகீர்த்தியோடு பலர் போகல்.]

1-வது வேடன்.—(போகிற சிலரைப்பிடித்து நிறுத்திக்கொள்ளல்) அடே அப்பா! பந்திக்கு முந்தவேண்டும் படைக்குப் பிந்தவேண்டும் என்பதை அறியாமல் ஓடுகிறீர்கள். கொஞ்சநேரம் இங்கிருந்து வேடிக்கை பாருங்கள். அதோ பார்த்தீர்களா! மந்திரியைப்

புலி துரத்திக்கொண்டு போகிறது. சபாஷ்! சபாஷ்! அவர் பாணத்தால் அது விழுந்தது.

2-வது வேடன்.—ஐயையோ! நம்முடைய வீரப்பனை அந்த யானை தும்பிக்கையால் தூக்கிக்கொண்டது, ஐயோ! அவனைத் தூக்கி நிலத்தில் அடிக்கப்போகிறது. அதோ மந்திரி பாணம் விட்டார். அது வீரிட்டுக்கொண்டு கீழே விழுந்தது. வீரப்பன் தப்பி ஓடிவருகிறான்.

[ஒருவேடன் ஓடிவரல்: அவனை யாவரும் பிடித்துக்கொள்ளல்: அவன் நெடுமூச்சுவிடல்.]

ஓடிவந்த வீரப்பன்.—அடே! அடே! என்ன சண்டை என்ன சமர்த்து!

1-வது வே.—என்ன சமர்த்தைக் காட்டினாய்.

வீரப்பன்.—விடாமல் சிரித்தல்.

2-வது வே.—சிரித்ததுபோதும். சொல் சொல்.

வீரப்பன்.—அடே! நாங்கள்போன வுடன் புலியையும் யானையையுங் கண்டு யாவரும் பயந்தார்கள். மந்திரியைப் புலிகள் துரத்தி வந்தன. அவைகளை அவர் பாணங்களை விட்டுக் கொன்றார். என்னை அசதியில் ஒரு யானை பிடித்துக்கொண்டது. நானும் அஞ்சாமல் அது என்னை வாரி நிலத்திலடிக்குமுன் அதன் தும்பிக்கையைப் பிடித்துத்தூக்கி கிருகிருவென்று சுழற்றி மற்றோர் யானை மேலடித்தேன். அந்த இரண்டுயானையும் மற்றோர் யானைமேல் விழுந்தது. ஆக மூன்று யானைகளும் செத்தது. (சிரித்தல்)

1-வது வே.—வீரத்தில் அப்பன் என்று உன்னையே சொல்லவேண்டும். உன்னை யானைதூக்கி நிலத்திலடிக்கப்போனதும் மந்திரி பாணம்விட்டு அதைக்கொன்றதும் நாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். அதிகம் சொல்லவேண்டாம்.

வீரப்பன்.—நான் முதலில் செய்ததை நீங்கள் பார்க்கவில்லைபோல் காண்கிறது.

2-வது வே.—அடே! வீரப்பா! உன் சமர்த்தை நாங்கள் அறிந்திருக்கிறோம். அதோபார் மந்திரிகளும் சேனைகளும் மிருகங்களையெல்லாம் கொன்றுவிட்டார்கள், நாம் இனி தைரியமாகப் போகலாம். வாருங்கள்.



1-வது வேடன்.—அடே! நில்! நில்! அதோ மலையைப்போல் ஒரு பன்றி வந்து எல்லாரையுங் கொல்லுகிறது.

2வது வே.—ரொம்பபேர் மாண்டுவிட்டார்கள். நாம் ஓடிப்போய் அரிச்சந்திர மஹாராஜனிடத்தில் சொல்லலாம் வாருங்கள்.

எல்லாரும்.—ஆம்! ஆம்! போகலாம்

[எல்லாரும்போதல்]

[அரசன் சேவகன் மாறித்தோன்றல்.]

சேவகன்.—ஸ்வாமி! வனத்திலுள்ள மிருகங்களையெல்லாம் மந்திரிகளும் சேனைகளும் வதைத்துத் திரும்பும்பொழுது, நாம் என்றும் பார்த்திராத மலையைப்போன்ற ஒரு பன்றி தோன்றி அனேகரைக் கொன்றுவிட்டது. இதைத்தெரிவிக்க தேவரிடம் ஓடிவந்தேன்.

அரிச்சந்திரன்—சபாஷ்! சபாஷ்! என்னசொன்னாய்.

இராகம்-அடாணா. தாளம்-ஆதி. (அடடா அடடா.)

பல்லவி.

புவியினிலொருபன்றி போர்செய்து பல்லுயிரைப்
போக்கிய தென்றது புதுமையே இவ்வுரை (ப)

அநுபல்லவி.

செவியாலிதைக்கேட்கத் தீவினையிருந்தது
சேனைகள் மாண்டபின் திரும்பேனே வதைக்காது (ப)

சரணம்.

பார்க்கிறேன் நானந்த பன்றியை வெல்லுவேன்
பாணங்களை விட்டுப் பதைத்திடக் கொல்லுவேன்
மார்க்கமிது வன்றியே வழியென்ன சொல்லுவேன்
வல்லுயிர் பெரிதென மதிக்காது செல்லுவேன்
மாநிலம் கொஞ்சவே தானவர்கெஞ்சவே
ஏனமுந் துஞ்சவே வானவரஞ்சவே
நானிதைச்செய்யாது ஞாலத்திலிருப்பேனோ
பானுகுலமுதித்த பார்த்திபனாவேனோ. (ப)

## Scene 2.—Forest. அரிச்சந்திரன் சேனைகளோடு.

[அரிச்சந்திரன் மந்திரிகளோடு தோன்றல். சேனைகள் படுத்திருக்கல்.]

அரிச்சந்திரன்.—(மூக்கின்மேல் கைவைத்து) சிவ சிவா! இதென்ன அநியாயம்! ஒரு பன்றி தோன்றி இவ்வளவு சேனையைக் கொன்றுவிட்டதே! இந்தத் தீமைக்கு என்னசெய்வேன்.

சத்தியகீர்த்தி.—மஹாராஜனே! நமது சேனைகளைக் கொன்ற பன்றியைப் பாரும்.

அரிச்சந்திரன்.—ஆம்! ஆம்! அதை விடக்கூடாது.

[யாவரும் போகல்.]

## Scene 3.—Front Forest. விஸ்வாமித்திரர்.

[விஸ்வாமித்திரர் தோன்றல்.]

நான் அனுப்பிய பன்றியை அடித்துத்துரத்திவிட்டான். ஆ! ஆ! (பெருமூச்சு விடல்.)

[இரண்டு நீச ஸ்திரிகள் தோன்றல்.]

நீச ஸ்திரீகள்.—நமஸ்கரிக்கின்றோம் தந்தையே!

விஸ்வாமித்திரர்.—வாழி! வாழி! நமது புத்திரிகளே! பெருங்குளக்கரைக் கருகில் அரிச்சந்திரன் வந்திருக்கிறான். நீங்கள் சென்று அவன் பரவசமாகும்படி பாடி யாடி அவன் வெற்றிக் குடையைக்கேட்டு வாங்கி வாருங்கள். அதைக்கொடுக்கத் தடை சொன்னால் உங்களை அங்கீகரிக்கச்சொல்லுங்கள். அவனை வெல்லுங்கள்.

நீச ஸ்திரீகள்.—தேவரீர் இஷ்டம்போலவே செய்து வருவோம். போற்றி! போற்றி!

விஸ்வாமித்திரர்.—வாழி! வாழி! போய் வெற்றியடைந்து வாருங்கள்.

[நீச ஸ்திரீகள் நீங்கல்.]



அரிச்சந்திரன் இப்பெண்கள் வலையிற்சிக்கினால் நம்முடைய சபதம் நிறைவேறும்.

[விஸ்வா-போகல்.]

## Scene 4.—Forest. அரிச்சந்திரன், சந்திரமதி, தேவ, மந்திரிகள், ரிஷி

[ரிஷிகள் தோன்றல்]

அரிச்சந்திரன்.—போற்றி போற்றி! முனிவோர்களே!

ரிஷிகள்.—வாழி! வாழி! அரிச்சந்திர மஹாராஜனே! நீ உன் சேனையோடு இவ்விடமிருப்பது கூடாது. விஸ்வாமித்திரருடைய ஆசிரமம் சமீபத்திலிருக்கிறது. அவர் உங்களைக் கண்டால் சபிப்பார். போய்விடுங்கள்.

அரிச்சந்திரன்.—முனிவர்களே! நாங்கள் அவ்விஸ்வாமித்திர முனிக்கு அடிமை. அவர் எங்கள்மேல் ஏன் கோபங்கொள்ளப் போகிறார். நாங்கள் அவர் விஷயத்தில் குற்றம் செய்திருந்தாலும், அக்குற்றத்தை மன்னிக்கக் கேட்டுக்கொண்டு நகரம் போய்ச்சேருகிறோம்.

ரிஷிகள்.—உங்களுடைய இஷ்டம். இங்கு நடக்கப்போகிறதை விரைவில் அறிவீர்கள்.

[ரிஷிகள் நீங்கல்.]

சந்திரமதி.—நாதா! நாம் இவ்விடத்திலிருந்தால் விஸ்வாமித்திர முனி சபிப்பாரென்று முனிவர்கள் சொல்லிப்போனதால், நாம் இவ்விடத்தை விட்டுப் போவதே உத்தமம்.

அரிச்சந்திரன்.—பெண்மணி! விஸ்வாமித்திர முனியை நாம் அறிவோம் ஆனதால் அவர் நமக்கோர் கெடுதியையும் செய்யார். அதோ பாருங்கள். இரண்டு சந்திரன் நடந்து வருகிறதுபோல் இரண்டு ஸௌந்தரமான பெண்கள் வருகிறார்கள்.

[நீச ஸ்திரிகள் தோன்றல்]

நீசஸ்திரீகள்.—போற்றி! போற்றி! மஹாராஜனே!

அரிச்சந்திரன.—வாழி! வாழி! நீங்கள்யார்? நீங்கள் எங்கிருப்பவர்கள்?

நீசஸ்திரீ.—பூமாலைபணிந்த கோமானே! நாங்கள் இவ்வனத்தி லிருப்பவர்கள். உம்மைப் பார்க்கவேண்டு மென்கிற ஆசை யோடு வந்தோம். ஞானமும் அதற்கேற்ற அனுஷ்டானமுமில் லாத இழிவான சாதியில் நாங்கள் பிறந்தாலும், ஸங்கீதமும் நடனமும் கொஞ்சம் தெரியும். நாங்கள் பாடுவதைக் கேட்க வேண்டுகிறோம்.

இராகம்-பார்சிமெட்டு. தாளம் ரூபகம். (தலதன சரண ஜகத்.)

காமன்கயணையால் கடுந்துயரடைந்தோம்
கடைக்கண் பாராய் கன்னியைக்காராய்
கண்டுமையல் கொண்டுவாடி
தொண்டு செய்ய வந்தோமோடி
கருணைசெய்வீர் கதியிது
பெருமையாகும் பேதைமீது
அடவியில் துணையிலை
இடர்தனைத் தீர்த்திடவே
சுடர்முடி தரித்தவா
தடைசெய வேண்டாமே

அரிச்சந்திரன்.—பெண்களே! நீங்கள் நன்றாய்ப்பாடுகிறீர்கள். நன் றாய் ஆடுகிறீர்கள். உங்களுக்கு வேண்டிய இரத்நாபரணங்கள் இதிலடங்கியிருக்கின்றன: இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நீசஸ்திரீ.—ஆபரணங்களையும் திரவியங்களையும் பெற்றுக்கொள்ள நாங்கள் வரவில்லை. நாங்கள் விரும்பிவந்த வெகுமானமாவது— நீர் வெற்றிமுடி சூடிக்கொள்ளும்போது பிடிக்கிற வெண்கொற் றக்குடையை எங்களுக்குக் கொடுப்பீர் மஹாராஜனே.

அரிச்சந்திரன்.—நீதியோடு அரசாட்சி செய்துவந்த சூரியகுலத் தரசர் தலைமுறைதலைமுறையாகப் பிடித்துவருகிற வெற்றிக் குடையை நீங்கள் கேட்பதும் நான் கொடுப்பதும் கூடாத காரி யம். அதைவிட்டு இவ்விடத்தில் உங்கள் கண் காணப்படுவ தெதையாகிலும் கேட்டால் நான் கொடுப்பேன்.

நீசஸ்திரீ.—மஹாராஜனே! நாங்கள் விரும்பிவந்ததைக் கொடுக்கத் தடைசொல்லுகிறீர். உம்மைக் கண்டவுடன் உம்மை அடைய வேண்டுமென்கிற ஆசை அதிகரித்துவிட்டது. ஆனதால்



இராகம்-சாவேரி. தாளம்-சாபு. (வருத்தாதே மன்மதா:)

மன்மதன் போர்செய வந்தழைக்கிறான் (ம)
கன்னல் வில்வளைத்துக் கடுங்கணை தூவியே
என்னைத்துன்பம்செய எந்தலை துணிந்தானே (ம)
திங்கள் குடையுடையோன் செருக்கழிய
எங்களைக்கண்பாரும் இதுதரு வேந்தே (ம)
கடலொலி முரசம் காது செவிடுபடுங்
கொடுமையை யறிந்துங் கூறுது தைரியம். (ம)

நீசஸ்திரீ.—அரசே! எங்களுடைய துன்பத்தைக் கண்டபின் இன் னும்

இராகம்-கமாஸ். தாளம்-ரூபகம். (தலசிதாளகவேனே.)

சோதனை செய்யவேண்டாமே! ஓ! துரையே! து - து. (சோ)

வேதனையாகுதே மெலிந்துயிர் போகுதே
வேள்தொடும் பாணம் பொல்லாதே ஓ! - துரையே - து - து. (சோ)

இத்தருவாருமே என்துயர் தீருமே!
எண்ணரு புண்ணியம் சேருமே - ஓ! துரையே - து - து. (சோ)

ஆசைப்பட்டு வந்தோம் அச்சத்தையே தந்தோம்
அனங்கனம்பாலே நொந்தோம். ஓ! துரையே! து - து. (சோ)

மஹாராஜனே! நாங்கள் கொண்ட கருத்தை முடித்து அனுப்ப வேண்டும். தடை சொல்லவேண்டாம்.

அரிச்சந்திரன்.—சிவ சிவா! இம்மாதர்கள் இவ்விதம் சொல்லத் துணிந்தது யாதுகாரணம்? ஏ! பெண்காள்! நீங்கள் என்னி டம் சொல்லக்கூடாததைச் சொல்லத்துணிந்தீர்கள். இனி விநாடியும் என் முன் நில்லாமற் போய்விடுங்கள்.

நீசஸ்திரீ.—மஹாராஜனே! எங்கள் எண்ணத்தைப் பூர்த்திசெய் யாமல் எங்களைப் போகச்சொல்வது தருமமல்ல, எங்களை யா தரியும்.

சத்தியகீர்த்தி.—ஏ! நீசஸ்திரிகளே! நீங்கள்

இராகம்-கல்யாணி. தாளம்-சாபு. (இவள்தான் இவள்தான்.)

பல்லவி.

சூதை மனதிலெண்ணி    தோன்றலைக்கேட்டீரே
தோகையரே செல்வீரே    (சூ)

அநுபல்லவி.

வாதுபேசிட வந்தீர்!    மன்னனைக்கண்டு நொந்தீர்
கோதிலான் குடைகேட்கத்துணிந்தீர்! கொடுமைபேசி பழியணிந்தீர்.(சூ)

சரணம்.

அரசனிடத்திலே    அடைந்திடவே குடை
அறியாமல் கேட்டீரே    அதைக் கொடுக்கத் தடை
வரிசையாயுமைச்சேர    வழங்கினீர் கொடி யிடை
மாதரே ஏற்காது    மன்னன் விடார் நடை
சரசமொழியாடி    சண்டாளிகளே வாடி
துருசாப்பல சொன்னீர்    துடிதுடித்துத் தேடி    (சூ)

அடி! நீசஸ்திரிகளே! நீங்கள் ஏதோ சூதை மனதிற் கொண்டு அரசனிடத்தில் சொல்லக்கூடாததைச் சொன்னீர்கள். இனி காலத்தைக் கழிக்காது போய்விடுங்கள்.

நீசஸ்திரீ.—மஹாராஜனே! நீர் எங்கள்மேல் கிருபைசெய்யாமற் போனால் நாங்கள் அதிகங் கவலையடைவோம். ஆனதால் தடை சொல்லவேண்டாம்.

சத்தியகீர்த்தி.—ஏ! துஷ்டே! நீங்கள் போகமாட்டீர்களா! (சாட்டையாலடித்துத் துரத்திக்கொண்டுபோய் வெளியில் தள்ளல்.)

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! அந்த நீசஸ்திரிகள் என்ன காரணத்தால் நம்மையடுத்துக் கேட்கக் கூடாததைக் கேட்டார்கள்?

சத்தியகீர்த்தி.—ஏதாகிலும் சூதை மனதிலெண்ணியே கேட்டிருக்க வேண்டும்.

சேவகன்.—ஸ்வாமி! விஸ்வாமித்திரமாமுனி மஹா கோபத்தோடு வருகிறார்.

அரிச்சந்திரன்.—விஸ்வாமித்திர மாமுனியா! நாம் எதிர்கொண்டழைக்கலாம்.



**Scene 5.—Front Forest.** அரிச்சந்திரன், மந்திரி, விஸ்வாமித்திரர்.

[அரிச்சந்திரன் விஸ்வாமித்திரர் மாறித்தோன்றல்]

அரிச்சந்திரன்.—போற்றி! போற்றி! முனிநாதா!

விஸ்வாமித்திரர்.—ஆ! ஆ! கொடிய

இராகம் கமாஸ். தாளம் ஆதி. (சுந்தரா நீங்கள்.)

பல்லவி.

பாவி நீயோ இதைச்செய்யத்துணிந்தாய்    வனம்
மேவி மிருகங்களை வீணாய்க் கொலைபுரிந்தாய்    (பா)

அநுபல்லவி.

கன்மனங்கொண்டிங்கு வந்தென்    கன்னிகளையடித்தாயே
தன்மமோ பன்றியையும்    தான்மடித்    தாயே
வன்மைகெட உன்னைக்கொன்று    மனங்களிப்பே    னின்று
மன்னவனென்று கர்வம்    மாநிலத்தில் கொண்டாய் நன்று(பா)

அரிச்சந்திரன்.—தேவரீர் இடிஇடித்ததுபோல் கடுங்கோபத்தோடு என்னுடன் போர்செய்வதற்கு நீகைண்டனை சிவனும் நானல்ல. கருங்கடல் நிறம்போன்ற விஷ்ணுவும் நானல்ல. பிரமதேவனும் நானல்ல. புழுவிலுங் கடையேனான நானே தேவரீருடைய கோபத்துக்காளானவன். இக்கோபத்தைவிட்டு என்னை ஆதரியும். (முழங்காலிலிருந்து கால்களைப் பிடித்துக்கொள்ளல்.)

விஸ்வாமித்திரர்.—அடா! பாவி! நீ செய்யவேண்டிய கொடுமையை எல்லாம் செய்து இப்பொழுது பஞ்சைவேடம் போடுகிறாய். என் கால்களை விடு. (கால்களை உதறிப் பிடுங்கி முடியை யுதைத்து தூரத்தில் நின்று) அடே! உன் கர்வத்தை அடக்காமல் விடேன்.

அரிச்சந்திரன்.—(எழுந்துபோய் விஸ்வாமித்திரர் கால்களைப் பிடித்துக்கொண்டு) ஐயோ! நான் என்னசெய்வேன்!

இராகம் தேசிகதோடி. தாளம் ரூபகம். (தாமதம் செய்யாமலே.)

மாமுனியே என்னதீமை மாபாவி நானிழைத்தேன்
சாமியுமது மலர்த் தாள்வருந்தப் பார்த்திருந்தேன்
நேமி சூழுலகில்யாரும் சிந்தைகூறவே துணிந்து (மா)
முடியில் நிறைமணிகள் முட்கள்போலவே தைத்து
அடியை வருத்திடவே அபசாரம் செய்தேனே (மா)
பாதம்சிவந்திருக்கப் பார்த்தேனே பாவியான்
நாதனே என்குற்றத்தை ஞாலத்தில் பொறுப்பீரே. (மா)

ஆ! ஆ! இந்தக் கொடுமைக் கென்செய்வேன்! என்முடியில் பதித்தகல்கள் தேவரீருடைய திருவடிகளில் பட்டு என்ன துயரடைந்தீரோ? தேவரீருடைய தாமரைமலர் போன்ற பாதம் அதிகம் வருந்தியதோ? ஆ! ஆ! முனிநாதா தேவரீருடைய வருத்தத்தை நான் எவ்விதம் தீர்ப்பேன்!

விஸ்வாமித்திரர்.—அடா! துஷ்டா! நான் அனுப்பின மிருகங்களைக் கொன்றாய். பன்றிக்குத் துன்பமுண்டாக்கினாய். ஆகாயத்தை அளாவிக்கொண்டிருந்தஇந்தச்சோலையையுங் கெடுத்தாய். நான் அருமையாய்ப் பெற்ற பெண்களையும் அடித்தாய். பாவச்செய்கையே செய்யும் புலியானது பசுவின் தோலைப் போர்த்துக் கொண்டிருப்பதுபோல் நீ இங்குவந்து இக்கொடுமைகளைச் செய்தாய்.

அரிச்சந்திரன்.—மாமுனியே! நான் அறியாமல்

இராகம் கேதாரம் தாளம் ரூபகம். (பேசாதிருப்பதென்ன)

பல்லவி.

செய்தபிழை பொறுப்பீர் தெரியாமல் நானிழைத்த (செ).

அநுபல்லவி.

சொய்திடுவீரென்தன் மைசகளையே நீர் கொடியிடையார் வருந்தஇன்று(செ)

சரணங்கள்.

உமது மக்களென உண்மையாக வறியேன்
சமித்துக்கோபமாதரிக்கவே தஞ்சமடைந்தேன்அஞ்சத்துணிந்து (செ)
நீர்விடுத்த பன்றியென்று நினைத்திருந்தாலதையே
யார்சொல்லினும் யான்வருத்தேனே அனைத்தையும் எனைப்பொறுத்து (செ)



ஸ்வாமி! தேவரீர் அனுப்பிய மிருகங்களென நான் அறிந்திருந்தால், அம்மிருகங்கள் என் நாட்டை யழித்தாலும், நகரத்தைக் கெடுத்தாலும், பூஞ்சோலைகளைத் தொலைத்தாலும், என்னுடைய வம்சம் அற்றுப்போகச்செய்தாலும், என் பெருமையைக் குலைத்தாலும், கொன்றிருப்பேனா! என்னை மன்னிக்க வேண்டும் மாமுனியே!

விஸ்வாமித்திரர்.—மிருகங்கள் நாட்டையழித்ததால் அவைகளைக் கொன்றாய்! என்புத்திரிகள் உன்னெதிரில் ஆடிப்பாடி உன்னைச் சந்தோஷப்படுத்தியதற்கோ அவர்களை யடித்துத் துரத்தினாய்?

அரிச்சந்திரன்.—அப்பெண்கள் தேவரீருடைய புதல்விகளென்று அறிந்திலோம். அவர்கள் என்னிடத்தில் தகாதவார்த்தைகளைச் சொன்னதால் தள்ளிவிட்டோம். இக்குற்றத்தை மன்னிக்க வேண்டும் ஸ்வாமி!

விஸ்வாமித்திரர்.—கழுத்தை அறுத்துவிட்டு நான் கைதவறுதலாகச் செய்தேன் என்பதுபோலப் பேசத்துணிந்தாய். யாசகங் கேட்பவர்கள் மனம் சந்தோஷமடையச்செய்வது அரசர்களுடைய கடமை. அதவா அவர்கள் கேட்டதைக் கொடுக்கச் சம்மதமில்லாமற்போனால் அவர்களுக்கு இதம் சொல்லியனுப்புவதைவிட்டு அவர்களை யடித்துத் துரத்துகிறது நீதியா! அடா! படுபாவி! உன்னை என்னசெய்தால் என் மனங்குளிரும்.

அரிச்சந்திரன்.—மாமுனியே! தேவரீருடைய செல்வப் புதல்விகளை அடித்த கைகளையும், கோபித்துப் பார்த்த கண்களையும், இவைகளைச் செய்ய ஆதாரமாகவிருந்த என்னுடலையும் சேதித்து மனங்குளிரும்.

விஸ்வாமித்திரர்.—அடே! நீ மிருகங்களைக் கொன்றதும், பன்றியை வருத்தியதும், என் பெண்களை யடித்ததும் பெரிய குற்றமே! நான் பொறுத்துக்கொள்ள வேண்டுமாயின் என்பெண்களை நீ விவாகம் செய்துகொள்ளவேண்டும். அதைத் தடுத்தால் நானுன்னைச் சபிப்பேன்.

அரிச்சந்திரன்.—ஸ்வாமி! தேவரீருடைய கோபந்தீர நீர் கொடுக்கிற சாபத்தைக்கொடும். உலகத்தில் யாராகிலும் நீதிக்கு விரோதமாகச்செய்யின் அதை விலக்கத்தக்க தேவரீர் இவ்விதம் சொல்

வது யாது காரணம்? நீச்ச சாதியாருடனே அரசர்கள் கூடுவது நியாயமா?

விஸ்வாமித்திரர்.—நீச்சனுன திரிசங்குமைந்தனே! நீச்சனுன நீ இப் பெண்களைக் கூடுவது நீதியல்லவோ!

அரிச்சந்திரன்.—வசிஷ்டரால் நீச்சனுக என் தந்தை பெற்ற சாபத்தை நீரே தீர்த்தருளினீர். இன்று தேவரீர் என்னை நீச்சனுக்க எண்ணியது யாதுகாரணம்?

விஸ்வாமித்திரர்.—முன் உன்தந்தை நீச்சனுனதை நீக்கின எனக்கு உன்னுடைய நீசத்வத்தை நீக்குதல் அரிதல்ல. நீ என் பெண்களைக்கூடி சுகத்தை யனுபவிப்பாய்.

அரிச்சந்திரன்.—மாமுனியே! நீர் என்னைத் தாழ்ச்சிசெய்தாலும் உம்முடைய கோபக்கண்ணுல் என்னைக் கொளுத்தினுலும் என்னைச் சிறு சிறு துண்டாக வெட்டியெறிந்தாலும் நீர் சொல்லுகிற சொல்லுக்கு உடன்படேன்.

விஸ்வாமித்திரர்.—அடே! அரிச்சந்திரா! உன்னைச் சபித்துவிடுவேன்! சபித்துவிடுவேன்!

அரிச்சந்திரன்.—நான் முன்சொல்லியதுபோல் தேவரீருடைய கோபந் தீர்ந்தால் அதுவேபோதும். நீர் கொடுக்கப்போகிற சாபத்தைக் கொடும். பெற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

விஸ்வாமித்திரர்.—என் புதல்விகளை விவாகம் செய்துகொள்ள மாட்டேன் என்கிற திருடனே! இழிவான தொழிலைச் செய்கின்ற புலையனுக்கு நீ அடிமையாகக் கடவாய்.

அரிச்சந்திரன்.—தான்பெற்ற பிள்ளை கொஞ்சிக்கொஞ்சிப் பேசும் மழலைச் சொல்லில் குற்றங்கண்டுபிடித்துத் தன் தனத்தில் நஞ்சைத் தடவி யூட்டினுல், அதைத் தடுப்பவர் யார்? கடல் வெப்பங்கொண்டால் அவ்வெப்பத்தை யடக்க வேறெங்கிருந்து குளிர்ந்த நீர் கொண்டுவரக்கூடும்? என்னைக் கோபித்துச் சாபங் கொடுத்தால் பயப்படாதே என்று வேறு யார் சொல்ல விருக்கிறார்கள்?

சந்திரமதி, தேவதாஸன், சத்தியகீர்த்தி.—(விஸ்வாமித்திரன் கால்களைப் பிடித்துக்கொண்டு,) மன்னனை. மன்னிக்கவேண்டும் மாமுனியே!



விஸ்வாமித்திரர்.—என்னைத்தாயுமென்பாய்! தந்தையுமென்பாய்! சகோதரனுமென்பாய்! உனக்குற்ற ஐஸ்வரியத்தைக் கொடுக்கிற தெய்வமுமென்பாய்! நீ என் மகளை விவாகஞ்செய்து கொண்டாலொழிய மன்னிக்கேன்.

அரிச்சந்திரன்.—மாமுனியே! மீண்டும்.

இராகம்-பியாக். தாளம்-ஏகம். (இன்னமுங்காணேனே.)

பல்லவி.

இப்படிச் சொல்லப்போமோ மாமுனியே!
என்னிடமே பரிந்து! தேடி! நாடி! (இ)

ஒப்பாத வார்த்தைகள் ஒறினீராகாது
ஓ! ஓ! இதென்மர்மமோ பொல்லாவர்மமோ! தர்மமோ! (இ)

சரணங்கள்.

தவத்திலுயர்ந்த முனியெனை ஏசி
சாற்றுதலிச்சேதியோ! ப்ரக்யாதியோ! நீதியோ! (இ)
பரஸ்திரிதாயென பாவித்திருக்கிறேன்
பகரவேண்டாமையனே! ஓ! தூய்யனே! மெய்யனே! (இ)
என்னுயிரையும் நகரும் நாடும்
நயக்கேட்கின் கொடுப்பேன்! இதைத் தடுப்பேன்! கடுப்பேன்! (இ)

விஸ்வாமித்திரர்.—அடே! அரிச்சந்திரா! என்ன சொன்னுய்? உன் நகரை நாட்டைக் கொடுப்பாயா?

அரிச்சந்திரன்.—ஆம்! மாமுனியே! தேவரீர் எதைக் கேட்டாலும் கொடுப்பேன்: அப்பெண்களை வேண்டாமென்று தடுப்பேன்.

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! நீ கொடுக்கிறேன் என்ற நாட்டையெனக்குக் கொடுத்துவிடு பார்க்கலாம்.

அரிச்சந்திரன்.—தடை சொல்லாமல்.

இராகம்-தேசிக. தோடி-தாளம். (போராளே நல்லதங்கா)

பல்லவி.

கொடுப்பேன் தடைசொலாது கோசிகரே நாட்டை
நேசமாயாளவே (கொ)

அநுபல்லவி.

தடுக்கேனே மாமுனியே தரணியாண்டது போதும் (கொ)

சரணம்.

பாராண்டு நான்பெற்ற பலன் போதும் அந்தப்
பட்டத்தைத்தாங்கியே பாசமாய்
நீராளக்கரிபரி நிதிமுதல் யாவும்
நிமிஷத்திலுமைச்சேர நித்தனே பரிந்து (கொ)

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! உன் நாட்டைக் கொடுப்பேன் என்று வேடிக்கையாகச் சொல்வதிற் பிரயோசனமில்லை. நீ கொடுப்பது உண்மையானால் உன்மனைவி மகன் ஜலம்விட நீ உன்னுடைய நாடு நகரம் யாவும் என்னைச்சேர தாரை வார்த்துக்கொடு.

அரிச்சந்திரன்—தேவரீருடைய இஷ்டம்போலவே செய்வோம். பெண்ணே சந்திரமதி! அப்பா தேவதாஸா! நீங்கள் ஜலம் விடுங்கள். (ஜலம் விடல். விஸ்வாமித்திரர் ஒருகை ஏந்தல்.)

இராகம்-பரசு. தாளம்-சாபு. (இந்தாவிபீஷணு லங்கா)

பல்லவி.

தந்தேன் முனிநாதா என்தனது ராஜ்யம் (த)

அநுபல்லவி.

சிந்தை மகிழ்ந்து சொந்தமாயாளவே (த)

சரணங்கள்.

நாடுமுள்ளதும் நீள் நகரும் மற்றதும் அரண்
வீடும் உற்றதும் தவ விஸ்வாமித்திரரே தந்தேன். த-த-த-(த)
ஆனைப்பந்தியும் எண்ணு அஸ்வக்கூட்டமும் பெருஞ்
சேனைமுற்றிலும் நீர் தேடியாளவே தந்தேன். த-த-த-(த)
அன்ன சத்ரமும் மாதர் ஆடுஞ்சாலையும் சுடர்
பொன்னும் பணியும் பாதம் போற்றிக்கொடுத்தேன். கொ-கொ-கொ.(த)

விஸ்வாமித்திரர்.—அப்பா! அரிச்சந்திரா! நீ நல்லவன். என் மனம் சந்தோஷமடைய உன் ராஜ்யத்தை யெனக்குக் கொடுத்துவிட்டாய். நான் உன்னுடைய நகரடைந்து அரிச்சந்திரன் தன் நாட்டை யெனக்குக்கொடுத்தான் என்றால் ஒருவரும் நம்பாமல் என்னை அடித்துத்துரத்திவிடுவார்கள். ஆனதால் நீயே வந்து யாவும் எனக்கு ஒப்புக்கொடுத்துப்போக வேண்டும்.



அரிச்சந்திரன்.—தேவரீருடைய இஷ்டம்போல் செய்துவருவேன்.

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! நான் அரசனுய் விட்டதால் இரதத்தில் ஏறிவருகிறேன். நீங்கள் நடந்து வாருங்கள்.

அரிச்சந்திரன்.—பாக்கியம் ஸ்வாமி!

*Curtain falls.*

## Scene 6.—Street. மந்திரிகள்.

[மந்திரிகள் தோன்றல்.]

ஒரு மந்திரி.—ஆ! ஆ! இதென்ன! யாரோ ஒருரிஷி இரதத்தில் ஏறிக்கொண்டு அரிச்சந்திர மஹாராஜன் அம்மன் சந்திரமதியையும் தேவதாஸனையும் நடத்தித் தானும் நடந்து வருகிறார்.

மற்றொரு மந்திரி.—இரதத்தில் ஏறிவருபவர் விஸ்வாமித்திரர்போல் காண்கிறது.

மந்திரி.—ஆம்! ஆம்! விஸ்வாமித்திரரே இரதத்திலேறி வருகிறார். நாம் சென்று காரணத்தை யறியலாமா வாருங்கள்.

எல்லா மந்திரிகளும்.—ஆம்! ஆம்! போகலாம் வாருங்கள்.

[எல்லாரும் போதல்]

## Scene 7.—Interior. விஸ்-அரி-சந்-தே. & மந்திரிகள், சேவகன்.

[விஸ்வாமித்திரர், அரிச்சந்திரன், சந்திரமதி, மந்திரிகள் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—மாமுனியே!

இராகம்-கவாய், தாளம்-ரூபகம். (பூசுங்களபம்.)

திருமுடிதாங்கியே தேசத்தை முன்னாண்டோர்
தேடியே பொருள்வைத்த சாலை அதோ
தெரிகிறதே கேளும் திருமஞ்சனச்சாலை
சேர்ந்திருப்பது பூஞ்சோலை

அரனைவழிபடும் மண்டபம் நேரிலே
ஐயனே காணுது பாரீர் அது
அரிவையர் நடனம் ஆடுமரங்கமே
அன்னசத்திரமங்கே தேரீர்
மன்னர்கள் கூடுகின்ற மாசபையிதுவே
மாமுனியேயிங்கு வாரீர் நிற்கும்
இன்னோர் மந்திரிகள் ஏற்றபணிசெய்வர்
இவர்களை மனம்வைத்துக் காரீர்
அறியாமல் செய்பிழை அண்ணலேபொறுத்து
ஆதரித்திடவே வேண்டும் இங்கு
முறையாயிருப்பதை மொழிந்தேனெனக்குவிடை
முறையேதந்தருள வேண்டும்.

முனிநாதா! தேவரீர். சிம்மாசனத்தில் எழுந்தருளித் திருமுடி தரித்துக்கொள்ளும்.

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! உன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்வேன். (சிம்மாசனத்தில் போய் உட்காரல். அரிச்சந்திரன் முடிசூட்டல்.)

அரிச்சந்திரன்.--மந்திரிகளே! இந்த மாமுனி எல்லார்க்கும் நல்லவர்; மும்மூர்த்தியினும் சிறந்தவர். இந்த முனிநாதர் மனமகிழ நடப்பவர்களே எனக்கும் நல்லவர். இவர் மனதுக்கு விரோதம் செய்யாமல் இப்புண்ணியவான் சொல்லியவிதம் செய்து, இவரைச் சந்தோஷப்படுத்த வேண்டியதே உங்கள் கடமை.

மந்திரிகள்.—(அழுதுகொண்டு சொல்லல்.) ஸ்வாமி! தேவரீருடைய வார்த்தையைச் சிரமேற்கொண்டு நடப்போம்.

அரிச்சந்திரன்.—(மந்திரிகளைக்காட்டி.) ஸ்வாமி! இம்மந்திரிகள் உம்மை இகழ்ந்தாலும், உமது வேலை மறுத்தாலும், வேறு குற்றஞ் செய்தாலும், அவர்கள் குற்றத்தை க்ஷமித்து அருள்செய்யப் பிரார்த்திக்கிறேன். எனக்கும் விடைகொடுக்கவேண்டுகிறேன்.

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! நீ உன் நாட்டை எனக்குக் கொடுத்துப்போவதைப் பார்க்க எனக்குச் சம்மதமில்லை. (எழுந்துவந்து கையைப் பிடித்துக்கொண்டு) நீ என் பெண்ணை விவாகம் செய்துகொண்டு நீயே இருந்து இப்பட்டத்தைத் தரித்திருப்பாய். உன்னிடத்தில் பெற்றயாவும் நான் கொடுத்துவிடுகிறேன்.



அரிச்சந்திரன்.—மாமுனியே! மனுவுக்குப் பின் பிறந்து எனக்கு முன் இருபத்தொருவர்கள் செய்யாத தீச்செய்கையை நான் செய்யவல்லவனோ! தேவரீர் இவ்விதம் சொல்வதை விட்டுவிடப்பிரார்த்திக்கிறேன்.

விஸ்வாமித்திரர்.—(எழுந்துபோய் ஒரு மூலையிலிருந்து சொல்லல்,) தருமமே திரண்டு உருக்கொண்டு வந்திருக்கிற இவ்வரிச்சந்திரனை என் பேதைமதியால் இந்திரன் முன் நிந்தித்துளறினேன். நான் இப்பொழுது மனமிரங்கினால் நான் செய்த சபதம் வீணாகி வசிஷ்டனே வெற்றிகொள்ளுவான். ஆனதால் கடுமனங் காட்டவேண்டும். (முன்வந்து) அப்பா! அரிச்சந்திரா! நீ போகலாம்.

அரிச்சந்திரன்.—அற்ப செந்துவாகிய நாய்போன்ற அடியேன் செய்த பிழைகளைப் பொறுத்தருளும். (சந்திரமதியைப்பார்த்து) பெண்ணே! நீயும் தேவதாஸனும் இம்மாமுனியை வணங்கி விடை பெற்றுக்கொள்ளுங்கள்.

சந்திரமதி.—நாங்கள் செய்த தவறனைத்தையும் பொறுத்தருளவேண்டும். (வணங்கல்.)

தேவதாஸன்.—மாமுனியே! எனக்கும் விடைகொடும். (வணங்கல்.)

விஸ்வாமித்திரர்.—உங்கள் குற்றங்களை மன்னித்தேன். போய் வாருங்கள்

[அரிச்சந்திரன்-சந்திரமதி, தேவதாஸன் போகல்.]

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! அரிச்சந்திரா!

அரிச்சந்திரன்.—வந்தேன்! வந்தேன்! (யாவரும் வரல்,)

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா! நான்உன்னாட்டை ஆளக் கொடுத்துப்போகும் உனக்கு அற்ப உதவியும் செய்யாமல் நான் விடுவது அழகாகாது. நீ நிராயுதபாணியாகப் போகிறாய். மார்க்கத்தில் திருடர் தொந்தரை உண்டாகக்கூடும். ஆனதால், நீங்கள் அணிந்திருக்கும் ஆடையாபரணங்களைக் கழற்றிக் கொடுத்துவிட்டு ஏழைகளைப்போல் போனால் உங்களுக்கு யாதொரு தீங்

கும் நேரிடாது. நான் கொடுக்கும் ஆடையைத் தரித்துக் கொள்ளுங்கள். (ஒரு மூட்டை கொடுத்தல்.)

அரிச்சந்திரன்.—தேவரீருடைய இஷ்டம்போலவே செய்வோம் (மூட்டையை வாங்கிக்கொண்டு உள்ளே போகல்.)

மந்திரி.—(Aside) நாட்டைக்கொடுத்துப்போகும் மன்னன் ஆடையை வாங்கிக்கொள்வது என்ன அநியாயம். இந்த விஸ்வாமித்திரனுக்கு இருக்கிற கெட்ட எண்ணத்தைப் பார்தீர்களா ?

2-வது மந்திரி.—இவ்வித கெட்ட எண்ணங்கொண்டவன் இந்நாட்டை எவ்விதம் ஆள்வானோ! குடிகளுக்கு என்னென்ன தொந்தரவு கொடுப்பானோ அறியோம்.

3-வது மந்திரி.—அதோ ! அரிச்சந்திர மஹாராஜன் வருகிறார். ஐயையோ! இவ்வித வஸ்திரத்தையா அவர்கள் தரித்துக்கொள்ள வேண்டும்.

அரிச்சந்திரன்.—(மூட்டையோடு வரல்) ஸ்வாமி தேவரீர் எங்களுடைய நன்மையைக் கோரிச் சொல்லிய விதம் செய்தோம். இதைப் பெற்றுக்கொள்ளுங்கள். (மூட்டையைக் கொடுத்தல்) நாங்கள் போய் வருகிறோம். போற்றி! போற்றி! மாமுனியே !

விஸ்வாமித்திரர்.—வாழி ! வாழி ! போய் வாருங்கள். (யாவரும் போகல்.)

விஸ்வாமித்திரர்.—(எழுந்து வந்து) ஆ ! ஆ ! அரிச்சந்திரா ! ஓடிவா ! ஓடிவா!

அரிச்சந்திரன்.—வந்தேன் ! வந்தேன் !

விஸ்வாமித்திரர்.—ஆ ! ஆ ! அரிச்சந்திரா ! நீ படுமோசக்காரன் ! அடே நீ என்னை வஞ்சிக்க எத்தனை நாள் நினைத்திருந்தாய் ! இவ்விதம் செய்வாயென்று நான் நினைத்தவனேயல்ல. ஆ ! ஆ ! தோஷி ?

அரிச்சந்திரன்.— மாமுனியே ! நான் எந்தவிஷயத்தில் தேவரீரை வஞ்சித்தேன்.

விஸ்வாமித்திரர்.—அடே ! நீ இன்னும் என்னை ஏமாற்றவா பார்க்கிறாய் ? அடே ! நான் மறந்துவிட்டேன் என்றோ ஓடப்பார்த்



தாய்? அடே ! நான் உன்னிடத்தில் அடைக்கலமாக வேள்விக்காக வைத்த பொன்னைக் கொடுக்காமல் மோசம் செய்யப் பார்த்தாயல்லவா?

அரிச்சந்திரன்.—ஸ்வாமி ! நாங்கள் அணிந்திருந்த ஆடைகளைக் கொடுத்துவிட்டு தேவரீர் கொடுத்த வஸ்திரங்களை யணிந்து போகிறோம். தாங்கள் என்னடைக் கலமாகவைத்த பொன் அவ்விதமாகவே இருக்கிறது. தேவரீர் அதை எடுத்துக் கொள்ளலாம்.

விஸ்வாமித்திரர்.—அடே ! அரிச்சந்திரா ! முழுப் பூசனிக்காயை ஒரு பிடிசாதத்தில் மறைக்கப் பார்க்கிறாய். நீ தாரை வார்த்துக் கொடுக்கும் பொழுது உன்னிடத்தில் நான் வைத்திருந்த பொன்னைக்குறித்து ஏதாகிலும் சொன்னாயா? உன்னுடைய ஊருடனே உன் களஞ்சியத்திலுள்ள யாவும் என்னுடையதாகத் தாரைவார்த்துக் கொடுத்தாயா ? இல்லையா ?

அரிச்சந்திரன்.—மாமுனியே ! எனக்குச் சொந்தமாக விருந்ததையும் தேவரீருடைய பொருளையுங் கொடுத்தேன். என்னை வேறு பொருள் கொடு என்றால், நானிருக்கும் நிலை பொருள்கொடுக்கத்தக்கதோ?

விஸ்வாமித்திரர்.—உனக்குமுன் அரசாண்ட சூரியகுலத்தரசர்கள் சொன்னசொல் தப்பமாட்டார்கள். உன்னிடத்தில் அதை நான் காணவில்லை.

அரிச்சந்திரன்.—மாமுனியே ! தேவரீருடைய கோபத்தால் நினைவு தடுமாறிப் பயித்தியக்காரனை என்னைப் பொருள் கேட்கிறீர். நான் இவ்வளவுநாளுக்குள் பொருள் கொடுக்கவேண்டுமென்று கெடு ஏற்பத்தி ஒருவரையனுப்பினால் நான் அந்த கெடுவுக்குள் கொடுப்பேன்.

விஸ்வாமித்திரர்.—உன்னோடு காடுமலை கடந்து ஊரூராய்த் திரிந்தலைந்து பொருள் வாங்கவும் கெடு கொடுக்கவும் என்னால் முடியாது. திருட்டுத்தனமாக ஓடப்பார்த்த உன்னை மறித்தேன். நீ என் பொன்னைக் கொடுத்தே போகவேண்டும்.

அரிச்சந்திரன்.—‘உன் நாட்டைக் கொடுத்தால் உன் குற்றத்தை க்ஷமிக்கிறேன்’ என்று சொன்னதும், மகிழ்வுடன் அரசாட்சியை ஒப்படைத்துப் போகும் என்னைப் பொருள் இவ்விடத்திலிருந்தே கொடுக்கவேண்டுமென்றால், எவ்விதம் கொடுப்பேன்? தேவரீர் ஓர் கெடு கொடுத்து ஓராளை அனுப்பினால் தேவரீருக்குப் பெரும் புகழாகும்.

விஸ்வாமித்திரர்.—நீ வெளியேறிக் கடன்கொடுப்பதானால், என் ஆளுகைக் கடங்கிய நாடுகளுக்குள்ளிருந்து நீ பொருள் கொடுக்கக் கூடாது. ஏமகூட பருவதத்திலாவது காசியிலாவது போய்க் கொடுக்கவேண்டும். நீ கெடுவில் பணம் கொடுக்காமல் போனால் அதற்கென்ன நிபந்தனை?

அரிச்சந்திரன்.—தேவரீர் இட்டகெடுவிற் கொடுக்காமற்போனால், பதிவிரதையை இச்சித்த பாதகனாவேன்.

விஸ்வாமித்திரர்.—அடே! அரிச்சந்திரா! இருபது நாள் தவணை கொடுக்கிறேன். அதற்குள் நீ பொருளைக் கொடுத்துவிட வேண்டும்.

அரிச்சந்திரன்.—ஸ்வாமி! நீர் கொடுத்த கெடுவைப்போல் இரண்டு பங்கு காசிபோய்ச் சேரவே வேண்டுமே. நான் எவ்விதம் தேவரீர் வைத்த கெடுவில் பொருள் கொடுக்கமுடியும்?

விஸ்வாமித்திரர்.—அடே! அரிச்சந்திரா! என்மேல் குற்றமில்லாமல் இராஜகெடு நாற்பத்தெட்டுநாள் கொடுத்தேன். அதற்குள் பொருள் கொடுக்காமற்போனால் அது உன் குற்றமாக முடியும். அரிச்சந்திரா! நான் சொல்வதை நன்றாய் யோசித்துப்பார். எனக்குக் கொடுக்கவேண்டிய பொருளுக்காக நீ அதிகம் கஷ்டப்படவேண்டும். வேண்டாம்! வேண்டாம்! நீ என் சொல்லைத் தட்டாமல் என் பெண்களை மணம்பூண்டால், இந்த நாட்டையும் கொடுப்பதோடு எனக்குக் கொடுக்கவேண்டிய கடனையும் கேட்காமல் விட்டுவிடுகிறேன்.

அரிச்சந்திரன்.—(வணங்கி) மாமுனியே! இன்னும் அவ்விதம் சொல்ல வேண்டாம் நான் கொடுக்கப் போகும் பொருளைப் பெற்றுக் கொள்ள ஆளனுப்பும்.



விஸ்வாமித்திரர்.—நான் சொல்வதைக் கேட்காமல் அதிகம் துன்பப் படப் போகிறாய் நீ உடனே இவ்விடத்தைவிட்டுப் போய்விடு. நான் ஆளனுப்பி உன்னிடம் வரும்படி செய்கிறேன். போ! போ!

அரிச்சந்திரன்.—போற்றி! போற்றி! போய்விடுகிறோம்.

[அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், நீங்கல்.]

# Act III.

## Scene. I.—Street.

[அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், மந்திரிசள் தோன்றல்.]

அரிச்சந்திரன்:—மந்திரிகளே ! நீங்கள் என்னோடு அதிகதூரம் வந்து விட்டீர்கள். நீங்கள் திரும்பிப்போய் மாமுனிக்கு உதவியாக இருந்து அரசாட்சியைக் கவனியுங்கள்.

2-வது மந்திரி:—மஹாராஜனே!

இராகம். நாதநாமக்கிரியை. தாளம். சாபு. (காயமே பொய்யடா)

மந்திரி.—

வஞ்சனைகளேயீது அந்த — மாமுனியின் தன்சூது
வார்த்தைசொலுமிப்போது மாள — வதைத்திடுவோம் விலக்காது
— சிதைப்போமே மலைக்காது (வ)

அரிச்சந்திரன்.—

ஐயோஇதைச் சொலப்போமோ! — இது அடுக்காது ! வசைபோமோ !
வையத்தைக் கொடுத்து நாமோ — மொழிமறுத்தலுமழகாமோ !
— வெறுத்தலும் புகழாமோ ! (ஐ)

மந்திரி.—

நாட்டையாளக்கொடுத்தீர் — போக நாதனே உமைத்தடுத்தார்
கேட்டாராடை புகழ்விடுத்தார் — மீண்டும் கெடுதிசெயக் கொதித்தார்
— சடுதியிலே யழைத்தார் (வ)

அரிச்சந்திரன்.—

வெறுக்காமல் நீர் அவர்சொல் — வேதமெனவே மதிப்பீர்
மறுக்காமல் நீர்பொறுப்பீர்அந்த — மாமுனியை யேதுதிப்பீர்
— சாமியென வேமதிப்பீர். (ஐ)

அரிச்சந்திரன்.—மந்திரிகளே ! என் சொல்லைத் தட்டாமல் நீங்கள் சென்று விஸ்வாமித்திரமுனி சந்தோஷமடையச் செய்யுங்கள். அவருக்கிஷ்டமானவர்களே எனக்கிஷ்டமானவர்கள். நில்லுங் கள்; எங்களோடு வரவேண்டாம்.



[அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், போக எத்தனித்தல்.]

மந்திரி.—போற்றி ! போற்றி ! மஹாராஜனே !

அரிச்சந்திரன்.—வாழி ! வாழி ! நாங்கள்போய் வருகிறோம்.

[மந்திரிகள் ஒருபக்கம் அரிச்சந்திரனும் மற்றவர்களும் மற்றப்பக்சம் போக எத்தனித்தல்,]

[விஸ்வாமித்திரர் தோன்றல்.]

இராகம். மோகனம். தாளம், ஆதி. (போம்போம் இதுவும்கனமா.)

பல்லவி.

ஓ! ஓ! சூதை அறிந்தேன் — இவர்களெல்லாம்
உரைப்பதைக் கேட்டிருந்தேன். (ஓ!)

அநுபல்லவி.

ஆ! ஆ! அறைந்தார்கள் — ஐயையோ! எனைக்கொல்ல
அதற்குநீ உடன்பட்டாய் — அரிச்சந்திரா! எனைவெல்ல (ஓ!)

சரணங்கள்.

நாடு நகரத்தையும் — நான்வேண்டே னினிமேலே
நயவஞ்சகம் செய்த — தாலே பொல்லா
கேடுமனதிலெண்ணிக் — கேட்டாயோ சொன்னதெல்லாம்
கெடு வினைப்பறிந்த — தாலே.
காடே நிலையுள்ளது — காசினியை வேண்டேன்
கபடுங் கொடுமையுங் — கண்டேனுசைவிண்டேன் (ஓ!)

கொல்லயோசனையைக் — கொண்டோநான் கேட்காமல்
கொடுத்தாய் நீயாண்டிருந்த — நாடு இவர்
சொல்ல மனங்களித்தாய் — துஷ்டா இதற்கோ வீணே
தோஷம் எடுத்தேனிந்த — பாடு
அல்லலடைந்தவன்போல் — அபிநயித்தாயே திட்டி
அடுக்காத வார்த்தைகள் — அறைந்தாரே! யிவர் மட்டி! (ஓ!)

அரிச்சந்திரன்.—மாமுனியே ! தேவரீர் இவ்வளவு கோபங்கொள்வது அடுக்காது. இவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள். இவர்களை மன் னித்து ரக்ஷியும். தேவரீர் விஷயத்தில் அன்பு பாராட்டி வரும்படி இவர்களுக்கு ஆக்கியாபித்தேன். நான் யாதொரு

குற்றமும் தேவரீர் விஷயத்தில் செய்தவனல்ல: என்னை மன்னியும்.

விஸ்வாமித்திரர்.—அடே! நீ கொடுக்கவேண்டிய கடனைக் கேட்காமல் விட்டுவிடலாமென்று வந்தேன். இவர்கள் சொல்லியதைக் கேட்டிருந்தமையால் என் எண்ணத்தை மாற்றிவிட்டேன். நான் உன்னோடு ஒருவனை அனுப்புவேன். நீ சொன்ன தவணைப்பிரகாரம் எனக்குக் கொடுக்கவேண்டிய பொன்னைக் கொடுத்துவிடு.

[விஸ்வாமித்திரர் போசல்.]

அரிச்சந்திரன்.—மந்திரிகளே! நான் சொன்னதை கவனத்தில் வைத்துச் செய்யுங்கள். போய் வாருங்கள்.

[அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன் ஒருபக்கமும், மற்றவர்கள் மற்றப்பக்கமும் போகல்.]

## Scene 2.—Forest. நக்ஷத்திரகர்.

இராகம்-சின்சாபி. தாளம். ஆதி.

பங் பங் பங் பங்
குணமில்லை நம்பு கொண்டதோர் செய்பு குடி குடி குடி பங்
பங் பங் பங் பங்
வேறென்ன வம்பு வேணுமிச் செம்பு விடு விடு விடு பங்
பங் பங் பங் பங்
சதிதரும் கஞ்சா கரைத்தேனே கொஞ்சம் சட கட எனவிடு பங்
பங் பங் பங் பங்

கஞ்சாவைக் கொஞ்சம் உட்கொண்டால்
நாம் எதற்கும் அஞ்சவேண்டியதே இல்லை.
காசினியிலில்லை இதைவிடக் கைகண்ட மருந்து
தேசரே தொல்லை நீக்குமிது யாவர்க்கும் விருந்து
இதைக்கொண்டார்! கவலைவிண்டார்!
இதைவிட்டார்! மதிகெட்டார்!
எவர்க்கும் கிடைப்பது! ஏனோவிடுப்பது!
எடுத்துக்கொண்டா லிந்தவானம்
இம்பூமி மலைமரங்கள் சமானம்!



எவர்க்கும் உதிக்குமே ஞானம்
ஏறலாம் அன்றே விமானம்!
இதைத் தூஷிப்பதெல்லாம் வீண்வாது!
அதை யொருவரும் நம்பவேகூடாது!
சொல்லுவார் தாழ்மை அது சூது!
ஒருவர் சொல்லையும் நம்பக்கூடாது!
அறியார்சொல் கேட்பதெல்லாம் வீணே!
சரியான சாக்ஷியாக இருக்கின்றேன் நானே!
இதன் நன்மையறியாமலே தோஷம்
எல்லாரும் சொல்லுவாரது பெருமோசம்!

[விஸ்வாமித்திரர் தோன்றல்.]

நக்ஷத்திரகர்.—வாரும் விஸ்வாமித்திரரே பங்கைப் பாரும்!
கொஞ்சம் வாங்கி சாப்பிட்டால் களை தீரும்!
எந்தப்பொருளுமில்லையே இதற்கிணை!
எனக்கிருப்பதிதுவே பெருந்துணை!

விஸ்வாமித்திரர்.—உம்மிடத்தில் அவசரமாக ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசவந்தேன்.

நக்ஷத்திரகர்.—பேசலாம் எல்லாம் பின்னாலே!
கூசாமல் சாப்பிடும் முன்னாலே!
இதை உண்டால் எல்லா உலகமும் கண்முன் காணும்!
இதைக்கண்டு சாப்பிடாமல் விட்டால் துயர்பூணும்!

விஸ்வாமித்திரர்.—ஓய்! நக்ஷத்திரகரே! நீர் கஞ்சாவைப் புகழ்வதைக் கேட்டுக்கொண்டிருக்க அவகாசமில்லை. நீர் எனக்காக அரிச்சந்திரனோடு சென்று அவன் கொடுக்கும் பொருளை வாங்கிவரவேண்டும். இதைச் செய்ய உம்மை வேண்டுகிறேன்.

நக்ஷத்திரகர்.—என்னாலாகாதந்த வேலை!
எகும் உமதுடைய சோலை!
ஏனோ எடுத்தீரிந்த கஷ்டம்!
சும்மா இருந்தால் உமக்கென்ன நஷ்டம்!

விஸ்வாமித்திரர்.—நான் வசிஷ்டன் சொல்லை அபத்தமாக்க வேண்டுமென்று சொன்னது விபரீதத்தில் கொண்டுவந்து விட்டது.

நீர் காசிபரியந்தம் அரிச்சந்திரனுடன் சென்றுவர வேண்டும் தடங்கல் சொல்லவேண்டாம்.

நக்ஷத்திரகர்.—நான் மறுத்தால் வரும் உமக்குக் கோபம்!
வரவேண்டாம் நமக்குள் மனஸ்தாபம்!
பங்க் இருக்கும் செப்பைக் கொண்டுவருவேன்!
பார்ப்போர் கேட்போர்க்கெல்லாம் தருவேன்!

[இருவரும் போகல்.]

## Scene 3.—Front Forest. அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், விஸ்வாமித்திரர், நக்ஷத்திரகர்.

[அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன் தோன்றல்.]

இராகம். தீர சங்கராபரணம். தாளம். ஆதி. (வருவீர் நலங்கிடவே.)

அரிச்சந்திரன்.—

| | | |
|---|---|---|
| மகனே வருவாயே | நான்பெற்ற | (ம) |
| தகுமோ நீ நடந்திடத் | தாயுடன் வனத்தில் | |
| தாள்வருந்துதோ சாற்றுவாயே | என்னுடனே | (ம) |
| கால்நடையாகவே | கானகத்தினில்போகக் | |
| கதியிருந்ததோ அறியேன் | என்னுடனே | (ம) |
| முன்செய்த தீவினையால் | முனிவர்க்குக் கடன்பட்டோம் | |
| முனியாது நடந்து | என்னுடனே | (வ) |

தேவதாஸன்.—தந்தையே! எனக்காகத் தாங்கள் கவலை கொள்ள வேண்டாம். (விஸ்வாமித்திர மாமுனி மற்றொருவரோடு அதி வேகமாக வருகிறார்.)

[விஸ்வாமித்திரர், நக்ஷத்திரகர் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—போற்றி! போற்றி! மாமுனியே!

விஸ்வாமித்திரர்.—வாழி! வாழி! அரிச்சந்திரா! இவர் நக்ஷத்திரகர். இவர் உங்களோடு வருவார். நீ எனக்குக் கொடுக்கவேண்டிய பொன்னை இவரிடங்கொடுத்தனுப்புவாய்.



அரிச்சந்திரன்.—பாக்கியம் ஸ்வாமி! வாரும் ஐயா நக்ஷத்திரகரே! போகலாம்.

[அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், போகல்.]

விஸ்வாமித்திரர்.—(நக்ஷத்திரகரைப் பிடித்து நிறுத்திக்கொண்டு போகிறவர்களை எட்டி எட்டிப்பார்த்தல்.) நக்ஷத்திரகரே! நான் சொல்வதைக் கவனித்துக் கேட்கவேண்டும். அரிச்சந்திரன் பணம் கொடுப்பதானால் ஒரு யானையை நிறுத்தி அதன் மேல் ஒருவன் ஏறி கவண்கல்லெறிந்தால் அக்கல் போகும் தூரம் பொன் கொடுக்கவேண்டும். அவ்விதம் கொடுத்தால், பெற்றுக்கொண்டு உமக்குத் தரவேண்டுமென்று பொன் கேளும் நீங்கள் போகும் மார்கத்தில் அவன் காய் கிழங்குகளைத் தின்னக் கொடுப்பான். நீர் அக்காலத்தில் சோறு வேண்டுமென்று சொல்லும். எனக்குக் கொடுத்த நாட்டைக் கொடுக்கவில்லையென்று அவன் சொன்னால் அவனுடைய நாட்டை வாங்கிக்கொடுக்கிறேன் என்று சொல்லும். அவ்விதம் சொன்னால் உடனே அவனை அழைத்து வாரும். அதுவே நமக்குப் போதுமானது. நான் சொன்னதை மறந்துபோக வேண்டாம். நான் போய் வருகிறேன். நீர் விரைவாய்ச்சென்று அவர்களுடன் கலந்துகொள்ளும்.

நக்ஷத்திரகர்.—ஐயா! விஸ்வாமித்திரரே!
அறிந்தேன் நீர் சற்புத்திரரே!
நீர் அறைந்தயாவும் கேட்டேன்!
அரிச்சந்திரனுக்கு அன்பு தயை பொறுமைகாட்டேன்!
நீர் போகலாம் வேலையில்லை!
நம்பியிருக்கலாம் என்தன் சொல்லை!

விஸ்வாமித்திரர்.—நான் போய்வருகிறேன்.

நக்ஷத்திரகர்.—நீருமப்படியே! நானுமப்படியே!

[இருவரும் மாறிநிங்கல்.]

**Scene 4.—Forest.** அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், நக்ஷத்திரகர், மந்திரி.

அரிச்சந்திரன்.—ஆ! ஆ! சத்தியக்கீர்த்தி வருகிறான்! என்ன காரணம்.

[சத்தியகீர்த்தி தோன்றல.]

சத்தியகீர்த்தி.—போற்றி! போற்றி!

அரிச்சந்திரன்.—வாழி! வாழி!

இராகம். தேவகாந்தாரம் தாளம். ஆதி. (முறைபடிபாஷது.)

ஏன் வந்தாய் மந்திரி — என்சொல்லைத்தட்டியே (ஏ)
மானேந்தும் சங்கரன் — மாணடிதனைத்தேடி
வணங்கும் முனியைவிட்டு — வனத்திலெனைநாடி (ஏ)
மாமுனியரசாள — மனுநீதிகெடாமலே
வழங்குவாயேவிட்டு — வருந்திவிடாமலே (ஏ)
உனைவிட நீதியே — உணர்த்துவாரில்லையே,
உத்தமா திரும்புவாய் — ஒப்பியென் சொல்லையே (ஏ)

சத்தியகீர்த்தி.—ஸ்வாமி!

இராகம். சுருட்டி தாளம். அடதாளம். (இது நல்லதகுணம்.)

பல்லவி.

தடுத்திட வேண்டாமே — வருவதைத்
தடுத்திடவேண்டாம். (த)

அநுபல்லவி.

அடிமைத்தொழில்புரியா — தரசே நான்சகிக்கேன்
ஐயனே உமைவிட்டு — அரைநொடியுமிருக்கேன் (த)

சரணங்கள்.

வனத்திலுமக்குவேண்டு — மவைகளை ஓடியே
வழங்காமலிருப்பேனோ — மன்னவா தேடியே
அனைத்தையும் விட்டுப்போறீர் — அரிமுகம்வாடியே
அகற்றுதீர்வருவேனே — அரசே நான்கூடியே (த)

இந்நாளுமக்குநான் — இயற்றும் பணிபொறுத்தீர்
இன்றையோகடுகடுத்து — ஏனோஎனைவெறுத்தீர்
யன்று உமைவிட்டேக — மனங்கொதித்தே உரைத்தீர்
வணங்கியேவல்செய — காலத்தில் தடுத்தீர் (த)



ஸ்வாமி! தேவரீரை என் உயிரென்றே எண்ணியிருக்கிறேன். அவ்விதம் எண்ணியிருக்கும் உயிரென்னை விட்டு நீங்கினால் உடல் நிற்காது. தேவரீர் என்னை அழைத்துக்கொண்டு போகாமற்போனால் என்னுயிர் நில்லாது என்னை ஆதரியும் (இருபாதங்களையும் பிடித்துக்கொள்ளல்).

அரிச்சந்திரன்.—பெண்ணே! சந்திரமதி! நாமிவனை யழைத்துக் கொண்டு போகாமற்போனால் இவன் இறப்பான் என்பது நிச்சயம். அப்பா! சத்தியகீர்த்தி! நீ கவலைகொள்ளாமல் என்னோடு வருவாய்.

சத்தியகீர்த்தி.—நான் முன்போந்த ஜன்மத்தில் செய்த தவத்தின் பலன் இப்பொழுது கடைகூடியது.

நக்ஷத்திரகர்.—அரிச்சந்திரா! நீ முழுச்சந்திரன்!
அந்த முனிசெய்தது அடுக்காது!
அறிந்துமிருக்கேன் தடுக்காது!
அடவியில் நீங்களோ நடப்பது!
அவசியமல்லவா இதைத்தடுப்பது?
புவனியில் அவரால் வந்த அபாயம்!
போக்கக் கண்டேனொருபாயம்!
நீ என்தன் வார்த்தைகளை நம்பி!
என் இஷ்டம்போல் நடந்தால் தம்பி!
உன்னோடு முனிவரிடம் வருவேன்!
உன் நாடுநகரம் மற்றதும் வாங்கித்தருவேன்.

சத்தியகீர்த்தி.—ஐயா! தரகரே! என்ன உபாயங் கண்டுபிடித்தீர்.

நக்ஷத்திரகர்.—அற்பமே அதைச்சொன்னால் பகைக்கீர்
அறிந்தால் எளிதென்று யாவரும் நகைப்பீர்
நான் நெடுநாள் பலசாஸ்திரத்தை வாசித்துத்
தெளிந்ததை எடுத்துரைத்தேனிதை யோசித்து
நன்றாய் வாசித்தவர்க்கே புத்திவிரியும்
நல்ல அநுபோகம்வந்தால் தெரியும்
(அரிச்சந்திரனைப்பார்த்து)
தனித்து என்னிடத்தில் வாரும்

ஒதாருமக் கிதையாரும்
(அரிச்சந்திரனிடம் இரகசியமாகச் சொல்லல்)
நாட்டை முனிக்குக் கொடுக்கவில்லை
என்று நவின்றால்போகு முன்தொல்லை
மந்திரிகளீனை கரிருந்தென்னவானது
ஒருவர் மண்டையிலுமிது நுழையாமற்போனது.

அரிச்சந்திரன்—ஐயா! தரகரே! எனக்கென்ன கெடுதி நேரிட்டாலும் நான் கொடுத்த நாட்டைக் கொடுக்கவில்லை என்று சொல்லேன்.

நக்ஷத்திரகர்.—கெடுவாய் கெடுவாய் வேண்டாமென்றால்
கெடவே பந்தயம் கேட்கத்துணிந்தாய்;
கல்வி முதிர்ச்சியால் சொன்னபேச்சு
ஆற்றில் கரைத்தபுளி போலாச்சு.

அரிச்சந்திரன்.—இங்கிருப்பதில் பிரயோசனமில்லை. போகலாம் வாருங்கள்.

இராகம். சிம்மேந்திரமதிமம். தாளம். ஆதி. (ஏமருங்கனே.)

போது.—
விதியைத்தடுக்க லாகா (வி)

சத்தியகீர்த்தி.
சதி செய்திடும் முனியால் காட்டில்
தாள்வருந்த இவர் நடக்க (வி)

அரிச்சந்திரன்.—
நீதிதவறி நடந்தேனோ
நீணிலத்தில் துயரடைய (வி)

தேவதாஸன்.—
சங்கரனும் ஓடெடுத்தார்
சங்கயேந்தி மண்ணையுண்டார் (வி

சந்திமரதி.—
வையம் ஆண்ட மன்னவரும்
வனத்தில் மாளா வழி நடக்க (வி



நக்ஷத்திரகர்.—நீங்கள் வனத்தில் படுவதே துன்பம்
என்னைப் பசி சுடுவதெல்லாம் உங்களுக்கின்பம்.

இராகம் காபி தாளம் ஆதி. (உன்னைவிடு மென்றெண்ணாதே.)

பல்லவி.

என்னால் நடக்கலாகாதே ஓ! அரிச்சந்திரா! இனிமேலும் (எ)

அநுபல்லவி.

மன்னா பசிப்பிணியால் வாடுகிறேன் ஐயையோ
வனத்தினில் சாகவோ வந்தேன் சாப்பிடாமல் (எ)

சரணம்.

மாமுனி தனக்குப்பொன் வழங்கினா லெனக்கென்ன
வருமோ அறிந்திலேன் வயிற்றுக்குப் போடாமல் (எ)
தயிரோடு பாலோடு சாப்பிட்டிருந்தேனே
சண்டாளன்போகவே சாற்றினுள் உண்ணாமல் (எ)
கொடுக்கவேண்டிய பொன்னைக் கொட்டி விடடாபாவி
கொல்லுதே பசியெனைக் கொஞ்சமாகிலு முண்ணாமல் (எ)

நீ உன்மனைவி மக்களுக்காகவருந்துதலைவிட்டு,
மாமுனிக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொண்டுவந்து
பசியெனைவிடாமல் சுட்டுக் [கொட்டு,
கொளுத்துகிறது நானறியேன் இந்த பாடுபட்டு.

அரிச்சந்திரன்.—ஐயா! தரகரே! அடர்வனத்தில் பசிக்கிறதென்றும் பொன்னைக் கொட்டென்றும் சொன்னால் நான் இங்கு என்ன செய்யமுடியும்? நாம் [illegible]ரைக் கண்டவுடன் உமது பசியைப் போக்குவேன்.

சத்தியகீர்த்தி.—ஐயா! தரகரே! உம்முடைய பசியைப் போக்க நான் வேண்டியதைக் கொண்டுவந்திருக்கிறேன். உமது பசியை ஆற்றிக்கொள்ளும் (மூட்டையை அவிழ்த்து தின்பண்டங்களை வைத்தல்.)

நக்ஷத்திரகர்—நீ கொண்டுவந்தது என்பசியைத் தணிக்காது
ஆயினும் என்செய்வது
அவைகளை யொருகை பார்க்கவேண்டியது.

(பலகாரத்தைச் சாப்பிட்டுக்கொண்டு)

எனக்கு மிகவுங்களைப்பு
இந்த சிலேப்பி மிகவும் புளிப்பு.
இந்த லட்டுக்கில்லை ஒப்பு
இந்த பகோடாவில் மிஞ்சியது உப்பு.
என்னசெய்வது ஒரு கைபார்க்கவேண்டியது.

சத்தியகீர்த்தி.—தாகரே! தேவதாஸனுக்கொன்று கொடும்.

நக்ஷத்திரகர்.—கொடுக்கேன் ஒருதுண்டும் இப்போது
கொடுப்பேன் என்வயிறு கொள்ளாமற்போனால் அப்போது.

தேவதாஸன்.—ஐயா! தாகரே! எனக்குவேண்டாம் தங்கள் வயிறு நிரம்பத் தாங்களே சாப்பிடுங்கள்.

நக்ஷத்திரகர்.—இச்சிறுவன் சொன்னதேயுத்தி
இங்கொருவருக்கும் வரவில்லையே இந்தயுத்தி
(சாப்பிட்டு ஏப்பத்தோடு எழுந்திருக்கல்)
சாப்பிட்டு நடக்க என்னால்முடியாது.
சற்றுநேரம் படுத்துறங்காது,
எனக்குப் பெண்பிள்ளை தாலாட்டவேணும்
உமது பெண்டாட்டியைப் பாடச்சொல்லுங்காணும்.

அரிச்சந்திரன்.—ஐயா! தாகரே! படுத்துக்கொள்ளும், என் மனைவி தாலாட்டுவாள்.

நக்ஷத்திரகர்.—(படுத்துக்கொள்ளல்) அடே பொடியா சற்று என் காலைப் பிடி
நீ போக்குச்சொன்னால் கொடுப்பேன் அடி.

தேவதாஸன்.—நீர் என்னை அடிக்கவேண்டாம். நான் போக்குச்சொல்லாமல் கால் பிடிக்கிறேன். (கால் பிடித்தல்)

[சந்திரமதி உட்கார்ந்து தாலாட்டல்.]

இராகம். ஆனந்தபைரவி.

ஆராரோ ஆராரோ    ஆராரோ ஆரிவரோ
ஆராரோ ஆராரோ    ஆராரோ ஆரியரோ    (ஆ)



மாமுனியின் கடன்வாங்க    வந்தீர் நடுவனத்தில்
வந்ததோ பசியுமக்கு    மறையவரே கண்வளரீர்    (ஆ)

பசிக்குதென்றே யொருவர்    பகர்ந்ததையே கேட்டறியோம்
பாரிலின்று மனந்துடித்து    பதைத்திட்டவே கேட்டறிந்தோம்    (ஆ)

உண்டு களைத்து    உறக்கமும் வந்தது
உறங்கிக் களை தீரும்    உத்தமரே கண்வளரீர்    (ஆ)

இராகம். ஆனந்தபைரவி. தாளம். சாபு.

அன்றுமுனி கேட்கவே    அளித்தாரே நாட்டை
அகற்றபசி வழியொன்றும்    அறியாது போனேம்
லாலி லாலைய லாலி.
அன்ன சத்திரங்கள் பல    அமைத்தும் முடிவிலே
அந்தணரின் பசிதீர்க்க    அமைச்சர் துணைசெய்தார்
லாலி லாலைய லாலி.
வயிற்றுப் பசிதீர    வந்ததோ களையுமக்கு
மறந்து உலகத்தையே    மறையோரே கண்வளரீர்
லாலி லாலைய லாலி.

[பூதங்கள் தோன்றல்.]

1-வது பூதம்.—ஓ! ஓ! ஓ! ஆ! ஆ! ஆ! அகப்பட்டது நல்ல உணவு

நக்ஷத்திரகர்.—(எழுந்து பயப்படல்) நான் காண்பது கனவா! நனவா!

2-வது பூதம்.—அந்தப் பாப்பானைக்கொன்று தின்பேன்.

1-வது பூதம்.—அந்த பாப்பான் காலைப் பிடுங்கித் தின்பேன்.

நக்ஷத்திரகர்.—ஓ! ஓ! அரிச்சந்திரா! நான் வீட்டிலிருந்தால் இத் துன்பம் வந்திரா!
இனிமேல் உன்னைக்கடிந்து பொன் கேட்கவில்லை
இவர்களைப் போகச்செய் நம்பி என் சொல்லை,

ச்சந்திரன்.—தாகரே! நீர் கவலை கொள்ளவேண்டாம், நாங்களே! அப்பூதங்களுக்கு இரையாவோம்.

நக்ஷத்திரகர்.—நீர் என்னோடு கொஞ்சந்தூரம் வாரும்.
நான் சொல்வதைக் கவனித்துப்பாரும்.
இன்றோடு உமது துன்பமெல்லாந் தீரும்.

நாடிழந்து மனையிழந்து துயர்கொண்டாய்,
ஞாலத்தி லின்னமிருப்பதில் என்ன பலன் கண்டாய்.
நீங்கள் யாவரும் பூதத்துக் கிரையாகப்போனால்,
என்னை விட்டுப்போய்விடும் அதனால்
அப்பா ! என் பெண்டாட்டி என்னைத் தேடுவாள்.
இறந்தேன் என்றறிந்தால் மனம்நொந்து வாடுவாள்.
அந்த கோரத்தை யாராலும் பார்க்கமுடியாது.
இந்த உபகாரம் செய்யாமற்போனா லென்னுயிர் நில்லாது.
அவளுக்கு வயது கொஞ்சம்
ஆனதால் அடைந்தேன் உன் தஞ்சம்.
என் பெண்டாட்டி ஒன்றும் அறியாதவள்
சூதுவாது ஒன்றும் தெரியாதவள்.
இந்த உபகாரம் உடனே நீபோய் செய்.
நானுன்னை எப்பொழுதும் மறக்கேன் அதுமெய்.

அரிச்சந்திரன்.—தாரகரே ! உம்முடைய இஷ்டம்போல் நாங்கள் யாவரும் பூதங்களுக்கு இரையாவோம். (பூதங்களைப்பார்த்து) ஏ ! பூதங்களே ! நீங்கள் மறையோரைவிட்டு எங்களைக் கொன்று தின்னுங்கள்.

பூதங்கள்.—நாங்கள் அந்த பாப்பானையே கொன்று தின்னுவோம். ஓ ! ஓ ! ஓ !

நக்ஷத்திரகர்.—பூதங்களே ! அவர்களைக் கொன்று தின்றாலென்ன தொல்லை.

என் தேகம் தோலும் எலும்பே சதையில்லை.
எனக் கண்டும் தெரியவில்லை
உங்கள் தலைசெங் கல்லோ
வேண்டுமானால் கொஞ்சம் குடியுங்கள் இந்தா பங்.

பூதங்கள்.—அவனையே கொன்று தின்போம். ஓ ! ஓ ! ஓ !

அரிச்சந்திரன்.—பூதங்களே ! நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் வாதிட்டுக்கொண்டிருக்கிறீர்கள். உங்களைக்கொன்று விடுவேன் (ஓடி அடிக்கல்.) [பூதங்கள் ஓடிப்போகல்.]

---



**Scene 5.—Forest (Fire.)** அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், சத்தியகீர்த்தி, நக்ஷத்திரகர்.

[நக்ஷ, அரி, சந், தேவ, சத், தோன்றல்.]

நக்ஷத்திரகர்.— அரிச்சந்திரா ! உன் மன[illegible]யமே [illegible]வதும் [illegible]தேன்

உன்னால் முடியவில்லை யென்றோடி பூதங்களை வதைத்தேன்
ஆ ! ஆ ! இது என்ன மறுப்பு
ஆகவந்தே இந்தகாடு முற்றிலும் நெருப்பு.
இதில் அரசன் ஒருவன் விழுந்திறந்தால்
நெருப்பு அவிந்து போகும் தப்பாமல்.

அரிச்சந்திரன்.—ஓர் அரசனுயிரை அக்கினி ஏற்றுத் தணியுமாயின் நானே போய் விழுந்திறப்பேன். நீங்கள் யாவரும் தப்பித்துக் கொள்ளுங்கள்.

சத்தியகீர்த்தி.—ஸ்வாமி ! தேவரீர் விழுந்திறந்தால் கடன் யார் கொடுப்பார் ? தேவரீர் மாமுனிக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கத் தடைசெய்யும் இந்த நெருப்பில் நான் விழுந்திறப்பேன். தேவரீர் காசிசேர்ந்து விஸ்வாமித்திர முனிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றும்.

அரிச்சந்திரன்.—அப்பா ! சத்தியகீர்த்தி ! தாரகர் சொல்லியதை நீ கவனிக்கவில்லைபோல் காண்கிறது. இந்நெருப்பில் அரசன் விழுந்திறந்தாலன்றி பிரயோசனமில்லை. ஆனதால் நானே விழுந்திறக்கவேண்டும்.

சந்திரமதி.—என் பிராண ஆதாரமே ! நாம் மாமுனிக்குக் கொடுக்க வேண்டிய கடனைக் கொடுக்கும் வழியை முன் யோசிக்கவேண்டும். தேவரீரிறந்தால் கடனுக்கஞ்சி உயிர் விட்டார் என்று உலகம் வசை கூறும். ஆனதால் நானிந்த அக்கினியில் விழுந்திறந்தால் தோஷமில்லை. தாம் காசிசென்று மாமுனிக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கலாம்.

தேவதாஸன்.—இது அடுக்காது.

இராகம். யமுனாகல்யாணி. தாளம். சாபு.

இந்தயோசனைகள் ஏனோநானிருந்தும்
என்னபலனாகும் அன்னை தந்தையாரும்
சிந்தைகலங்கியே கொடுந் தீயில் விழலாமோ
இது நீதி அடுக்காது என்தன் சிவனைப்போக்காது. (இ)
பட்டகடனைத் தீர்த்திடவேண்டாமோ
பலதைவீணாகச் சொலுதல் கூடுமோ
அட்டி சொல்லாமல் ததியில் ஒட்டி யென்கருத்தை
அறைவீரே! பொறையோரே! அக்கினியில் விழுந்திட (இ)

சந்திரமதி, அரிச்சந்திரன்.—அடா! என்செல்வமே நீ அவ்விதம் சொல்லுதல் கூடாதடா என் கண்மணியே!

[சந்திரமதி, அக்கினிக்கு முன்நின்று]

இராகம். மேசகல்யாணி. தாளம். ரூபகம்.

ஓ! தேவே உன்கழலே தஞ்சமென
உவகையோடு வணங்க நீரும்
உற்ற இடரைத்தீர்க்கப்பாரும்
உள்ளம் வைத்து எம்மைக்காரும் (ஓ)
மதிதயன் தவத்துதித்து மன்னன் தன்னையே! மாலைசூடியே!
மதித்து தெய்வமென்றிருந்தால் மாமுனியின் கடன் தீர்க்கவே
வழிவிடுவாயக்கினியே! (ஓ)

அக்கினி அவிந்து போகல்.

நக்ஷத்திரகர்.—சந்திரமதி புண்ணியவதி.

[யாவரும் போகல்.]

# Act IV.

## Scene 1.—Front Forest. அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாஸன், சத்தியகீர்த்தி, நக்ஷத்திரகர்.

[அரி, சந், தேவ, சத், நக்ஷ, தோன்றல்.]

அரிச்சந்திரன்.—ஆ! ஆ! காசிநகர் கண்ணுக்குத் தெரிகிறது.

இராகம்-சாவேரி. தாளம்-சாப்பு. (அம்மணியே தனித்து)

பல்லவி.

காசிநகர்தனையே காணுவாய் பெண்ணரசே கதிதரும் நகரிதுவே (கா)

அநுபல்லவி.

வாஸம் செய்திவ்வூரில் மரித்தால் நற்பதவி விஸ்
வேஸன் வழங்குவார் வேல்விழியாளே யுண்மை. (கா)

சரணங்கள்.

தாழ்ந்தோருயர்வாரே தரணியிலுயர்ந்தோரும்
தாழ்வாரெனச்சாற்றும் தருமந்தப்பாமலே
தாழ்ந்தே அகழியும் தங்கினதரிமுடி
தாழாதுமதிலோங்கி தபனனடிதங்கின (கா)

மலைகளைத்துளைத்து மணிகள்பதித்தாற்போல்
மாளிகைதோணுது மாதர்கள் நிற்பது
கலைவளர் சந்திரன் களங்கம் நீங்கி நிற்கும்
காட்சிபோல் காணுது காரிகையே பாராய் (கா)

அந்தணர் வீதியும் ஆவணவீதியும்
அரசனரண்மனையும் அரிவையே பாராய்.
எந்தை யெழுந்தருளி இருக்கும் வீதியது
எண்ணிலா மாந்தரும் எகிறாரே வாராய். (கா)

அரிச்சந்திரன்.—பெண்ணே! நம்முடைய ஜன்மம் கடைத்தேற கங்கையில் நீராடி காசி விஸ்வநாதரை தரிசிக்கலாம் வருவாய்.

[யாவரும் போகல்.]

**Scene 2.—Bridge.** இருவர் மிட்டாய் சாப்பிட்டுக் கொண்டிருக்கல்.

நக்ஷத்திரகர் மிட்டாய் தின்போரிடம் போகல்.

நக்ஷத்திரகர்.—அப்பா நீ யார்.
சொல்லுவாயுன் பேர்.
முகச்சாயல் அவரைப்போல் காணுது.
அவர் பிள்ளையாயிருக்க வேண்டுமென்று தோணுது.

1-வது மனிதன்.—யாரைப் போலிருக்கிறதென்றீர்.

நக்ஷத்திரகர்.—உன் தந்தையைப் போலிருக்கிறதென்றேன்.

1-வது மனிதன்.—என் தந்தை பேரென்ன.

நக்ஷத்திரகர்.—உன் தந்தைபேர் நல்லபேர்.
நல்லபேர். அவர்பேர் ஐ. ஐ.

1-வது மனிதன்.—ஐயனரா !

நக்ஷத்திரகர்.—ஆம் ! ஆம் ! ஐயனர்.
அவர் இந்த ஊரைவிட்டுப் போனர்.
அவர்முடிவு பரியந்தமிருந்துவந்தேன்.
என்னாலியன்ற உதவியெல்லாம் தந்தேன்.
ஐயோ ! மனம் நொந்தேன்.

1 & 2-வது மனிதன்.—ஐயையோ ! அவர் இறந்துவிட்டாரா ! (மிட்டாயை வைத்துவிட்டு ஓடிப்போகல்.)

நக்ஷத்திரகர்.—இது சள்ளையில்லாத கொள்ளை
(மிட்டாய் எடுத்து சாப்பிடல்).
அவர்களெல்லாம் நீராடி வருகிறார்.
நாமிதனோடு போராடிக் கொண்டிருப்பதைக்கண்டால்
வேறொன்று தாரார்.
(மிட்டாயை முடிக்கொள்ளல்).

அரிச்சந்திரன் சந்திரமதி போகல். நக்ஷத்திரகர் பின்னால் சாப்பிட்டுக் கொண்டு போகல்.



அரிச்சந்திரன்.—அப்பா ! சத்தியகீர்த்தி ! நாம் முதலில் விஸ்வேஸர் ஆலயம்சென்று அவரைவணங்கி வரலாம். பின் தரகருக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்தலாம்.

சத்தியகீர்த்தி.—பாக்கியம் ஸ்வாமி !

[யாவரும் போகல்.]

**Scene 3.—Temple.** அரி, சந், தேவ, சத், நக்ஷ.

[அரி, சத், தே, சந், தோன்றல்.]

இராகம். சுருட்டி. தாளம். ரூபகம். (பஜனபருலக்கிய.)

பல்லவி.

மதிநதி சடைபுனை பசுபதி மலரடி துணைதாருமித்தறி. (ம)

அநுபல்லவி.

கதிவேறில்லை யெனையாதரி காட்டிலாக்கினாய் நரியே பரி. (ம)

சரணங்கள்.

திரிபுரம் வேகச்சிரித்தாய்! சினந்துகரியை உரித்தாய்!
உரிய மருமானை யெரித்தாய்! உரகாபரணம் தரித்தாய்! (ம)

வேதம்துதிக்கும் விண்ணோநாதா! விதியைத் தடுக்கலாகாதா
மாதவத்தோர் போற்றும்பாதா! மறவாதிருக்கவரம் தா தா. (ம)

அனைத்துயிர்க்குயிரான ஈசா! அடியாரைக்காக்கும் விஸ்வேசா!
இனையும் வினைப்பவர் நேஸா சீருடைக் கைலையங்கிரி வாஸா (ம)

[யாவரும் போகல்.]

**Scene 4.—Street.** அரி, சந், தேவ, சத், நக்ஷ.

[அரிச்சந்திரன், சந்தி, தேவ, சத்தியகீர்த்தி, நக்ஷத்திரகர், தோன்றல்.]

நக்ஷத்திரகர்.—காசிசேர்ந்தால் கடன் கொடுப்பாய் என்று
கருதியிருந்தேன் அது கபடமென்றறிந்தேனின்று.
மயிலே மயிலே இறகுவேண்டும் என்றால்
மனதொடு கொடுக்காது. பிடித்துப் பிடுங்கவேண்டும்.

இராகம். தோடி. தாளம். ரூபகம். (பாரடி யெனனழகை.)

பல்லவி.

ஏதோ ஜாலம் செய்கிறாய் இன்னமுமெத்தனை நாட்கள்
இருக்கவேண்டுமோ சொல்லடா. (ஏ)

அநுபல்லவி.

ஓதடா ஒழிப்பாயோ இல்லையோ
ஒன்று முரைக்காமலே நின்றாய் மரம்போலே! (ஏ)

சரணம்.

காசியைச்சேர்ந்து காலம் போக்காமல்
கடன் கொடுப்பேனென்று கழறினாய் செய்யாமல்.
தோஷி நானுன்னோடு சுற்றிக்கொண்டிருக்கத்
தொல்வினையோ இன்னும் சொல்கிறாய்ப் பொறுக்க.
பேசாது பொன்னைக் கொட்டுவா யிப்போது
பிசகினால் அண்ணாந்தாள் போடுவேன் தப்பாது. (ஏ)

சத்தியகீர்த்தி, சந்திரமதி, தேவதாஸன்.—ஐயா! வேண்டாம். பூமாலைதாங்கிய கழுத்தில் நான்மாலை போடவேண்டாம்.

நக்ஷத்திரகர்.—என்னைவந்து நண்ணாதீர்கள்
அண்ணாந்தாள் எடுப்பேன் என்று எண்ணாதீர்கள்.
எங்கே கற்றுக்கொண்டீரிந்த தலையாட்டு
என்னிடத்தில் வேண்டாமிந்த விளையாட்டு.

அரிச்சந்திரன்.—

இராகம். ஆனந்தபைரவி. தாளம். ரூபகம்.

பல்லவி.

காசிவிஸ்வேசா இந்த கதியிருந்ததோ அறியேன். (கா)

அநுபல்லவி.

பூஸுரர் சினந்தெனக்குப் போட்டா ரண்ணாந்தாள்வருந்த. (கா)

சரணங்கள்.

பொன்னெனைத் தரவித்ததி புசன்றாலென்ன செய்வேனையோ
இந்நகரை அடைந்திவ்விதி இருந்ததோ அடைந்திடவே (கா)
மாமுனி கடன்கொடுக்க வழியறியேனேதுசெய்வேன்
நேமமுடைய தரகர் நிந்தித்து மனங்கொதித்தார். (கா)



சத்திய, சந்தி, தேவ.—ஸ்வாமி! தேவரீர் மனங்கரையாது இவ்வாறு அரசனை வருத்துவது தருமமா! வருத்தவேண்டாம். உமக்குத் தண்டனிடுகிறோம். அண்ணாந்தாளை யெடுத்து விடும்.

நக்ஷத்திரகர்.—நான் அண்ணாந்தாள் போட்டது!
அது உங்கள் கண்ணில்பட்டது.
எங்கேகாட்டு உன் கையை.
(அரிச்சந்திரனுக்கு கிட்டிபோடல் தேவதாஸனைப்பார்த்து)
பொடியா நீயுங் கையைக்காட்டு
புகலாதொன்று மிதை மாட்டு.
(தேவதாஸனுக்கும் கிட்டிபோடல்.)

தேவதாஸன்.—ஐயோ! ஐயோ! நான் என்ன செய்வேன்.

சந்திரமதி.—ஸ்வாமி! பாலனை வருத்தவேண்டாம், வேண்டுமானால் எனக்கும் கிட்டிபோடும், தேவதாஸனை விட்டுவிடும்.

சத்தியகீர்த்தி.—ஐயா! தரகரே! நீர் செய்வதடுக்காது.

நக்ஷத்திரகர்.—என்காது செவிடாய்விட்டது
என் பெண்டாட்டி நினைப்பு எனக்கு வந்துவிட்டது.

அரிச்சந்திரன்.—சிவ சிவா! கொடுங்கோன் மன்னரைப்போல் நானும் அரசாக்ஷி செய்ததாலோ இவ்விதி எனக்கிருந்தது.

அரிச்சந்திரன்.—

இராகம். கமாஸ். தாளம். ரூபகம். (மாதாடபார)

பல்லவி.

பொறுக்க முடியவில்லை ஓ பூசுரரே (பொ)

அநுபல்லவி.

மறுக்கவில்லை தரவே மறையோரே சினந்தால் (பொ)

சரணங்கள்.

கடன் கொடுத்திடவே காசியைச் சேர்ந்தோமே
கபடில்லைத்தருவேன் கட்டையவிழ்த்துவிடும். (பொ)

தேவதாஸன்.—
ஐயோ என் விரல்களும் அற்றுவிழுகிறாப்போல்
அம்மா நோகுதிதை அவிழ்த்துவிடச் சொல்வீர். (பொ)

சந்திரமதி.—

பாலகன் பதறவே    பார்க்கிறீரது நன்றோ ?
பரிதாபம் கொள்ளாது    பாதக மல்லவோ !    (பொ)

சத்தியகீர்த்தி.—

மாமுனி செய்திட்ட    வஞ்சனையை யறிந்தும்
வதைக்கிறீரிவர்களை    மாதேவ னுமைவிடார்.    (பொ)

சந்திரமதி.—

நாதனும் மைந்தனும்    ஞாலத்தில் வருந்த
வேதனைசெய்வது    வீணேவிடுப்பீர்    (பொ)

நக்ஷத்திரகர்.—(அண்ணுந்தாள் கிட்டி எடுத்துவிடல்)
பொன்னைக்கொடுக்கும் வழியைத்தேடுங்கள்.
என்னை விரைவிலனுப்பி விடுங்கள்.

சந்திரமதி.—மன்னா பொன்னை மாமுனிக்கீய வழித்தேடவேண்டும். பழிதேடவேண்டாம்.

அரிச்சந்திரன்.—உன்னையுமீயா பொன்னென்னிடமே உளதோமயிலே! உரைப்பாய் குயிலே?

சந்திரமதி.—மாமுனி கடனை மன்னாதீர்க்க வகையிலை யதனால் என்னை விற்று ஈய்வீர் பொன்னை !

அரிச்சந்திரன்.—சிவ சிவா, ஈதுன்செயலே ! மாதே இம்மொழி வழங்கலாமோ ?

சந்திரமதி.—வழங்கலாகாதெனினும் வேறுவழியில்லை யிதுவே மார்க்கம் முன் செய்த வல்வினை யிதுவே.

நக்ஷத்திரகர்.—இதுவே பொருத்தம் ! பொருத்தம் !
கொள்ளாமலே வருத்தம்
கூறுவீர்விலையே! குற்றமென்றுமிலையே !

அரிச்சந்திரன்.—வேறு வழியில்லை. வேல்விழியாளை விலைகூறுவேன் ஈறுநாள் வந்தது. இக்கதிதந்தது. புட்பங்கள் வைத்த புண்ணிய வதி முடியில் புல்வைக்கப் போந்ததின்றோ (புல்இருவர்தலையிலும் வைக்கல்) உங்களை விற்க உடன்பட்டேன் பாவியான்,



இராகம். நீலாம்புரி. தாளம். ஆதி.

மனைவியை மகனோடு    ...தனில்விற்க
வந்தேனறிவீரே!    ... கொள்ளவே.    (ம)
வினையால் நான்விற்கிறேன்    ...யாள்வீட்டு
வேலைகளை யெல்லாம்    விருப்பமாய்ச் செய்...    (ம)
இட்டபணி செய்வாள்    இனிதாய் சமைத்...
ஏந்திழையாளறிவாள்    எவராயினுங் கொள்வீர்.    (ம)
பொய்சொல அறியாளே    புட்பங்கட்ட அறிவாள்
பூவையைக் கொள்வீரே    புண்ணியரே விலைக்கு.    (ம)

[காலகண்டன் தோன்றல்.]

காலகண்டன்.—நானிந்த வயதில் நான் படும்பாடு யார் படுவார்கள் என் தலைவிதியால்.

இராகம். இந்துஸ்தானி. தாளம். ஏகம. (யாரோணம் தேரஜோ.)
மனையா ளிருவ ருண்டு.    (ம)

சனியனைப் பொருள்கொடுத்து    விலைகொண்டாற்போல்
சண்டாளிகளையே கொண்டேனென்தன் கர்வத்தால்!    (ம)
ஒருத்தித் தினம் தினம்    கேட்பாளேலட்டு
ஒருத்திக்கு வேண்டுமே விலை    உயர்ந்தபட்டு    (ம)
ஒருபக்கம் திரும்பினாலே    வருமேகுட்டு
மற்றொருபக்கம்புரண்டாலே    ஐயையோ! திட்டு!    (ம)
இரண்டு பெண்டாட்டிக்காரன் தன்    வீட்டிலிருப்பு
எப்போது மிருக்குமே சுடர்    எரி நெருப்பு.    (ம)
ஒருத்தியை ஓர்தின மையோ!    ஏதற்கோ தொட்டேன்
ஒருத்தி யுதையாலவளை    உடனே விட்டேன்.    (ம)

நான் அனுபோகசாலி ! என்னை செய்யவேண்டாம் கேலி! இரண்டு பெண்டாட்டியாலே இருக்கும் கஷ்டத்தை யொருவாயாலே ஏலாது சொல்லவே ! இரண்டு நாயை ஒன்றாயிருக்க வைத்தால் அதுவாயை சும்மைவைத்திருக்குமோ குரைக்காமலோதீர்? ஆனதால் கனவிலும் இரண்டு பெண்டாட்டியைக் கொள்ள நினைக்காதீர். இரண்டு பெண்டாட்டி வைத்தாளலாம்

என்று நினைப்போர் கழுத்தில் சுருக்கிட்டு சாகலாம் (சந்திரமதியைப்பார்த்துச் சொல்லல்) நான் இருவரால் துயர்பட்டு வந்தேன். இங்கு ஒருத்தியை வைத்தாள சக்தியற்றுவிற்கிருனே இது என்ன [illegible] (அரிச்சந்திரனைப்பார்த்து) வனிந்த மாதை விலை [illegible] கிலும் துஷ்டத்தனம்செய்தாளோ சொல்வீர் ?

அரிச்சந்திரன்.—கடன் பட்டேன் ! அதைக்கொடுக்க என் காரிகையோடு மகனை விற்க, கருதினேன் கொள்ளுவீரே. ஓ! ஐயரே.

காலகண்டன்.—நான் வேறு விதமாக நினைத்தேன். விலையென்ன வைத்தீர் ?

அரிச்சந்திரன்.—கரியின்மேல் நின்று, கவன்கல்லெறிந்து, அது போகுந்தூரம் பொன்விலை ஐயா !

காலகண்டன்.—ஓய் ! ஓய் ! என்ன காணும் உளறுகிறீர். உள்ளவிலை கேட்டால் என்னென்னமோ கூறுகிறீர்.

அரிச்சந்திரன்.—மறையோரே! உண்மை வழங்கினேன் பாரும். இந்த மறையவருக் கத்தொகை மாறுக் காய்த்தாரும்.

நக்ஷத்திரகர்.—அரிச்சந்திரன் சொல்லியது உண்மை.
நீர் அவ்விதம் கொடுப்பதே நன்மை.
உமக்கவ்வளவு தொகை யிருந்தால்
இவ்வரிவை மகனோடு உமக்கடிமையாவாள்.

காலகண்டன்.—நீர் சொல்லிய விலையை யாரிடத்தில் கொடுக்கவேண்டும். அவர் என்னுடன் வரவேண்டும்.

அரிச்சந்திரன்.—மறையோரே ! இவருக்கே கொடுக்கவேண்டும்.

காலகண்டன்.—நான் உம்மிடத்தில் கொடுப்பேன் வாரும். (கைபோடல் அரிச்சந்திரனைப்பார்த்து) நீர் உடனே முறிச்சீட்டையெழுதி தாரும்.

அரிச்சந்திரன்.—மாமுனி கடனும் மறையோரே வந்தது.

நக்ஷத்திரகர்.—மாமுனி கடனும் வந்தது மன்னா !

அரிச்சந்திரன்.—(சீட்டெழுதி புல்லோடு கொடுத்தல்) இவர்களை விற்றதாய் எழுதியே கொடுத்தேன்.



காலகண்டன்.—ஐயா ! தாகரே ! நான் கொடுக்கவேண்டிய பொன் உமது கையிலிருப்பதாக எண்ணும். ஓய் ! அரிச்சந்திரா ! நான் வீட்டை விட்டுவந்து நெடுநேரமாய் விட்டது ஊரில் ஒரு காளி யென்றால் எனக்கிரண்டு பத்திரகாளிகளிருக்கிறார்கள். நான் போகவேண்டும் விரைவில் உன் மனைவியையும் மகனையும் விடைகொடுத்து அனுப்பும்.

அரிச்சந்திரன்.—பெண்ணே ! சந்திரமதி ! அப்பா ! தேவதாஸா ! உங்களை விலைக்கு வாங்கிய மறையோரோடு போகவேண்டும்.

காலகண்டன்.—வாருங்கள். வாருங்கள்.

சந்திரமதி.—(அழுதுகொண்டு சொல்லல்) என் உயிருக்கு உயிராயிருந்த.

இராகம். தோடி. தாளம். ரூபகம். (எந்து தாகினடோ).

பல்லவி.

மன்னா விடைகொடுப்பீர் செல்லவே
இன்னும்முடனே இருந்தேன் மனமிரங்கி (ம)

அநுபல்லவி.

அன்று பிரமனும் அமைத்தது போலவே
இன்று நடந்தது எந்தன் பிராணநாதா! (ம)

சரணங்கள்.

நாடு நகர் போனது நாயகனோடிருக்கும்.
நாளும் முடிந்தது நாதா உமைப்பிரிந்து
தேடிமறையோர் பணி செய்து உடல் வளர்க்கத்
தீவினையிருப்பதால் திருமன மிரங்கியே (ம)

உடலும் உயிரும்போல உத்தமரே இருந்தோம்
ஊழ்வினை யிவ்வாறு உணர்ந்திலோ மிருப்பதை
வடவை வயிற்றினில் வைத்தது போலவே
வருத்துது என்செய்வேன் மறையோருடன் போக (ம)

அரசே உமை விட்டு அந்தணருடன் போக
அடுத்தது இன்னும் அதைத்தடுப்பாரிலை
வரிசையுடனே நீர் மாநகர் தன்னையே
மாமுனிக்கீந்தாலும் வந்ததேனிவ்விதி (ம)

அரிச்சந்திரன் —

இராகம். தோடி. தாளம்-ரூபகம்.

பல்லவி.

அன்னமே இவரோடு போகவே
முன்னம் செய்தவினை மூளைத்ததறிவாயே (அ)

அநுபல்லவி.

என்ன செய்யலாம் இவரோடு சென்று நீ
சொன்னபடி செய்து சுகமாயிருப்பாயே (அ)

சரணங்கள்.

மாமுனி கடனுக்காய் மனைவியை விற்றிட
மனது துணிந்த மாபாவி நானுனேன்
வாமமுடைய பெண்ணே மாதேவ்னை வணங்கி
மறையவர் பணிசெய்து மகனேடிருப்பாயே (அ)

இருந்தோம் நல்வினையினுல் எந்திழையாளேயறி
இன்று தீவினைப்பலன் இடர் செய மூளைத்தது
வருந்த வேண்டாம் பெண்ணே வரும் விதியை மிக்க
மகிழ்வோடனுபவிக்க மாதே நாம் வேண்டாமோ (அ)

வேதனெழுதிய விதியைத் தடுக்க அவ்
வேதனுலும் முடியா வினைப்பலனலவோ
மாதவத்தோர் வாழும் மனையில் வேலைசெய்ய
வல்விதியென வெண்ணி வருந்ாதிருப்பாயே (அ)

அடா! என் கண்மணி! நீ உன் அன்னையோடுசென்று (காலகண்டனைக்காட்டி) இவ்வேதியர் இட்டபணி செய்து உன் தாயார் துக்கப்பட்டால் அத்துக்கத்தை யாற்றிக்கொண்டிருப்பாய்.

காலகண்டன்.—இன்னும் காலம் போக்கிக்கொண் டிருக்கிறீர்கள். அடே! தேவதாஸா! வா! வா! (தேவதாஸன் கையைப்பற்றி யிழுத்தல்.)

தேவதாஸன்.—

இராகம். சாமா. தாளம். ரூபகம்.

அப்பா உம்மைவிட்டு எப்படிப் போவேன்
அடுக்காதிக்கதியே! என்னவிதியே! முனிசதியே! எனைப்போக
சாற்றவே! மனந்தேற்றவே! புவிதூற்றவே! அ அ (அ)



அரிச்சந்திரன்.—

கடனுக்குங்களை காசியில் விற்றிட
கதியிதேபாராய்! மனந்தேராய்! மூத்தம்தாராய்! என்தன்
பாலா! அனுகூலா! உயர்சீலா! சீ சீ (க)

சந்திரமதி.—

பாவிநானென்ன பாதகம் செய்தேன்
பத்தாவைப்பிரிய! மனமெரிய! தொழில்புரிய! பொல்லா
வாதனை! என்ன சோதனை! பிராணநாதனே! நா நா (பா)

அரிச்சந்திரன்.—

பிறக்கும்போது நாம் பெற்றவரமிது
பெண்ணே பிரிந்திடவே! தெரிந்திடவே! வருந்திடவே! அறிவாய்
முன்னே ஒ! மின்னே! என் பொன்னே! பொ பொ (பி)

தேவதாஸன்.—

இந்த விதியை நான் காணவோ பிறந்தேன்
என்னுடல் நடுங்குதே! இது தீதே! முனி சூதே! எனைப்பெற்ற
ஐயனே ஒ! மெய்யனே! ஒ! தூய்யனே! து து (இ)

அரிச்சந்திரன்.—

மைந்தா தேவதாஸா சிந்தை வருந்ாதே
கந்தனையே துதிப்பாய்! மனங் களிப்பாய்! துயர் தணிப்பாய்! இது
அடுக்கா! அறம்விடுக்கா! சொல்லைத் தடுக்கா! த த (மை)

சந்திரமதி.—

எங்களுக்குத்திடம் ஏற்றவிதம் சொன்னீர்
எப்படிநாம் சகிப்போம்! உயிர்தரிப்போம்! மனம் விரிப்போம்! எந்தலே
ஏற்காது! உமைப்பார்க்காது! உயிர் போக்காது! போ போ (எ)

அரிச்சந்திரன்.—

மறையோர்க்கடிமையாய் மாதேநான் விற்றபின்
மனங்கரைந்தாய் வாடி! பழிதேடி! எனைநாடி! நடுங்க
அங்கமே! வரும் பங்கமே! என் தங்கமே! த த (ம)

காலகண்டன்.—ஏதேது பெருமோஸமாக இருக்கிறது. பெருந் தொகையை வாங்கிக்கொண்டு என்னை ஏமாற்றப் பார்க்கிறுர் போல் காணப்படுகிறது. நீங்கள் வருகிறீர்களா? இல்லையா? (தேவதாஸனைப் பற்றி யிழுக்கல் அவன் அரிச்சந்திரன் கால்களைப் பிடித்துக்கொண்டிருக்கல்.)

தேவதாஸன்.—அப்பா! உங்களைவிட்டுப் பிரியேன்.

காலகண்டன்.—வரமாட்டாயா! (காலகண்டர் தேவதாஸன் கன்னத்திலடித்து இழுத்துக்கொண்டு) ஏ! பெண்ணே! உன்னையும் இழுத்துக் கொண்டு போகவேண்டுமோ?

சந்திரமதி.—வேண்டாமையா! நாதா! நான் போய்வருகிறேன் (அழுதுகொண்டு போகல்.)

காலகண்டன்.—நான் கூப்பிடக் கூப்பிட வராமலிருந்தீர்கள் (தடியால் தள்ளிக்கொண்டு) பார்ப்பான்வீட்டு பணம் சும்மா கிடைக்குமென்று நினைத்தீர்களோ (சந்திரமதியை தள்ளிக்கொண்டும் தேவதாஸனையு மிழுத்துகொண்டு போகல்.)

அரிச்சந்திரன்.—ஆ! ஆ! சிவனே! என் கண்கான என் அருமை மகனை அடித்து இழுத்துக்கொண்டு போகிறார். (எட்டி எட்டிப் பார்த்தல்.) அடித்துக்கொண்டே போகிறார். (விசனமாய் நிற்கல்.)

சத்தியகீர்த்தி.—மன்னா! நீர் மனங் கலங்கவேண்டாம். இத் தரகருக்கு விடைகொடுத் தனுப்பி நாம் போகலாம் வாரும்.

அரிச்சந்திரன்—ஐயா! தரகரே! உமக்குச் சேரவேண்டிய தொகை கிடைத்ததா?

நக்ஷத்திரகர்.—விஸ்வாமித்திரருக்கு கொடுக்கவேண்டிய பொன் கிடைத்தது!

மற்றொன்று உம்மிடத்திற்சொல்ல நா ஆடிக்குது!

அரிச்சந்திரன்.—தரகரே! உம்முடைய மனதிலிருப்பதை வெளியிடலாம்.

நக்ஷத்திரகர்.—முனிக்கடன் வாங்க என்னை யனுப்பினாரே! பனியில் நனைந்தும், வெயிலி லுலர்ந்தும், பசியில் வருந்தியும், நிசியில் நடந்தும், படாத பாடெல்லாம் பட்டேன் என்றதை நீர் அறிந்ததே! என் பிரியமனைவியை இது நாள் பிரிந்திருந்தேன் நானிது நாள் உம்மோடு திரிந்தலைந்ததற்கு எனக்குத் தரகு கொடுக்கவேண்டியதில்லையா? எனக்கு தரகுகொடுத்தே சாற்றுவாயேக.



அரிச்சந்திரன்.—ஐயா! தரகரே!

இராகம். கெண்டா. தாளம். ஆதி. (தாயுடன் கூடவே.)

தரகுவேண்டுமென் றீரிச் சமயத்திலென்னிடம்
தரவே பொருளுளதோ சாற்றுவீ ரையாவே. (த)

மாமுனி கடனுக்காய் மனைவிபிள்ளையை விற்றேன்
வகையில்லையே யுமக்கு வழங்கவே பொருள்! (த)

வேறு வகையிருந்தால் விளம்பவேண்டு மையா
விருப்பமாய்க் கொடுப்பேன் வேண்டியதையே. (த)

நக்ஷத்திரகர்.—பொருள்தரவேண்டின் பெருவழிகாணும்.

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! தரகர் இதுநாள் நம்மோடிருந்ததற்குக் கூலி கொடுக்கவேண்டியது நியாயமே. நீ மலைக்காது என்னை விற்று இவருக்கு வேண்டிய தரகைக் கொடுப்பாய்.

சத்தியகீர்த்தி.—ஆ! ஆ! அநியாயம்! அநியாயம்! ஐயா! தரகரே! நீ ரிவ்விதம் கேட்பது நியாயமா!

நக்ஷத்திரகர்.—ஏன்காணும் கோபிக்கிறீர்.

அரிச்சந்திரன் இல்லை யென்றால் தொல்லையில்லை.
நான் சொல்லாதொன்றும் போய்விடுகிறேன்.
யாரும் வெறுமையாய்ச் செய்யார் வேலை.
எனக்கிது தெரிந்தால் வராமலிருப்பேன் ஓர் மூலை.
அரிச்சந்திரன் சொல்வது நியாயம்.
நீ சொல்வதே அநியாயம்.

அரிச்சந்திரன்.—அப்பா! நீ ஒன்றும் யோசிக்காது

இராகம். இங்கிலீஷ் நோட். தாளம். ஆதி. (அரேருடிதுணியா ஆல்.)

தடுக்காதெனைவிற்றுப் பொருளைத் தரகர்க்கீவாயே

சத்தியகீர்த்தி.—தரணியில் பெரும்பழி பற்றிடவே
தருமமலவே உமை விற்றிடவே!

அரிச்சந்திரன்.—

தவமுனி கடன் வாங்க வந்தவரே
தருகேட்டால் யாருந்தடுக்காரே.

சத்தியகீர்த்தி.—

தருக்கென்னை விற்றல் அரசே தகுதி விரைவாயே!

அரிச்சந்திரன்.—

ஏற்காததையோத மந்திரி! ஏதோ கருத்தறியேன்.

சத்தியகீர்த்தி.—

இறைவா உமக்கடிமை நானலவோ
எனைவிற்று கொடுப்பது அறமலவோ

அரிச்சந்திரன்.—

இருநிலம் வாழ்முனி யொப்பாரே
வசிமனங் கொதித்து சபிப்பாரே.

சத்தியகீர்த்தி.—

இறைவா சொலவறியேன் துணிந்து எதையுஞ்செய வறியேன்!

அரிச்சந்திரன்.—மந்திரி! நீ மனங்கலங்காமல் என்னைவிற்று இவருக்குத் தரகைக்கொடுப்பாய். என் வார்த்தையைத் தட்டாமல் செய்வாய்.

சத்தியகீர்த்தி.—ஸ்வாமி! யாவும் வினையின்படி முடிவதால் நான் தடைசெய்வதில் பலனில்லை யாயினும் நானித்துரும்பை மணிமுடி தாங்கிய சென்னியிலெப்படி வைப்பேன்.

அரிச்சந்திரன்.—அப்பா! நானே வைத்துக்கொள்ளுகிறேன் (துரும்பைத் தலையில் வைத்துக்கொள்ளல்) அப்பா! விலை கூறுவாய்.

[யாவரும்போதல்.]



## Scene. 5—Forest Hut. வெட்டியான், வெட்டிச்சி.

[வெட்டியான் தோன்றல்.]

வெட்டியான்.—தும்பிடுறேன் சாமி! எம் பெண்டாட்டி ஊட்டுக்குள்ளே பூந்துக்கொண்டு வெளியே வாராமலிருக்கிறாள். நான் அவளை கூப்பிடுறேன்.

இராகம். இந்துஸ்தானி செஞ்சுருட்டி. தாளம். ஆதி.
(மஜேதாரிகிலோரிபரிலாலியா.)

அடிவாடி நீ ஓடி உனைத்தேடுறேன்
அந்தமாந்தோப்பைத்தேடி போவோம் வாடி
காட்டில் கருங்குயில் பாடுது! பார் தேடுது!
அதோ ஓடுது! வாடுது! (அ)

கட்டழகி கூடி போகலாம் வாடி
காடையும் கவுதாலியும் சத்துதடி
பச்சைப்புறாரெண்டு வந்ததடி
பாரடி யென்தன்வாயும் ஊறுதடி
காரமுறுப்பும் வேணுமடி கள்ளுரெண்டுபடி
எல்லாம் கொள்ளுமே உள்ளதை விள்ளுமே.
ஒப்பி நீ வாடி தப்பாமலோடி
வா, வா, வா, வா, நீ நீ ஏமயிலே, தா தா,
கள், கள், கள், கள், கருங்குயிலே. (அ)

வெட்டிச்சி [உள்ளிருந்து பாடிக்கொண்டுவரல்.]

இராகம். பியாக். தாளம். ஆதி.

எங்கு நீ போயிருந்தாய் என்னைவிட்டுப்பயலே (எ)

வெட்டியான்.—

அங்கு கள்ளுகடை தங்கியொருமொந்தை
பொங்கக்குடித்தேண்டி போகவிலையெங்கும்.

வெட்டிச்சி.—

வீட்டுவேலைகளை தோட்டியே யார் செய்வார் (எ)

வெட்டியான்.—

காட்டில் விறகுவெட்ட கையிலடிபட
கள்ளுகடை சென்றேன் கடிக்காதே அடிக்காதே. (ஏ)

வெட்டிச்சி.—அடா! தோட்டிப்பயலே! நீ தடிச்சிறுக்கி வேலி வீட்டுக்குப்போய் அவள்காலில் விழுந்து கிடந்ததை எனக்குத் தெரியாதென்று நினைத்திருந்தாய். நீ அவளிடத்துக்கேபோ! இங்கே வந்தால் முறத்தாலடிப்பேன்.

வெட்டியான்.—

இராகம். தீர சங்கராபரணம். தாளம். ஆதி (பாலம்கே நாகரா)

ஏதடி கோபமே என்தனது தங்கமே இன்னமே
ஏசாது பேசுவாய் கூசாது கொஞ்சிக்குலாவுவாய்
மூக்குமேல் கோபமே! ஏன்தாபமே! வேண்டாம் மனஸ்தாபமே என்தாய்(ஏ)

வெட்டிச்சி.—

பாரடா உதைப்பேன் பதைத்திட உனைவதைப்பேன்
பாசாங்கு பண்ணுநடா பறைச்சியைத் தேடிப்போடா
பாரெல்லாங்கோலி பண்ணுறாய்கேலி-பார்க்காதிருக்காளே வேலி (பா)

வெட்டியான்.—அடியே! என்தங்கச்சி! நான் உன்னைவிட்டு இனிமேல் எங்கும் போகமாட்டேன். உன் கண்ணுனை ஒரு முத்தங்கொடுப்பா யென் பெஞ்சாரி கண்ணே!

வெட்டிச்சி.—அடே! எம்மம்மரசாமி! நீ என்னைவிட்டு போகாமலிருந்தாலே போதும். (முத்தங்கொடுத்தல்.)

வெட்டியான்.—

இராகம். பியாச். தாளம். ஆதி.

காதில் பூச்சுகூடு கருத்தவளேபோடு
கரைந்துருகப்பாடு களித்திருப்பேனுன்னோடு
கருதேன் வேறுபெண்ணை ஷோக்சுந்தரம்
கடுமையாகப் பேசவேண்டாமே! குட்டி. (கா)

வெட்டிச்சி.—

பட்டுச்சேலைத்தருவேன் பதக்கம் வாங்கிவருவேன்
பாட்டுசொல்லித்தருவேன் பழங்கள்வாங்கி வருவேன்



பயலே எல்லாம் போச்சு சின்னபையா
படுசிறுக்கியாலீதாச்சு என்சாமி. (ப)

வெட்டியான்.—

வேண்டாமிந்த வாது விளம்பலாறாய் சூது
வேலியறிந்தால் தீது விளைமறியுயிப்போது
வேண்டியதை தருவேன் ஷோக் சுந்தரம்
விரும்பி காலில் விழுவேன் ஏ! கருங்குட்டி! (வே)

வெட்டிச்சி.—

வேலி என்றால் நீயே! வெகுண்டாயடா நாயே!
மினுக்கியந்த பேயே! மேல் விழுவாள் போவாயே.
வீட்டில் நுழைந்தால் துடைப்பம் முரிந்திட
வே யடிப்பேன் பறைப்பயலே சக்காளத்தி (வே)

வெட்டியான்.—நீ கோவிச்சகவாணும் எம்பெஞ்சாரிக் கண்ணே! நீ எம்பக்கத்திலே உக்காந்திருடி எந்தங்காச்சி கண்ணே!

வெட்டிச்சி.—அடா எஞ்சாமி

இராகம். தீரசங்கராபரணம். தாளம். ஆதி.

குத்தவேண்டும் கொழிக்கவேண்டும் எம்புருச ராசா!
கொஞ்சநேர மிங்கிருடா எம்புருச ராசா! (கு)

வெட்டியான்.—

குத்தவேண்டாம், கொழிக்கவேண்டாம் தங்காச்சி கண்ணே!
கூட இருந்தாற் போதுமடி பெஞ்சாரிக் கண்ணே!

வெட்டிச்சி.—

ஆக்கவேண்டும் அரிக்கவேண்டும் எம்புருச ராசா!
ஆட்டுகுட்டி மேய்த்திருப்பாய் எம்புருச ராசா!

வெட்டியான்.—

ஆக்கவேண்டாம் அரிக்கவேண்டாம் தங்காச்சி கண்ணே!
என் அருகிருந்தால் போதுமடி பெஞ்சாரிக் கண்ணே!

வெட்டிச்சி.—

கூட்டவேண்டும் மொழுகவேண்டும் எம்புருச ராசா!
கொஞ்சநேரம் இங்கிருடா எம்புருச ராசா!

வெட்டியான்.—

*கூட்டவேண்டாம் மொழுகவேண்டாம் தங்கச்சி கண்ணே*
*என் கூட இருந்தாலே போதும் பெஞ்சாதிக் கண்ணே.*

*Curtain Falls.*

**Scene. 6.—Street.** அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி, நக்ஷத்திரகர்.

[அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி, நக்ஷத்திரகர் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! நீ காலம் போக்காமல் என்னை விலைகூறுவாய்.

சத்தியகீர்த்தி.—சிவ சிவா! அரசனை விலைகூற நான் என்னபாவம் செய்தேன்.

இராகம். நீலாம்புரி. தாளம். சாபு. (சொற்றுணைவேதியன்.)

*அயோத்தியா சாண்ட அரிச்சந்திரனை விற்க*
*அடுத்தது விதியிதே ஆராகிலுங் கொள்வீர் (அ)*

[வெட்டியான் தோன்றி நிற்கல்.]

*வையத்தை முனிக்கீந்தும் மனைவி மகனை விற்றும்*
*மறையவர்தருக்காய் மன்னனை விற்கின்றேன். (அ)*
*பொய் சொலா தரசாண்ட பூபதியி வராமே*
*பொருள் கொடுத்திவரைப் புண்ணியரே கொள்வீர் (அ)*
*மாநில மரசாண்ட மன்னனே யாரும்*
*வழங்கும் பணியாவும் மகிழ்வோடு செய்வாரே (அ)*

வெட்டியான்.—ஏ! ஆண்டைமாரே! நீங்கள் பேசிக்கொள்கிறது எனக்குத் தெரியவில்லை. நீங்கள் என்ன விற்கிறீர்கள்? ஆடா! மாடா! இங்கே ஒன்றுங் காணுமே!

சத்தியகீர்த்தி.—யாரப்பா நீ? நான் ஆட்டை மாட்டை விற்கவில்லை. அயோத்தியை யரசாண்ட இவ்வரிச்சந்திர மஹாராஜனையே விற்கிறேன்.

வெட்டியான்.—ஆண்டே! நான் இவ்வூர் வெட்டியான். சுடலை காப்பவன். நான் சின்னசாதி ஆனபடியால் எனக்கு இவரை விற்பீர்களா?



அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! என்னை விலைக்கு வாங்குபவர் ஒருவரும் காணவில்லை. இவருக்கு என்னை விற்பதாகச் சொல்லுவாய்.

சத்தியகீர்த்தி.—இதென்ன அநியாயம்! சுடலைகாக்கும் புலையனுக்கோ தேவரீர் அடிமையாக வேண்டும்?

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! நீ ஏன் கவலைகொள்கிறாய். என்னை வாங்கத்தகுந்தவர் வேறொருவருமில்லை. ஐயா! வீரவாகுவே! யார் இத்தரகருக்கு அவர் கேட்கும் பொருள் கொடுப்பார்களோ அவருக்கு நான் அடிமையாவேன்.

வெட்டியான்.—ஏ! பெரிய சாதி ஆண்டே! விலை எவ்வளவு? நான் ஒண்டிக்காரனாக விருந்து சங்கடப்படுகிறேன். சுடலைகாக்க வேண்டும். செத்த மாடுகளை யுரிக்கவேண்டும். பிணஞ்சுட வேண்டும். விலையதிகம் சொல்லாமல் கொஞ்சம் எம்மூஞ்சியைப்பார்த்து குறைச்சிகிட்டு சொல்லாண்டே!

நக்ஷத்திரகர்.—அடே! நீச்சா! எனக்குப் பதினாயிரம் பொன் வேண்டும். நீ அதைக் கொடுத்து இவரை வாங்கிக்கொள்.

வெட்டியான்.—அப்பாடா! பத்தாயிரமா! ரொம்ப ஜாஸ்தி! நான் ரொம்ப நாள் சேர்த்துவைச்ச சிறுவாட்டுப் பணத்தையெல்லாம் கேட்கிறீர். இதைக் குறைக்க முடியாதா.

நக்ஷத்திரகர்.—அடே! வீரவாகு. இங்கு பேரமில்லை. நான் சொன்ன தொகையைக் கொடுக்க முடிந்தால் பார். இல்லாமற் போனால் போவாய் உன் ஊர்.

வெட்டியான்.—சரி! சரி! கோவிச்சிக வாண்டாம் பெரிய சாதி ஆண்டே! சீட்டெழுதி தொலையுங்கோ.

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! இவருடைய எண்ணம் மாறினாலும் மாறும். அவ்விதம் மாறுமுன் என்னை விற்றதாக முறிச்சீட்டு எழுதிக்கொடு.

சத்தியகீர்த்தி.—நான் எவ்விதம் இதைத் தடைபடுத்த முடியும். (சீட்டெழுதிக் கொடுத்தல்.)

வெட்டியான்.—சாமி! என்னமோ கிறுக்கினீங்களே அதிலே கொஞ்சம் வாயை வைத்துக் காட்டுங்கோ.

சத்தியகீர்த்தி.—என்னமோ உளறுகிறான்.

அரிச்சந்திரன்.—நீ எழுதியதை வாசித்துக் காட்டுவாயப்பா சத்திய கீர்த்தி.

சத்தியகீர்த்தி.—அப்பா! வீரவாகு நான் வாசிப்பதைக் கவனமாகக் கேள்.

அகவல்.

காருலாஞ்சோலை கடிமலர் வாவி
சீருலாங் காசி தேசத்தில் சுடலை
காக்கும் வீர வாகு தரகர்
வாக்கியப்படியே மன்னனுக்காய்
பதினாயிரம் பொன் தநியில் கொடுத்தான்
விதியிது தடுப்போர் மேதினி யிலிலை
சவம்சுடு வோனின் சாற்று தற்கிணங்க
அவனுக் கடிமையாய் அண்ணலை விற்றேன்.

வெட்டியான்.—ஆ! இதை எய்திய ஆண்டே நீங்க கொஞ்சம் கையெயுத்துப் போடுங்க.

சத்தியகீர்த்தி.—அப்பா! வீரவாகு! உன்னிஷ்டம்போல் கையெழுத்துப் போட்டேன்.

வெட்டியான்.—(எழுதியதை நக்ஷத்திரகரிடகம் கொடுக்கப்போகல்) ஏ ஒசந்த சாதியாண்டே! நீங்க கொஞ்சம் இதில் வாயை வைத்துப்பார்த்து நீங்களும் கையெயுத்துப் போடுங்கோ.

நக்ஷத்திரகர்.—அடா! நீச்சப்பயலே! தூரம் நில்லடா. நீபொன் கொடுக்காமல் கையெழுத்துப் போடச்சொல்லுகிறாய். என்னைத் தொடவேண்டாம் தூரம் நில்லடா!

வெட்டியான்.—ஒசந்த சாதியாண்டே! நீ பணத்துக்குப் பயப்படவேண்டாம். இந்தாங்க வாங்கிக்கிங்க. (கொடுத்தல்.)

நக்ஷத்திரகர்.—சரியாக விருக்கிறதா. (எண்ணிப்பார்த்தல்.)

வெட்டியான்.—நான் தொடக்கூடாது. என்னிடத்திலிருந்த பணத்தைத்தொட்டால் தோஷமில்லையோ. இதெல்லாம் புணத்துமேல் வைத்த காசு.



நக்ஷத்திரகர்.—பணம் இலக்ஷ்மியல்லவோ? அதற்குத் தீட்டில்லை. சரியாக இருக்கிறது.

அரிச்சந்திரன்.—ஸ்வாமி! நக்ஷத்திரகரே! நீர் கேட்டவிதம் பொன் கிடைத்ததா?

நக்ஷத்திரகர்.—அப்பா! அரிச்சந்திரா! நீயே புண்ணியவான்! உன்னைப்போல் புனிதர்கள் உலகத்திலிருக்கார்கள். என்மனம் அதிகம் சந்தோஷமடைந்தது. எனக்கு விடைகொடுத்தால் நான் போய் வருகிறேன்.

அரிச்சந்திரன்.—போற்றி! போற்றி! மறையோரே! போய்வாரும்.

நக்ஷத்திரகர்.—வாழி! வாழி! நீ நீடுவாழ்வாய். [போகல்.]

வெட்டியான்.—வ! விலைபட்ட ஆண்டே! போகலாம் வாரும்.

அரிச்சந்திரன்.—வருகிறேன் என்னை அடிமைகொண்ட எஜமானே! (சத்தியகீர்த்தி அரிச்சந்திரன் இருவரும் பின்தொடரல்.)

வெட்டியான்.—வ! விலைபட்ட ஆண்டே! விலைபடாத அந்த ஆண்டையும் வாராரே. அந்த ஆண்டே வரவேண்டாம். எம் பெஞ்சாரி சும்மா இருக்கமாட்டா.

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! எனக்கு விடைகொடு!

சத்தியகீர்த்தி.—அப்பா! வீரவாகு! என்னையும் அழைத்துக்கொண்டு போ! நாங்களிருவரும் உனக்கு அடிமைத்தொழில் புரிவோம்.

வெட்டியான்.—எனக்கு இரண்டாள் வேண்டியதில்லை. ஓராளே வேண்டும். நீ வரவேண்டாம்.

சத்தியகீர்த்தி.—என் மன்னனைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டேன்! நீ தயவுசெய்து என்னையும் அழைத்துப் போகவேண்டும்.

வெட்டியான்.—அது முடியாது! முடியாது!

சத்தியகீர்த்தி.—அவ்விதம் சொல்லவேண்டாம்.

வெட்டியான்.—இவென் யாரடா எங்கூத்திமவன்! ஏ மவனே நீ போரியா இல்லையா? எங்கூத்தியாரா! வந்தியா உன் தூம்பை கலட்டிடுவேன் தெரியுமா?

அரிச்சந்திரன்.—அப்பா! என் எஜமான் உன்னை வரவேண்டாமென்று தடுக்கும்போது நீ வரக்கூடாது. நீபோய் வருவாய்.

சத்தியகீர்த்தி.—ஆ! ஆ! விதியிவ்வாறு இருக்கிறது. ஏ! அரசே!

இராகம். காம்போதி தாளம். ஆதி.

| | |
|---|---|
| தந்தைபோலுமை யெண்ணி | தரும்பணிசெய்ய என் |
| தாயுடன் வந்தேனே | என்னரசே! |
| அந்த முனிசூதால் | அவர்களை விற்றபின் |
| ஐயோ உமைவிற்றேனே | என்னரசே! |
| பலரிட மேவல்கொண்ட | பார்மன்னன் பணிசெய்ய |
| பரமன் தன் கட்டளையோ | என்னரசே! |
| ஒன்று நினைத்திடவே | றொன்றாய் முடியுமென் |
| றுரைப்பது மெய்யானதே | என்னரசே! |
| என்று நானும்மோடு | இருப்பேனென்று நினைத்தேன் |
| இன்றோடு முடிந்ததே | என்னரசே! |

(காலைப்பிடித்துக் அழுதுகொண்டு சொல்லல்) அரசே! நான் உம்மை விட்டுப் பிரிந்து உயிரோடிருக்க முடியுமா?

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! ஊழ்வினையைத்தடுக்க யாரால் முடியும்? எனக்கு விடைகொடு.

வெட்டியான்.—அடே! விலைபட்ட ஆண்டே! நீ வாரியா இல்லையா, ஏ விலைபடாத ஆண்டே நீ போரீயா? மாட்டாயா? எம்மவனே! இந்த தடியைப் பார்த்தாயா? எங்கூத்தியாரே! நான் வாங்கிவிடுவேன்.

அரிச்சந்திரன்.—எஜமானே! போகலாம் வாரும்.

வெட்டியான்.—செத்த கண்ணுகுட்டியை வைத்திருக்கும் காவடியைத் தூக்கிக்கொண்டுவா.

அரிச்சந்திரன்.—அதுபோலவே செய்வேன். (காவடியைத் தூக்கிக் கொண்டு வெட்டியானோடு அரிச்சந்திரன் போகல்.)

சத்தியகீர்த்தி.—(அழுதுகொண்டு சொல்லல்) பொய்சொல்லா அரிச்சந்திரனுக்கு இவ்விதியா இருக்கவேண்டும். நானவரை விட்டு எவ்விதமிருப்பேன்.

[போகல்.]



## Scene 7.—Forest. வெட்டியான் குடிசை.

[வெட்டியான் அரிச்சந்திரனோடு தோன்றல்.]

வெட்டியான்.—அடி! குட்டி! பொள்ளாச்சி! ஏ! மவளே!

[வெட்டிச்சி தோன்றல்.]

வெட்டிச்சி.—ஏண்டா! ஏமவனே! இது ஆர்டா! ஒருதடி ஆண்டையைக் கூப்பிட்டுக்கொண்டு வந்தாய்!

வெட்டியான்.—வீட்டில் வேலை செய்யவும், சுடலைகாக்கவும், ஆள் வேண்டுமென்று விலைக்கி வாங்கிவந்தேன்டி.

வெட்டிச்சி.—வீட்டில் வேலை செய்யவா! அடே குடிகாரப்பயலே! இவனைப்பார்த்தால் மணலில் புடுங்கிய வள்ளிக்கெயங்குபோல இக்கிறான். இவனால் என்னவேலை செய்யமுடியும். இவென் வீடு கூட்டுவானா? வீடு மொழுவுவானா? அவித்துப் போட்டா முழுங்கிவிட்டு உக்காந்திருப்பான். உன்னைப்போல் தடியனைக் கொண்டுவந்தாய். பணத்தை பாழாக்கிவிட்டாய்!. இவன் வேண்டாம். இவனைக்கூட்டிக்கிட்டு போய் வேலி வீட்டில் விட்டுவா.

வெட்டியான்.—அடி! நீ வேலி பேச்சை எடுக்கவேண்டாமென்று எத்தனை தரம் சென்னேன்.

அரிச்சந்திரன்.—தாயே! தாங்கள் கோபிக்கவேண்டாம். தாங்களே என் எஜமானி! இவர் என் எஜமான்! நீங்கள் இட்டவேலையைச்செய்ய சித்தமாயிருக்கிறேன்.

வெட்டிச்சி.—அடே! இவன் செல்றதெல்லாம் தெரியிலே. என்ன செல்றாண்டா?

வெட்டியான்.—நான் இவங்க செல்றதெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் கத்துக்கொண்டேன். அவன் செல்றான்! எஜமான் இங்கிறதே தெரியலே. ஆங், ஆங். ஆமடி! தெரிஞ்சிகிச்சி நீ இவனுக்கு அம்மாவாம்! நான் ஐயாவாம்.

வெட்டிச்சி.—அம்மாவா எம்பிள்ளையா! ஆத்தாடி! இத்தனை பெரிசு பிள்ளையா பெத்தேன்!

வெட்டியான்.—அல்லடி! வீட்டுக்கு அம்மா! நான் வீட்டுக்கு ஐயா! அடே விலைப்பட்ட ஆண்டே உம்பேரு பெரிசா இக்குது.

உன்னை அரீச்சா என்று கூப்புட்டா, ஏன் என்று ஓடிவா தெரியுமா? நீ இந்த செத்த கண்ணுகுட்டியை உரி.

அரிச்சந்திரன்.—தங்கள் உத்தரவுபோல் செய்வேன்.

வெட்டியான்.—அடி குட்டி! எனக்கு பசிக்குது. கொஞ்சம் தண்ணி கிண்ணி இருந்தா கொடு.

வெட்டிச்சி.—வாடா தாரேன். [இருவரும் போகல்.]

அரிச்சந்திரன்.—செத்த கன்றை யுரிக்கத் திருவுளச் செயலானல் தடுக்க வல்லவர் யார்? (கன்றை யுரிக்கல் கையில் கத்திப்படல் இரத்தம் ஒழுகல்.)

இராகம். சர்லாங்கி. தாளம். திரிபுடை. (ஐயையோ யிதென்ன.)

கன்றை யுரிக்கவே கழறினு ரெஜமான்
கையில் காயம்படக் கதியுமிருந்ததோ! கடவுளே! க க (க)

செய்த தீவினைகளே செழித்துப்பலன் கொடுக்கச்
சேர்ந்ததோ இப்பிறப்பில் தெரிந்திலே னுண்மையை! தேவனே
தே தே (க)

தாயுடன் பிள்ளையைத் தரணியில் விற்றும்
தாழ்ந்த பணிசெய்யத் தலைவிதி யிருந்ததோ! சங்கரா! ச ச (க)

[வெட்டியான் தோன்றல்.]

வெட்டியான்.—அடே! அரீச்சா! என்ன வேலை செய்தாய்? கண்ணுக்குட்டியெ யுரிக்காமல். கையெப்பிடிச்சிக்கிட்டிருக்கிரு. ஓ! ஓ! கையை அறுத்துக்கொண்டாயா! ஏண்டா இப்படித்தானு வேலை செய்யப்போகிருய்?

அரிச்சந்திரன்.—எஜமானே! நான் எப்பொழுதும் கன்றையுரிக்கவில்லை. என் அஜாக்கிரதையால் கையில் கத்திபட்டது. இனிமேல் ஜாக்கிரதையாக இருப்பேன்.

வெட்டியான்.—போதும்! போதும்! நான் உன் எயவுக்குப் பணத்தைக் கொட்டிவிட்டேன். நீ வீட்டில் வேலை செய்ய முடியாது. நீ சுடலை போய் காத்துப் பிணஞ்சுடு. பிணம் வந்தா எனக்கு கலங்க கொடுக்கவேண்டியது கொள்ளித்துணி ஒண்ணு, காப்



பணம் ஒண்ணு, வாக்கரிசி ஒண்ணு. இதில், துணியும், காப்பணமும், எனக்குக்கொடுத்துவிட்டு வாக்கரிசை நீஎடுத்துக்கோ. அது எனக்கு வேண்டாம். நீ அதைச்சோருக்கித் துண்ணுக்கொண்டிரு, தெரியுமா! பணம் பத்திரம். நீ எங்கூடவா சுடுகாட்டைக் காட்டுறேன்.

[அரி]ச்சந்திரன்.—தங்களுடைய உத்தரவு பிரகாரம் நடக்கச்சித்தமாக இருக்கிறேன்.

[இருவரும் போகல்.]

# Act V.

**Scene.1.—Street.** சந்திரமதி, தேவதாஸன், அயலகத்துப்பிள்ளைகள்.

[சந்திரமதி, தேவதாஸன், அயலகத்துப்பிள்ளைகள் தோன்றல்.]

சந்திரமதி.—அப்பா! தேவதாஸா! நீ ஜாக்கிரதையாக இப்பிராமணப் பிள்ளைகளோடு சென்று, தருப்பை ஸமித்து கொண்டு வருவாய். (அயலகத்துப் பிள்ளைகளைப் பார்த்து) தம்பிமார்களே! இவனைக் கவனித்துப்பார்த்து அழைத்துப்போய் அழைத்துவாருங்கள். ஆ! ஆ! இதென்ன!

இராகம்-ஆகிரி. தாளம்-ரூபகம். (நீதிநெறியுணர்க.)

எதிரில் வருஞ்சகுனமாகாது ஆகாது    தேவதாஸா    என்ன<br>
கதிகாண விருக்குதோ காசினியிலறியேன்.    தேவதாஸா<br>
எண்ணெய்க் குடமொன்று எதிராக வருகுதே    தேவதாஸா    நமது<br>
கண்ணெதிராக கருடனுங்கட்டுதே    தேவதாஸா<br>
மறையோன் தனித்தையோ வருகிறான் பார்ப்பாயே. தேவதாஸா    மயிர்<br>
ஜிரைக்கும் நாவிதனும் தேடிவருகிறானே    தேவதாஸா<br>
ஒற்றைக்குரலோடு ஓல மிடுகிறாளே    தேவதாஸா    விறகு<br>
கற்றைக்கொண்டு நாம் காணவருகிறாளே    தேவதாஸா<br>
மூண்டைச்சி யெதிராக முடுக்காக வருகிறான்    தேவதாஸா    நான்<br>
கண்ட பின்னிவைகளைக் கவலையாய்ப்போனது தேவதாஸா<br>
ஆகாதசகுனங்கள் அப்பனே காணுதே    தேவதாஸா    இன்று<br>
போகாமலிருந்தாலே புதல்வனே உத்தமம்    தேவதாஸா

தேவதாஸன்.—தாயே! தாங்கள் கவலை கொள்ளவேண்டாம்.

இராகம்-காம்போதி. தாளம்-திரிபுடை. (என்னும் எண்.)

ஈசன் துணையிருப்பார்    அம்மணி<br>
ஏனோகவலை கொண்டீர்    அம்மணி<br>
மோசம் வராதெனக்கு    அம்மணி அம்மணி அம்மணி!<br>
முனியாது விடையளிப்பீர்.



சந்திரமதி.—

ஆகாத சகுனங்கள்    மகனே<br>
ஆன பின்னுன்தனை    மகனே<br>
போக உன்னையனுப்ப    மகனே மகனே மகனே!<br>
பொருந்துமோ என்மனம்.

தேவதாஸன்.—

வருவது வந்தேதீரும்    அம்மணி<br>
மறையோர் கோபிப்பாரே    அம்மணி<br>
தருப்பைக் கேகாதிருந்தால்    அம்மணி அம்மணி அம்மணி!<br>
தாளேனடி படவே.

சந்திரமதி.—

கந்தன் துணையிருப்பார்    மகனே<br>
கடுகி வருவாயே நீ    மகனே<br>
இந்த பிள்ளைகளோடு    மகனே மகனே மகனே!<br>
எகுவாய் பாலகா.

1-வது அயலகத்துப்பிள்ளை.—அம்மணி! தாங்கள் கவலை கொள்ளவேண்டாம். நாங்கள் ஜாக்கிரதையாக தேவதாஸனை யழைத்துப்போய் அழைத்துவருகிறோம்.

சந்திரமதி.—ஆம்! தம்பிமார்களே! இந்த உபகாரம் நீங்கள் செய்யவேண்டும். அப்பா! தேவதாஸா! நீ இவர்களைவிட்டு எங்கும் போகாமல் ஜாக்கிரதையாகப் போய்வருவாய்.

தேவதாஸன்.—தாயே! தாங்கள் சொல்லியவிதம் செய்வேன். தாங்கள் நெடுந்தூரம் வந்துவிட்டீர்கள். விரைவில் தாங்கள் வீட்டுக்குப்போங்கள். ஐயரும் அவர் மனைவிகளும் கோபிப்பார்கள்.

சந்திரமதி.—நீபோய் விரைவில் வருவாய் கண்மணி (முத்தங்கொடுக்கல்.)

[அயலகத்துப் பிள்ளைகளோடு தேவதாஸன் போகல்.]

சந்திரமதி.—(எட்டி எட்டிப்பார்த்தல்) அவர்கள் போய்விட்டார்கள். நாம் நெடுநேர மிங்கிருந்தால் தேவதாஸன் சொல்லியவிதம் ஐயரும் அவர்மனைவிகளும் கோபிப்பார்கள். நாம் விரைவில் போகவேண்டும். [போகல்.]

**Scene 2.—Front Forest.** அயலகத்துபிள்ளைகள், தேவதாஸன்

1-வது அயலகத்துபிள்ளை.—தம்பி தேவதாஸா! நீங்கள் யார்? நீங்கள் ஏன் காலகண்டர்வீட்டில் வேலை செய்கிறீர்கள். உன் பேரை மட்டும் அறிந்தோம். மற்றவைகளை நீயே சொல்லவேண்டும்.

தேவதாஸன்.—அண்ணன்மார்களே! நான் யாரென்றும் நாங்களிந்தக் காசிபட்டணத்துக்கு ஏன் வந்தோமென்றும் நாங்கள் காலகண்டருக்கு அடிமையான காரணம் இன்னதென்றும் சொல்லுகிறேன்.

இராகம். இந்துஸ்தானி. கமாஸ். தாளம். ஆதி. (மரபுராதேசெலி.)

அகமகிழ்ந்துரைப்பேன் அறிந்திட நீங்களே. (அ)
சிகரிலா அயோத்தி நேசித்து ஆண்டுவந்த
நிருப னென்றந்தையே நேசரே அறிவீரே. (அ)
அரசாளுங்காலத்தில் ஐயன் விஸ்வாமித்திரன்
அடுத்துப்பொன் கேட்டாரே அரிய வேள்விசெய. (அ)
அவர் மகிழ்ந்திடப்பொன்னை அளித்ததை வாங்காமல்
அடைக்கல மென்றேகி அனுப்பினர் மிருகத்தை (அ)
வனவேட்டையாடவே மன்னன் சென்றாரங்கு
மாதிருவரையேவ மருவவே யழைத்தாரே. (அ)
மாநகர் கேட்டாலும் மகிழ்வுடன் கொடுப்பேன்
மாதரைத் தொடேனென்றார் மாமுனி நகர்கேட்டார். (அ)
தவமுனி மகிழவே தானுண்ட நகர்தந்தார்
தான்முன்வைத்தபொன்னைத் தரவேண்டு மென்றனர். (அ)
அப்பொன்னைத் தரவே என் அன்னையோ டென்தனை
அந்தணர்க் கடிமையாய் அறிவீரே விற்றனர் (அ)

1-வது அயலகத்துப்பிள்ளை.—இதென்ன அநியாயம்! நாடு நகரத்தையுங் கைக்கொண்டு தவமுனி பொன் வேறு கேட்பது அடுக்குமா? அரசகுமாரன் அந்தணர் வீட்டில் அடிமைத்தொழில் புரிவது அடுக்காது! அடுக்காது!

2-வது அயலகத்துப்பிள்ளை.—எல்லாம் விதியின் பிரகாரம் முடியும்.



3-வது அயலகத்துப்பிள்ளை.—நாம் துக்கப்பட்டுக் கொண்டிருப்பதில் பலனொன்று மில்லை. வாருங்கள் நாம் சமித்து தருப்பை முதலானதைச் சேகரிக்க வேண்டும்.

எல்லாரும்.—ஆம்! ஆம்! [யாவரும் போகல்.]

---

**Scene 3.—Forest.** (புற்று) தேவ, அயலகத்துப்பிள்ளைகள்.

[தேவ, அயலகத்துப்பிள்ளை சமித்து தருப்பை கட்டோடுதோன்றல்.]

1-வது அயலகத்துப்பிள்ளை.—அடே! நமக்கு வேண்டியவைகளெல்லாம் கிடைத்தன. நாம் வீட்டுக்குப்போகலாம் வாருங்கள்.

2-வது அயலகத்துப்பிள்ளை.—ஆம்! ஆம்! போகலாம் வாருங்கள்.

தேவதாஸன்.—அண்ணமார்களே! அதோ நமக்கெதிரில் தருப்பை அதிக உயரம் வளர்ந்திருக்கிறது. அதை நான் பிடுங்கிவருகிறேன். நீங்கள் சற்றுநேரம் இவ்விடத்திலிருங்கள்.

1-வது அயலகத்துப்பிள்ளை.—அப்பா! தேவதாஸா! உனக்கு நாங்கள் கட்டிக்கொடுத்திருக்கும் தருப்பை போதுமானது. வேண்டாம்! வேண்டாம்! அவ்விடத்தில் ஏதாகிலும் பூச்சிப் புழுவிருக்கும். அங்குபோக வேண்டாம்.

தேவதாஸன்.—அண்ணேன்! தருப்பை அதிக மிருக்கிறது. ஒரு நொடியில் பிடுங்கி வருகிறேன். (தன்னிடத்திலிருந்தவைகளை வைத்து விட்டுப்போகல்: தருப்பையைப் பிடுங்கல்: பாம்பு கடித்தல்.)

தேவதாஸன்.—ஆ! ஆ! மோசம் போனேன். ஐயோ! அண்ணன்மார்களே. என்னை

இராகம். வராளி. தாளம். ஆதி. (ஆ இதென்ன ஆச்சர்யம்.)

பாம்பு கடித்ததை யோ

[அயலகத்துப்பிள்ளைகள் ஓடிப்போய்ப் பிடித்துக்கொள்ளல்.]

பாம்பு கடித்ததே பதறியேகையினில்
பாவி நான் என்செய்வேன் பகர்ந்ததைத் தடுத்தேனே (பா)

விதிவலியோஇது வேண்டா மென்றதைத்தேடி
விரைவாக ஒடினேன் வெகுண்டரி கடித்ததே (பா)
அண்ணன்மார் நீங்களே அழைத்தேகினுல் வீட்டில்
அரவுகடிமருந்து ஐயர் கொடுப்பாரே! (பா)

1-வது அயலகத்துப்பிள்ளை.—ஐயோ! நாம் இதற்கென்ன செய்கிறது? நாம் எவ்விதமும் தேவதாஸனை விரைவில் வீட்டுக் கழைத்துக் கொண்டு போகவேண்டும்.

2-வது அயலகத்துப்பிள்ளை.—ஆம்! விரைவில் போனுல் பாம்புகடிக்கு மருந்து தேடிக் கொடுப்பார்கள். ஐயோ! இதென்ன தேவதாஸனுக்குக் கால்கள் தடுமாறுகின்றன.

தேவதாஸன்.—அண்ணமார்களே! என் கண் இருண்டுபோகிறது. மயக்கமாக விருக்கிறது. என்னுல் நிற்க முடியவில்லை. (உட்கார்ந்து கொள்ளல்.)

இராகம். சுத்தசாமா. தாளம். ஏகம். (என்ன நான் செய்வேண்டா.)

மார்படைக்குதையோ மனமுந்திடுக்கிடுதே
சோர்வடையுதே கைகால் தோழரே என்ன செய்வேன் (மா)
உங்கள் சொல் தட்டியே ஓடினேன் குசையிடம்
அங்கம் வருந்தவே அரவு கடித்ததே (மா)
மூச்சுவிட என்னுல் முடிய வில்லையே
பேச்சும் தடைபடுதே பேதை நான் வருந்தவே (மா)
என்னுல் நடக்கவே ஏலாது எனைவிட்டு
அன்னையை யுடனே அனுப்புவீ ரிவ்விடம் (மா)

1-வது அயலகத்துப்பிள்ளை.—அப்பா! தேவதாஸா! நீ பயப்படவேண்டாம். உன்னை நாங்கள் தூக்கிக்கொண்டு போகிறோம். உனக் கொன்றுமில்லை: நீ பயப்பட வேண்டாம். வீட்டுக்குப்போன உடன் மருந்து கொடுத்தால் குணமாய் விடும். நீ மெள்ள எழுந்து நில்: நாங்கள் தூக்கிக்கொள்கிறோம்.

தேவதாஸன்.—(மூச்சுவிட்டு மூச்சுவிட்டுச் சொல்லல்) தோழமாரே! உங்களுக்கு நமஸ்காரம் செய்கிறேன். நீங்கள் எனக்காகக் கவலை கொள்ளவேண்டாம். எனக்கின்றோடு ஆயுள் முடிந்தது. எனக்குப் பெருமூச்சு வருகிறது. ஆ! ஆ! எனக்கென்ன விதியிருந்தது.



இராகம். முகாரி. தாளம். சாபு. (இதோமி லீலனே.)

ஐயோ காசிநாதா! அரவுகடிக்க
அடுத்ததோ விதி அடவியிலிறக்க (ஐ)
நாட்டை விட்டுக்காசி நகரடைந்தன்று
நாகத்தாலே மாள நாள்வந்ததோ இன்று (ஐ)
அடவியில் மாண்டேன் அரவு என்னைக்கடிக்க
அன்னை பொறுக்காளே அங்கம் துடிதுடிக்க (ஐ)
தந்தையறிந்தாலே தாங்காதுயிர் மாள்வார்
தந்துமது பாதம் சங்கரனே ஆள்வீர் (ஐ)

என்னுயிர் நீங்கும் போலிருக்கிறது. தாகம் அதிகமாக இருக்கிறது.

1-வது அயலகத்துபிள்ளை.—அடா! சுப்பா! நீயும் விஸ்வநாதனும் ஓடிப்போய் ஜலங்கொண்டு வாருங்கள். பாத்திரம் இல்லாமற் போனுலும் வஸ்திரத்தை யாவது நனைத்துக்கொண்டுவாருங்கள்.

சுப்பனும், விஸ்வநாதனும்.—நாங்கள் நொடியில் கொண்டு வருகிறோம் [இருவரும் போகல்.]

தேவதாஸன்.—அண்ணமாரே! நாக்கை உள்ளுக்கிழுக்கிறது.

1-வது அயலகத்துப்பிள்ளை.—நானும் போய்ப் பார்த்து ஜலங்கொண்டு வருகிறேன்.

[1-வது அயலகத்துபிள்ளை போகல்.]

தேவதாஸன்.—ஏ! சம்போ! சங்கரா! ஏ மஹாதேவா! ஏ நீலகண்டா! ஏ! கருணாநிதி! உன் திருவடி நிழலில் சேர்த்துக்கொள்ளும். (பேசாமலிருக்கல்.)

[அயலகத்துப்பிள்ளைகள் தோன்றல்.]

1-வது அயலகத்துப்பிள்ளை.—அப்பா! தேவதாஸா! ஜலம் கொண்டு வந்தோம். வாயைத் திற. என்ன பேசாமலிருக்கிறுன். (மூக்கில் கையை வைத்தும் மார்பைத் தொட்டும் பார்த்தல்.) ஓ! ஓ! மோசம் செய்து விட்டான். உயிர் போய்விட்டதே.

[யாவரும் அழுதுகொண்டு சோல்லல்.]

யாவரும்.—நாங்கள் என்ன செய்வோம்,

இராகம். அரிகாம்போதி. தாளம். ரூபகம். (உண்டேஇரா.)

ஐயையோ இக்கதி நீ அடைந்திடுதலாகாது.
வையமாளும் மன்னன் மகன் வனத்தில் பாம்பாலிறக்க (ஐ)

அப்பா உன்தன் அன்னையிடம் அடுத்து நாங்களுன் கதியை
எப்படி யுரைப்போமடா ஏங்கியவள் மனம்பதற (ஐ)

பதனமாக உன்னையே பார்த்துக்கொள்ளுவோ மென்று
இதமாக உரைத்து வந்தோம் என்ன சொல்லுவோ மிப்போது(ஐ)

1-வது அயலகத்துப்பிள்ளை.—நாம் இங்கிருந்து துக்கப்பட்டிருப்பதில் பிரயோசன மில்லை. நாம் இவனை அம்மரத்துக்கருகில் வைத்து இவன் தாயிடத்தில் போய்ச் சொல்வதே உத்தமம்.

[தேவதாஸனைக் கொண்டுபோய் வைத்தல்.]

2-வது அயலகத்துப்பிள்ளை.-நான் அவன்தாயிடம் சொல்லமாட்டேன். உங்களில் யாராகிலும் சொல்லவேண்டும்.

1-வது அயலகத்துப்பிள்ளை.-யாராகிலும் ஒருவர் சொல்லவேண்டியதே! போகலாம் வாருங்கள்.

[யாவரும் போகல்.]

---

## Scene 4.—Street. சந்திரமதி.

[சந்திரமதி தோன்றி எட்டிப்பார்த்தல்.]

சந்திரமதி.—தேவதாஸன் இன்னம் காட்டில் என்ன செய்கிறான் ? நெடுநேரமாயிற்றே அவன்.

இராகம். பியாச். தாளம். ஆதி. (மன்னன் வாக்கா.)

பசியால் வருந்துவானே பாலகனைக்காணேனே (ப)

பசியால் வாடியே படுத்தானோ எங்கேனும்
பதறுதே என்னுடல் பாவியென் செய்குவேன் (ப)

மறையவர் வீட்டிலே யானாட்பணி செய்து
வனத்தில் தருப்பை தேடி வரப்போனவனின்னம் (ப)

அந்தணர் கோபித்து அடிப்பார் நேரஞ்சென்றால்
அதற்கு நான் என் செய்வேன் அறியாப்பாலகனும் (ப)



அதோ அயலகத்துப்பிள்ளைகளெல்லாம் வருகிறார்கள். (எட்டி எட்டிப்பார்த்தல்) தேவதாஸன் அவர்களோடு வரவில்லை போல் காண்கிறதே! அவனைப் பின் விட்டோ வருகிறார்கள் ?

[அயலகத்துப்பிள்ளை தோன்றல்.]

சந்திரமதி.—அப்பா ! தம்பிமார்களே ! தேவதாஸன் எங்கே அவன் உங்களோடு நடந்து வரவில்லை யென்றோ அவனைத் தனித்து விட்டு வந்தீர்கள்.

அயலகத்துப்பிள்ளை.—

இராகம். பியாக். தாளம். ரூபகம். (தாயை விட்டு வந்து காட்டில்)

உரைப்போம் தாயே வனத்தில் உன்மகனை விட்டோம் - பொல்லா
அல்லலே பட்டோம் (உ)

தருப்பையொரு சுமை கொடுத்தோம் தாயே தேடியே யாரும்
திரும்புங்காலோர் புதரைக்கண்டு சென்றானோடியே கண்டு
நின்றோம் வாடியே (உ)

வேண்டாமென்று தடுத்தோமே வினையால் சென்றானே
தீண்டலுமே மலைத்து சிறியன் நின்றானே வினையை
அறிய வென்றானே (உ)

பாழும் புதரிலிருந்த நாகம் பதட்டமாகவே உன்தன்
பாலகனைக் கடித்ததம்மா பதறி ஏங்கவே உயிர்
கதறி நீங்கவே (உ)

சந்திரமதி.—ஆ ! மகனே ! (கீழ்விழல்) ஐயோ ! மகனே ! நான் என்ன செய்வேன். அப்பா ! தேவதாஸா ! நீ பாம்பு கடித்தாமாண்டாய். ஐயையோ ! தெய்வமே ! நானினிமேல் உயிரோடிருக்க முடியுமா ஐயோ ! பாலகா !

இராகம். எதுகுலகாம்போதி. தாளம். திரிபுடை. (என்ன விதி என்றன் விதி)

ஐயையோ நான் என்ன செய்வேன் அறியாப்பாலகன் மாள
அடுத்ததே! துன்பம் தொடுத்ததே!
மெய்யே உரைப்பதை விரதமென்றதால் வந்த
விதியோ! இந்த கதியோ!

அடா ! மகனே ! சகுனந் தடுக்கிறது. நீ போகவேண்டா மென்று சொன்னபோது.

வருவது வருமென்று வனத்திற் கேகிப்பட்டாய்
வாதனை என்ன ! சோதனை !
அருமையாய் நான் பெற்று அரவுக்குக் கொடுத்தேனே
ஐயனே ! அடா துய்யனே !
தீவினையை நொந்தழுதால் செல்வனே வந்துநுயர்
தீர்ப்பாயே! மகிழப் பார்ப்பாயே!
பாவிபடும் வேதனையைப் பார்க்கச் சகியாமலோ
பட்டாயே ! உயிர் விட்டாயே.

அடா ! மகனே ! என்னுடல் துடிக்கக் குடல் நடுங்கவா என்னை விட்டுப்போனுய். நீ தனித்து எங்கு கிடக்கிருயோ. ஆ ! ஆ ! என்னவிதி நமக்கிருந்தது. அப்பா ! பிள்ளைகளே ! என்மகன் எங்கிருக்கிறன் ? எங்குவிட்டு வந்தீர்கள் ?

1-வது அலசயத்துப்பிள்ளை.—தாயே ! ஒற்றடியாய்ப்போகும் மார்க்கத்தில் நிற்கின்ற ஆலமரத்தின் பக்கத்தே ! கொஞ்சம் வடக்கே குசைபடர்ந்த இடத்தே உள்ளமரத்தருகே விட்டுவந்தோம்.

[அயலகத்துப் பிள்ளைகள் போகல்.]

சந்திரமதி.—அடாமகனே ! நமக்கு முடிவுகாலம் வந்துவிட்டது நான் ஓடி மறையவரிடத்தில் உத்தரவுபெற்று உன்னைத்தேடி ஓடிவருவேன். (எழுந்து ஓடல்.)

## Scene 5.—Interior.—காலகண்டன், மனைவிகள்.

[காலகண்டன் தோன்றிமறைந்து நின்றுகேட்கல்.]

2-வது காலகண்டி.—அடி யெங்குபோனுய் என்னசெய்கிருய் ?
உன் புருடனுக்குக் கௌபீனமோ நெய்கிருய் ?

1-வது காலகண்டி.—நீ யாரடி. என்னை வந்து கேட்கிருய் ?
நான் ஏமாந்தவளென்றோ பார்க்கிருய் ?



2-வது காலகண்டி.—நானல்லவா எல்லாமுனக்குத் தந்தவள் ?

1-வது காலகண்டி.—சீ நாயே ! நானும் உன்னைப்போல் வந்தவள்.

2-வது காலகண்டி.—நாரி ! நீயா எனக்குச் சமானம்

1-வது காலகண்டி.—இந்நாளே கெட்டுப் போ முன் மானம்

2-வது காலகண்டி.—நல்லது நல்லது உன்னைப் பார்ப்பேன்

1-வது காலகண்டி.—நெடு நாளாயுள்ள வஞ்சம் தீர்ப்பேன்

2-வது காலகண்டி.—என்னோடு வாயாடாதே மட்டி

1-வது காலகண்டி.—இங்கிருக்காது போவாயே எட்டி

2-வது காலகண்டி.—கிழட்டு மாப்பிள்ளையை கையில் போட்டுக் கொண்டாயோ ?

1-வது காலகண்டி.—திருட்டு மாப்பிள்ளையை இன்று கண்டாயோ ?

2-வது காலகண்டி.—சீ ! சீ ! பேசாதே உன்னை உதைப்பேன்!

1 வது காலகண்டி.—உன்னைக் கொண்டுபோய்க் கொல்லையில் புதைப்பேன்.

2-வது காலகண்டி.—சிறுக்கி உன் கூந்தலைப்பற்றிப் புடைப்பேன்!

1-வது காலகண்டி.—பொறுக்கி உன்தலையைத் தடியாலுடைப்பேன்!

2-வது காலகண்டி.—இந்தா கொழுக்கட்டை [குத்தல்.]

1-வது காலகண்டி.—எடுத்துவருவேன் துடைப்பக்கட்டை [போகல்]

காலகண்டன்.—(Aside) இரண்டு பெண்டாட்டிதேடிய கொண்டாட்டம் எல்லாம்போய் வந்ததிந்தத் திண்டாட்டம்.

[காலகண்டன் வெளிவரல்.]

காலகண்டன்.—அடி ! சந்தி ! சந்தி ! எங்கு சென்றுயடி சந்தி !

2-வது காலகண்டி.—அவளிருக்காள் யேனோ வாங்கிவந்தாய் மந்தி !

காலகண்டன்.—அடே வருவாய் ஓடியே பொடியா ! பொடியா !

2-வது காலகண்டி.—அவன் வரவில்லையே இன்னம் ஏ ! தடியா !

காலகண்டன்.—அடி மரியாதையாக இருந்து உழைப்பாய்!

2-வது காலகண்டி.—நீ குரியாக இருந்து பிழைப்பாய் !

காலகண்டன்.—நீ என்னோடெதிர்த்து வார்த்தையாடினல் உன்னை உதைப்பேன்!

2-வது காலகண்டி.—உன்னிறுமாப்பு நீங்கவே வதைப்பேன் !

காலகண்டன்.—இந்தச் சனியனை ஏனோ கொண்டேன் !

2-வது காலகண்டி.—பொல்லா சதிகாரபயலென்று கண்டேன்.

காலகண்டன்.—தடுத்து தடுத்துப்பேச எங்குற்றாய்?

2-வது காலகண்டி.—நீ அடுத்து அடுத்து வசைகூற எங்குகற்றாய்?

காலகண்டன்.—வார்த்தை யாடினாலின்னம் தாடையிலடிப்பேன்!

2-வது காலகண்டி.—பார்த்துக்கொள் உன் கையை நானே ஒடிப்பேன்!

காலகண்டன்.—பழிகாரி நீயே!

2-வது காலகண்டி.—சதிகார நாயே!

காலகண்டன்.—ஈதேது பெருமோசம்!

2-வது காலகண்டி.—இவனோடிருந்து பேசுவதே தோஷம். (கன்னத்தில் அடித்துப் போகல்.)

[1-வது காலகண்டி தோன்றல். காலகண்டன் அவளிடம் நெருங்காமல் தூரத்தில் நின்று சொல்லல்.]

காலகண்டன்.—பெரியாளே விரைவாக வாராய்!
அந்தப் பெருமாட்டி செய்ததைப்பாராய். (கன்னத்தைக்காட்டல்.)

1-வது காலகண்டி.—அவளிடம் நானும் உன்னா லடிபட்டேன்.

காலகண்டன்.—அவள்மேலிருந்த ஆசையை எல்லாம் விட்டேன்.

1-வது காலகண்டி.—எத்தனை தரம் இவ்விதம் உரைத்தாய் ?
இருக்காமல் அவ்விதம் அவளைப்பார்க்கத் துடித்தாய்!
அவளிடம்போ அது என் மனமென அறியும்
என்னை யடிக்கத்துணிந்தால் துடைப்பம் உன் தலையில் முறியும்

[1-வது காலகண்டியைப் பிடித்துக்கொண்டு சொல்லல்.]

காலகண்டன்.—கண்ணே கற்கண்டே கரும்பே.
கடுஞ்சினம் விட்டெனை விரும்பே,



1-வது காலகண்டி கையைவிடல். 2-வது காலகண்டி 1-வது காலகண்டி கையை இழுத்துவிட்டு நிற்கல். காலகண்டன் அவள் முகத்தைப் பார்க்காமல் பாடல்.)

இராகம். இந்துஸ்தானி. தாளம். ரூபகம். (தேரிசித்வன்னே.)

காசினிக்குள்ளாகக் கட்டழகி நீ நம்பு
கண்களிரண்டுங் கூரம்பு !

2-வது காலகண்டி.—
ம். ம்.

காலகண்டன்.—
உண்மையே.

2-வது காலகண்டி.—
இது பொய் ! பொய் ! பொய் !

காலகண்டன்.—
நாசியோசண்பகம் நங்கையுன்னிடை பூங்கொம்பு

2-வது காலகண்டி.—
நகைக்கச் செய்கிறீர் வம்பு. ம். ம்.

காலகண்டன்.—
உண்மையே.

2-வது காலகண்டி.—
நம்பேன் பொய் ! பொய் ! பொய் !

காலகண்டன்.—
பல்லுகளெல்லாம் நல்லமுத்து !

2-வது காலகண்டி.—
பகராது ஒடு.

காலகண்டன்.—
பவழத்துண்டைப் பாரிலொத்து.

2-வது காலகண்டி.—
பாவையைத் தேடு.

காலகண்டன்.—
அல்லலடைய என்தன்சித்து உன்தனை.

2-வது காலசண்டி.—
இக்கேடு.

காலகண்டன்.—

*அன்றியிலையே நீயே அத்து அறிவாய்.*

2-வது காலகண்டி.—

இப்பாடு.

காலகண்டன்.—

*கடைக்கண் பாரடி ! கவலைதீரடி !*

*கண்மணி கழறுவாயித்தறி தெம்பு.* (முகத்தைப்பார்க்கல்.)

காலகண்டன்.—(Aside) நான் என்ன காரியம் செய்தேன் ! என் முதல் மனைவி நிற்கிருளென்று அவளைப் புகழ்ந்தேன். நின்றிருந்தவளை யறிந்திருக்கிறேன் என்றே காட்டிக்கொள்ள வேண்டும். ஏ ! கண்மணி ! நீ என்னருகில் வந்திருப்பதை யறியாமற் போனேன் என்று நினைக்கவேண்டாம். நீயே என் குலதெய்வம். எனக்கு வேறு திக்கில்லை ஏ !

*இராகம்-இந்துஸ்தானி. தாளம். சாபு. (மானே மானேரே.)*

*மானே உன்னிரு மலர்ப்பாதம்சதியே*

(முத்தங் கொடுக்சப்போகல் அவள் தள்ளிவிடல்.)

2-வது காலகண்டி.—

*வாராதே போவாய் மாதிடமித்ததியே*
*உன்சதியே ! நீ பதியே ! உன்மனைக்கவள் சிதியே !*

(தள்ளிவிட்டுப்போகல்.)

[காலகண்டன் 1-வது காலகண்டி அருகில் சென்று.]

காலகண்டன்.—

*தேனே உன்மொழியறிவேன் என்னை நீ*
*சினந்தாலுயிர்தரியேன்.*

1-வது காலகண்டி.—

*போவாயே ! ஏ பேயே ! ஏமாற்றலானுயே !*

காலகண்டன்.—

*ஏமாற்ற வரவில்லையே மயிலே !*
*என் வார்த்தை நம்புவாயே குயிலே !*

1-வது காலகண்டி.—

*இது கதை ! உதை வரு மித்ததியே !*

[உதைத்துப்போகல்]



[காலகண்டன் தலையில் கையை வைத்துக்கொண்டு பெருமூச் செறிந்து சொல்லுதல்.]

காலகண்டன்—

*நண்பரே ! கொள்ளவேண்டாம் இரு பெண்டாட்டி*
*இரு நமனுய்வந் துயிரைவாங்கும் சினமூட்டி*
*நானிரண்டு பெண்டாட்டியாலடைந்த சுகத்தைக்கண்டீர்.*
*நல்ல கனவிலும் நனவிலும் இருவரை வேண்டீர்*
*நான் இனிமேல் என்ன செய்ய முடியும்*
*எல்லாம் என் தலையில் வந்தேவிடியும் !*

[சந்திரமதி தோன்றல்.]

சந்திரமதி.—(அழுதுகொண்டு சொல்லல்.) ஸ்வாமி! *தருப்பைகொண்டுவர அயலகத்துப் பிள்ளைகளோடு சென்ற என்கமனைப் பாம்பு கடிக்க வனத்திலிறந்ததாக அயலகத்துப் பிள்ளைகள் சொல்லிப் போயினர்.*

காலகண்டன்.—ஆ ! ஆ ! *என் பொருள் வீணுய்ப் போனதா ! ஐயோ ! நான் என்ன செய்வேன். என்ன மடத்தனம் செய்தேன். அப்பொடியன் ஜாதகத்தைப் பார்க்காமல் பணம் கொடுத்தது பைத்தியக்காரத்தனம் ! அடி ! சந்தி உனக்கிருக்குந் துக்கத்தைவிட எனக் கதிகமாப் போனதே ! இதையறிந்தால் என் மனைவிகள் அதிகம் கோபிப்பார்களே ! என் பொருள் வீணில் விரயமானதைக் குறித்துத் துக்கப்படுவேனு ! என் பெண்டாட்டிகள் இதையறிந்து என்னைக் கோபிப்பார்களே அதற்காகத் துக்கப்படுவேனு ! போ ! போ ! இங்கு நிற்க வேண்டாம். உன்னைப்பார்க்கப் பார்க்க என்பொருள் போனதைக் குறித்துத் துக்கப்பட வேண்டியதாயிருக்கிறது.*

சந்திரமதி.—*என் மகன் வனத்தில் இறந்துகிடக்கிறுன். நான்சென்று அவனை யெடுத்துக்கொண்டு போய்த் தகனம் செய்துவர உத்தரவு கொடுக்கவேண்டும்.*

காலகண்டன்.—*சபாஷ் ! நன்றாயிருக்கிறது. நீயுமா ஓடிப்போகப் பார்க்கிருய் ! அடி சந்தி ! நீயும் எனக்கடிமை. அவனும் எனக்கடிமை. விலைப்பட்டவனுக்குத்தாயும் தந்தையுமுண்டா ? போ ! போ ! பைத்தியக்காரி. அவன் போனதால் பொருள்போன*

தென்று துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நீயும் அந்த சாக்கைக் காட்டி என்னை ஏமாற்றிப் போகப் பார்க்கிறாய். அது முடியாது முடியாது.

[2-வது காலகண்டி தோன்றல்.]

2-வது காலகண்டி.—(காலகண்டனைப்பார்த்து) ஏ! கிழட்டுப்பிணமே! நீ இவளிடத்தில் தனித்து என்ன பேசிக்கொண்டிருக்கிறாய்?

சந்திரமதி.—தாயே! என்மகன் அடவியிலிறந்ததால் அவனைக்கொண்டு போய்த் தகனம் செய்துவர உத்தரவு கேட்டேன். தாங்கள் உத்தரவு கொடுக்கவேண்டும்.

2-வது காலகண்டி.—ஏ! கிழட்டு முண்டமே! இவர்களை விலைக்கு வாங்கி வந்ததில் என்ன பலன் கண்டோம்! போச்சே! போச்சே! பொருளெல்லாம் விருதாவாச்சே!

சந்திரமதி.—தாயே! வனத்துக்குச் சென்றுவர உத்தரவு கொடுப்பாயம்மணி.

2-வது காலகண்டி.—அடியே! துஷ்டே! நீ காட்டுக்குப் போவாயோ வீட்டிலிருப்பாயோ எனக்குத் தெரியாது. நான் உன் எஜமானுக்கெஜமானியே யன்றி, வீட்டுவேலைக் கெஜமானியல்ல. வீட்டு வேலைக் கெஜமானியைப் போய்க் கேட்டுக்கொள். (காலகண்டனைப் பார்த்து) பணத்தை யெல்லாம் தொலைத்தாய்! பரிதாபத்தோடு தலையில் கையை வைத்தாய் தூ! படுவே!

[2-வது காலகண்டி போகல்.]

[1-வது காலகண்டி தோன்றல்.]

1-வது காலகண்டி.—அடி-சந்தி! நீ எப்பொழுது போனாய் இப்பொழுது வந்தாய். வீட்டுவேலைகளை யார் செய்வார்களென்று எண்ணினாய்?

சந்திரமதி.—தாயே! என் மகன் அடவியில் இறந்தான். அவனையெடுத்தடக்கம் செய்துவர உத்தரவு கொடுப்பாயம்மணி.

காலகண்டன்.—ஐயையோ! அவனும் தொலைந்தானா! அவனுக்குக் கொட்டிய பணத்தோடு நாள்தோறும் ஒருபடியரிசி அவித்துக் கொட்ட வேண்டியதாயிருந்தது. அது மிச்சமானதே லங்கோஷம்! நீ உன் மகனைப் பார்க்கப் போகிறேன் என்று போக்குக்



காட்டி நீயும் ஓடிப்போகவா பார்க்கிறாய். அது முடியாதகாரியம். வீட்டில் வேலையதிக மிருக்கிறது.

சந்திரமதி.—தாயே! பெற்றவயிறு பற்றியெரிகிறது. நான் ஓடிப் போகமாட்டேன். நான் விரைவில் வந்துவிடுகிறேன்.

காலகண்டி.—நீ போகவேண்டுமானால் வீட்டிலுள்ள வேலைகளெல்லாம் முடித்து வைத்துவிட்டுப் போய் விடியுமுன் வந்துவிட வேண்டும்.

சந்திரமதி.—தாயே! தங்களுடைய உத்தரவுபோல் செய்துபோகிறேன்.

காலகண்டி.—அடி நாளை சமைக்க அரிசியில்லை. ஆனதால் முன்னே நெல் குத்து, மற்ற வீட்டுவேலைகளையும் செய்வதோடு தெருவுக்கு சாணம் தெளித்து வீடு பெருக்கி கோலமிட்டுப் போவாய். நீ போகுமுன் என்னிடத்தில் சொல்லிப்போவாய்.

சந்திரமதி.—பாக்கியம் தாயே! (உரல் கொண்டுவந்து வைத்து)

இராகம். அபுரூபம் தாளம் ரூபகம். (நெல்லு குத்துற பெண்ணே.)

காட்டில் மகன் சாக கடுகிப்போக என்னை
வீட்டில் நெல்லுகுத்த விதித்தாளந்த வேலை ஆ-ஆ-ஊ-ஊ.
பெற்ற வயிறு பற்ற பிள்ளைதனைக் கொடுத்தேன்
அற்றம்நோக்கிப் பாம்பு ஐயோ கடித்திடவே. ஆ-ஆ-ஊ-ஊ.
செத்தபிணங்கண்டு தீர்த்திடவே குறையை
உத்தமியுந்தடுத்து உரைத்தாள் வேலைசெய்யஆ-ஆ-ஊ-ஊ.
மகனே உன்னைக்காண வருவேன் நெல்லுகுத்தி
ஜகத்திலெனைப்போலச் சண்டாளிகளில்லை ஆ-ஆ-ஊ-ஊ.

நெல் குத்திவிட்டேன் மற்றவேலைகளைச் செய்துவிடவேண்டும். (உரலைக்கொண்டுபோகல்). நான் காலையில் நேரஞ்சென்று வருவேன் என்று கருதியோ இப்பொழுதே சாணம் தெளித்துப் பெருக்கிக் கோலமிடச் சொன்னாள். (சாணம் தெளித்தல்.)

இராகம். சங்கராபரணம், தாளம். ரூபகம். (மாடுமேய்க்கவே.)

மன்னவனைப்பிரிந்தும் மறையோர்க்கடிமையாய்
மகனையிழந்தஎன் வழி! வழி! வழி! வழி!

வேந்தன் மகளாகி வேதியன்வீட்டினில்
வேலைகள்செய்திட விதி ! விதி ! விதி ! விதி ! (ம)

காசிநகர்சேர்ந்து காட்டில் குசைதேடிக்
கடும்பாம்பால் மகன்மாண்ட கதி ! கதி ! சதி ! கதி ! (ம)

தடுத்தே எனைப்போகச் சாணந்தெளித்திடச்
சாற்றினளென்ன சதி ! சதி ! சதி ! சதி ! (ம)

அடாமகனே ! எல்லா வேலையையும் முடித்தேன் வீட்டையும் பெருக்கிவிட்டு வருவேன்.

இராகம். ஸ்ரீராகம். தாளம். ஆதி. (காசிநாதா.)

பவமே ! இது நான் செய்த தவமே ! ஐயையோசெய்த (ப)

தவத்தால்மதிதயன் தனக்கு நான் மகளாய்
தரணியாள் மன்னனை சார்ந்துநான் செய்த (ப)

மாமுனிகேட்கவே மன்னன்பரிவாய்
வழங்கினர் நாடவர் மகிழ்ந்திடச்செய்த (ப)

மாமுனிகடனுக்கு மறையோர்க்கடிமையாய்
மனைபெருக்கிடவே மனங்கொண்டுசெய்த (ப)

[காலகண்டி தோன்றல்.]

சந்திரமதி.—தாயே ! நான் எல்லாவேலையையும் செய்துவிட்டேன். எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

காலகண்டி.—(சாணம் தெளித்ததையும் பெருக்கியதையும் பார்த்துச் சொல்லல்.) நீ விரைவில் போகவேண்டும் என்கிற நோக்கத்தால் ஒன்றையும் ஸரியாகச் செய்யவில்லை. அரிசியைச் சரியாகத் தீட்டவில்லை. சாணம் தெளித்ததெல்லாம் கட்டிமுட்டியாக விருக்கிறது. பெருக்கிய விடமெல்லாம் குப்பை நிறைந்திருப்பதால் கால் நறநறவென்கிறது. பாத்திரங்களிளெல்லாம் பற்றப் படியேயிருக்கிறது. இந்த வேலைகளையெல்லாம் இப்படியேவிட்டா போகவேண்டுமென்கிறாய். என்ன செய்யலாம்? ஓடிப்போய் விடியுமுன் ஓடிவா.

சந்திரமதி.—பாக்கியம் தாயே! [சந்திரமதி போகல்.]



## Scene 6.—Street. சந்திரமதி.

[சந்திரமதி தோன்றல்.]

இராகம். தேசிகதோடி. தாளம். ஆதி. கம்சர்பர்

அப்பா உனை நாடியே
அடர்வனம் வருவேன் தேடியே ! ஒடியே ! (அ)

ஒப்பியே போக உரைத்தாள் பார்ப்பினி
உன்முகம் பார்க்கவே
எப்படியாகினும் இரவில் தனித்தே
இடுகாடு சேர்க்கவே ! (அ)

வனமுள்ளிழுத்தாலும் வழிதெரியாமல்
மயங்கினும் வருவேன்.
சினங்கொள்ளவேண்டாம் சிறுவனே முத்தம்
தேடி உனக்குத் தருவேன் (அ)

எங்கடா இருக்கிறாய் ஏனோ பதில் சொல்லாய்
என்மீதில் கோபமோ
தங்கமே தரளமே ! தடவி நடக்கிறேன்
தனையா மனஸ்தாபமோ ! (அ)

[ஓடல்.]

## Scene 7.—Front Forest. சந்திரமதி.

[சந்திரமதி தோன்றல்.]

இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. என் மகன் எங்கிருக்கிறானோ ! எங்கு போய்த் தேடுவேன் ?

இராகம். சுத்தசாமா. தாளம். ஏகம்.

ஐயையோ நான் பெற்ற அருமைப்பாலகனே
அடவியில் எங்குற்றாய் அப்பா ! அப்பா ! அப்பா ! (ஐ)

கூவியழைத்தாலும் குரல் கொடுக்காமலே
கொடுமை செய்கிறாயே குமரா ! குமரா ! குமரா ! (ஐ)

பாவிநான் உனைத்தேடிப் பார்க்கினும் காணேமே
பதைக்குதே என்னுடல் பாலா ! பாலா ! பாலா ! (ஐ)

## Scene 8.—Forest. சந்திரமதி.

[சந்திரமதி தோன்றல்.]

அடா! அடா! என் அருமைச் செல்வமே! நீயா அங்கிருப்பது (ஓடிப்போய் விழல்)

இராகம். சாமா. தாளம். சாபு. (என்ன செய்வேனடா என்மகனே.)

அடடா இந்தகதி அடுக்குமோ வந்திட
  ஐயையோ நான் பெற்ற பாலகனே!
விடம்தலை ஏறியோ விட்டாய் உயிரையே
  விதியிவ் வாறிருந்ததோ பாலகனே!
தொட்டகுறை தீர்த்துத் தோன்றலே எகினாய்
  துணையெனக் காரென்தன் பாலகனே!
மட்டிலாப்புகழ்பெற்ற மன்னனறிந்தாலே
  மனங்கொதிப்பாரே பாலகனே!
பத்துமாதம் தாங்கிய பாவி யென்வயிறு
  பற்றி யெரியுதே பாலகனே!
சத்தியமுவனைதக் களித்தோ கேட்கிறாய்
  கபடின்று கொண்டாயோ பாலகனே!

அடா! என் கண்மணி! நான் என்ன செய்வேன். ஐயோ!

இராகம். முகாரி. தாளம். சாபு. (காசிக்குப்போயேனே.)

பல்லவி.

மகனே நீ மாண்டு மாற்றினாயாவும்

அநுபல்லவி.

மகனே நம்மை மீட்க மன்னன் தேடிவந்தேன்
மைந்தனெங்கே என்றால் மறுமொழி என் சொல்வேன்! (ம)

சரணங்கள்.

மாமுனி யெங்கள் மேல் வஞ்சங் கொண்டாருண்டு
  வஞ்சமுனக்கும் பாய்பே வந்தது எதுண்டு
கோமான் தன் நாட்டையே கோசிகர்க்கீந்ததும்
  குமரா என் தந்தை நாட்டைக் கொடுப்பாரென்றிருந்ததும் (ம)



பனியால் நனைந்தாயே பானுவால் காய்ந்தாயே
  பசியால் வருந்தியும் பாலா மாளவில்லையே
அனியாய மாசவே ஐயோ வயிறெரிந்திட
  அரவாலிறந்தாயே அடுக்கா சதிவந்திட (ம)

ஏழைகளைத் துணிந்து இகழ்ந்ததை யறிந்திலோம்
  இவ்விதியேன் வந்ததோ இயம்பத் துணிந்திலோம்
தோழிகளோடு நீ ஆங்குவதை விட்டுத்
  துணிந்தாய் மண்ணிலுருளத் துடிக்குதே பார்த்திட்டு (ம)

உன்னுடன் மாளாது உயிர் வைத்திருக்கிறதால்
  உத்தமனே பேசாது உறங்கினாய் நிலத்தின் மேல்
மன்னனு மென்னைக்கண்டு வார்த்தையாடு வாரோ
  மகனேடி றக்காமல் மாபாவிக் கென் சீரோ (ம)

மறையவர்க்கடிமையாய் வருந்தி வேலைசெய்து
  மகனே இளைத்தோ நீ மரித்தாயோ அல்லது
இறையவர் சுமைமீட்கார் என்றெண்ணித் துயர்பட்டு
  இருப்பதாகாதென எண்ணியோ உயிர் விட்டாய் (ம)

அடா! என் செல்வமே! உனக்கிவ்விதமான முடிவா வந்தது. அடா மகனே! குத்துவிளக்கெரிந்தால் கண்கள் கூசுதென்பாய். இந்தக் கொள்ளிவாய்ப் பேய்களால் கண்கள் கூசா துறங்கினாய். அடா! என் கண்மணி மெத்தையின் படுத்துறங்கினாலும் தேகம் வருந்துதென்பாயே: இந்தத் தரையில் எவ்விதம் படுத்திருக்கிறாய் அடா! என் கட்டிக்கரும்பே! உன்னை பாம்பு கடித்தவுடன், எவ்விதம் துடித்தாயோ! எவ்விதம் பதறினாயோ! என்னென்ன நினைத்தாயோ! என்னென்ன சொன்னாயோ! எவ்விதம் அழுதாயோ! அடா! என்னுயிருக் குயிராய்ப்போலிருந்த உத்தமனே! நமக்கு நேரிட்ட கதியை நினைத்துத் துக்கப்பட்டால், எனக்குத் தைரியம் சொல்லுவாயே! நானிப்பொழுது படும் வேதனையைக் கண்டு மௌனமாயிருக்கிறாயே! இது உன் மேலான குணத்துக் கழகாகுமா அடா!

இராகம் செஞ்சுருட்டி. தாளம் ரூபகம். (பாலா நீதலைகொடுக்கவே.)

மகனே நீ எனைவிடுத்தே மறைந்தாய்! உயிர்துறந்தாய்!
  மன்னவன் நம்மையே இந்நகர் தன்னிலே
முன்னம் விற்றதாலோ என்னை விட்டேகினை. (ம)

மாமுனி மனமகிழ்ந்திட — வந்தார்! நாட்டைத் தந்தார்!
வஞ்சனையாகவே — சென்றிணுய்ப்போகவே
அஞ்சாது சென்று நீ — துஞ்சிணுய்ப் பாம்பாலே. (ம)
பாவி யென்னுடல்பதறப் — பட்டாய்! உயிர் விட்டாய்!
பாவி யுனைப்பெற்றேன் — மேவி யிக்காசியில்
கூவியழுதுன்தன் — ஆவி விடுத்தாயோ. (ம)

அப்பா! தேவதாஸா! நான் உன்னேடிறந்தால் உன்னை யார் கொண்டுபோய்த் தகனம் செய்வார்கள். நாம் சுடலைபோகலாம் வாடா! என்மகனே! (தோளில் சாய்த்துக்கொண்டு) அப்பா கண்விழிக்காது.

இராகம். கேதாரம். தாளம். ஆதி.

தூங்கிணுயோ பாலா! — தோஷியென் தோள்மீது
சொல்லாம லொன்றுமே — சோர்வடைந் தின்னமும். (தூ)
பாங்கிசனோடு நீ — பஞ்சணையின்மீது
படுத்துறங்குதல் விட்டு — பாவி யென்தோள்மீது. (தூ)
பார்ப்பானுக் கேற்றிடும் — பணிவிடை செய்ததால்
பாலகா களைத்தோ — பாவியென் தோள்மீது. (தூ)

[பேய்கள் தோன்றல்.]

பேய்கள்.—ஆ! ஆ! ஊவ! ஊவ! போடு! போடு! பிள்ளையைப் பிடித்திழுக்கல்.

சந்திரமதி.—

போடு போடென்றபேய் — போகத் தடைசெய்யுதே
புத்திரா விழிக்காது — புதுமையா யின்னமும். (தூ)

[சந்திரமதி போகல்.]

---

## Scene 9.—Burial Ground. அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி.

[அரிச்சந்திரன் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—ஆ! காசிவிஸ்வநாதா! உன்கருணையா இது.

இராகம். பீலு. தாளம். சாபு. (கேபாதே ஸபாகுல்.)

ஓ! ஈசா! விஸ்வேசா! — உணர்ந்திலேன் விதியே
ஒப்பியே சட்டில் — ஓதினுர் காக்கவே. (ஓ)



முனிவரும் சினந்து — மொழிந்த சாபமே
முடிமீதேறியே — மோசமே செய்ததே! (ஓ)
பிணமும்சுடவே — பெருமானுரைத்தான்
பேதையான் செயவே — பிரமன் விதித்தான்! (ஓ)
மனைவிமகனை — மறையோர்க்கே விற்றும்
வல் விதியால்வீர — வாகுக் கடிமைப்பட. (ஓ)

[சத்தியகீர்த்தி தோன்றல்.]

சத்தியகீர்த்தி.—என் மன்னனே! என்னரசே! உமக்கிவ்விதியா இருந்தது.

இராகம். முகாரி. தாளம். ஆதி. (எபுடுக்ருபை.)

பல்லவி.

ஐயையோ இவ்விதி மன்னு — அடுக்குமோ வந்திடவே! (ஐ)

அநுபல்லவி.

வையமாளவே செங்கோல் — மலர்க்கை தாங்கியன்று
ஐயோ சவம் சுடுகோல் — அரசே தாங்க இன்று! (ஐ)

சரணம்.

பொய் சொலாதிருந்த — புண்ணியம் பலித்ததோ!
பூவையை மகனேடு — பூசுரர்க்கு விற்றதோர்
செய்கையே திரண்டு — சேர்ந்துபலன் கொடுத்ததோ!
தீதைச் செய்துமுனி — திருமனங் களித்ததோ! (ஐ)

நாடு நகரளித்தீர் — நங்கைகளை வெறுத்தீர்!
ஞாலத்தில் கீர்த்தியை — நாதனே நீர்வகித்தீர்!
தேடியே முனிக்குத் — தீங்கென்ன இழைத்தீர்!
தோற்றங் கொண்டாரதனுல் — தீச்சுடலை காத்தீர்! (ஐ)

உம்மையித் துன்பங்கள் — ஒப்பியே செயலாமோ?
ஊழ்வினை யென்றாலும் — ஒவ்வாப் பழிபோமோ?
செம்மலே இச்செய்கை — சிவனுக்கும் ஏற்குமோ?
திரிசங்கு மைந்தர்க்கு — சேருங்கதி யீதாமோ! (ஐ)

அரிச்சந்திரன்.—அப்பா! சத்தியகீர்த்தி! வாழ்வு வந்தகாலத்திலும், தாழ்வு வந்தகாலத்திலும், நாம் ஒரே விதமாயிருக்க வேண்டுமேயன்றித் துக்கப்படுவது நம்மைப் போன்றவர்களுக் கழகல்ல. நீ யிதையறிந்தும் துக்கப்படுகிறாய்!

சத்தியகீர்த்தி.—அரசே! உணவுக்கென்ன செய்கிறீர்.

அரிச்சந்திரன்.—அப்பா! இங்கு பிணம் சுடுவோர்கள் கொடுக்கும் காசையும், துணியையும், என் எஜமானுக்கு அனுப்பிவிட்டு, பிணத்துக்குப் போடும் வாய்க்கரிசியையே என் உணவுக்கு வைத்துக்கொள்ள என் எஜமான் உத்தரவு செய்திருக்கிறார்.

சத்தியகீர்த்தி.—நான் வாய்க்கரிசியைப் பசுவுக்குக் கொடுத்து உண்ணச்செய்து பின் அதன் கோமயத்தோடு வருவதை எடுத்து சுத்தஞ்செய்து சமைத்துத் தருகிறேன். தாங்கள் வைத்திருக்கும் அரிசியை என்னிடம் கொடுக்க வேண்டுகிறேன்.

அரிச்சந்திரன்.—வருவாய் நானதைக் கொடுக்கிறேன்.

[அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி இருவரும் நீங்கல்.]

[மற்றோர் பக்கம் சந்திரமதி தேவதாஸனோடு தோன்றல்.]

சந்திரமதி.—அடா! மகனே! நீ அயோத்தியில் மாண்டிருந்தால் இவ்விதமாகவோ நீ மயானத்திற்குப் போவாய். அப்பா! நான் எதை நினைத்துத் துக்கப்படுவேன். உன்னைத் தகனஞ்செய்ய முதலாய்க் கட்டையில்லாமல் எரிந்த குறைக்கட்டைகளைத் தேடிக்கொண்டு வருவேன்: நீ இங்கு சற்று நேரமிருப்பாய். (தேவதாஸனை வளர்த்திவிட்டு)

[சந்திரமதி குறைக்கட்டைகளைப் பொறுக்கல்.]

இராகம். தேசிகதோடி. தாளம், ரூபகம்.

பாலாயுனைத் தகித்திடவே
சிலாகுறைக் கட்டைகளைத்
பார்ப்பேன் கட்டை சுடுகாட்டிலே
தேடிக்கொணர்வேன் மகனே! (பா)

நீ யிறந்தாயுனை தகிக்க
ஓ! இவ்விதியுனக்கு
சீர்வாகமிலாமற் போனது
ஒப்புமோபொருந்திடவே! (பா)

என்னசெய்வேனே மகனே!
முன்னம் தலையிலயன்
எரிந்தகட்டை மீதிலேற்ற
மோசமாக எழுதினனோ (பா)

சந்திரமதி.—(குறைக்கட்டைகளைப் பொறுக்கி அடுக்கி தேவதாஸனை வைக்கல்) அப்பா! அயோத்தியை யரசாண்டவரின் மகனைத் தகனம் செய்வது இவ்விதந்தானோ!



12085
O-1,2 M99?1A
7114

அகவல்.

அப்பா உன்தனை
ஒப்பிலாத்தவத்தில்
ஆசைப்படியே
வாகுடைத்தோள்வலி
மணந்திடத்தந்தார்
மணியேயடைந்தாய்
மாதமுதலில்
மாதமிரண்டில்
மூன்றும் திங்கள்
தோன்றலே கொஞ்சம்
உணவைத்தள்ளினேன்
குணமுள அரசனும்
ஈரிருமாதம்
சேரடைந்ததுவே
பொன்னிறமாகப்
தின்னவே புளிப்பைத்
ஆறுமாதம்
கூறுவேன் கனத்தது
திங்களில் சுழுத்தும்
எட்டாமாதம்
பட்டேன் துணையாய்ப்
மற்றொரு திங்கள்
யிற்று விடிப்பாய்
பத்தாம்மாதம்
இத்தாய் மகனே
பாவியான் பெற்ற
ஆவிபோலெண்ணி
சீராட்டிப் பாராட்டித்
தாராட்டிப் பாலூட்டிச்
தூண்டா விளக்கின்
வேண்டா மென்றதால்
கட்டிய மஞ்சத்தில்
இட்டமாய் வளர்த்தோம்
நாட்டையளிக்க
வாட்டமின்றி
வார்த்திடமகனே

எப்படி எரிப்பேன்
உதித்தேன் என்தனை
அருமை யென்தந்தை
மன்னனுக் கென்னை
வாழ்ந்தோம் என்கண்
மாபாவி வயிற்றில்
மகனேயுருத்தேன்
மசக்கை யடைந்தேன்
முளைத்திட என்தன்
துயர மடைந்து
உண்டவை தக்கா
கொண்டார் கவலை
எய்திட என்னுடல்
சேரவோர் திங்களும்
போனதென் தேகமும்
தேடினேன் விருப்பாய்
அப்பா வயிறு
குமார வழாந்
தேகமு மிளைத்தது
எழுந்திட வருத்தம்
பாங்கிய ரிருந்தார்
மகனே கூடவ
இறைவர் காணப்
பதறவே தேகமு
சிந்தை மகிழ்ந்தோம்
பாலகா! உன்னை
அருமையாகவே
திருமஞ்சனமாட்டி
சசி ஒளிகாட்டித்
ஜோதியைச் சினந்து
விளக்கொளி தரமணி
காளையே கிடத்தி
வந்தலே மாமுனி
நவின்ற காலை
வந்தாய் தாரை
வனத்தில் நெருப்பைப்

பார்த்தபொழுது பலியாவேன் என்றாய்
தரகனால் கிட்டியும் தரித்தாய் ! மறையோன்
கிரகமடுத்துக் கிடைமாடு மேய்த்தாய் !
விறகுகொணர்ந்தாய் ! விரும்பி தருப்பை
பெறவேசென்று பெருப்பாம்பின் வாய்க்கு
இரையானாயப்பா ! என் தன் தோள்மேல்
இருளில் கொணர்ந்து இடுகாடு சேர்த்தது
முறையோ குமரா ! முனியின் சூதோ
குறைக்கட்டை ஏற்றினேன் கும்பி எரியவே.

அடா மகனே ! நீ எங்களுக்குக் கொள்ளி வைப்பாயென்றிருக்க உனக்குக் கொள்ளி வைக்கவேண்டியதோ விதி. (நெருப்பைக் கொளுத்தல்.)

[அரிச்சந்திரன் தோன்றல்.]

அரிச்சந்திரன்.—நள்ளிரவில் ஓர் பெண்பிள்ளை ஒருவருமறியாமல் ஓர் பிணத்தைக் கொளுத்துகிறாள். நம்முடைய எஜமானை வஞ்சிக்கவல்லோ எண்ணினாள். (ஓடி உதைத்துத் தள்ளல்.)

இராகம். காபி. தாளம். ஆதி. (மனமோக சாரஸ.)

பல்லவி.

இரவில் தனித்துப் பிணங் கொண்டுவந்தாய். (இ)

அநுபல்லவி.

அறைவாய் நீ யாரோ அறியாமலிந்த (இ)

சரணங்கள்.

தரவேண்டும் காசை தராமலே மறைவாய்
தகுமோ பிணஞ்சுட சரியோ மாதே (இ)

சந்தடி யடங்கப்பின் சார்ந்தே ஓர் மூலையிலே
சவத்தை வைத்துத்தீமூட்ட சண்டாளியார் நீ (இ)

காற்பணம் முழத்துண்டு காரிகையே நீதந்து
கட்டையிலேற்றுவாயே கசடி ஒழித்திந்த. (இ)

சந்திரமதி.—அடா ! என்செல்வமே.



இராகம். சிம்மேந்திரமத்திமம். தாளம். சாபு. (மாதசிந்த.)

மகனே சுடலைகாக்கும் மனித னுதைத்திடவே
வல்விதி யிருந்ததோ மரித்தபின்னு முனைச்சப்பா ! (ம)

சுகமாய் வாழ்ந்திருந்தாயே சுடலை காப்பவனே
துடுக்காகவே பதைத்து சுதனே உதைத்தானே ! (ம)

அரவு உன்னைக்கடித்த ததனாலுயிரைவிட்டாய்
அருமை மகனேயின்று ஐயையோ உதைபட்டாய் ! (ம)

இதுதானோ இன்னமும் இருக்குதோ வேறுகதி
என்னென்ன நாமடைய எழுதினானோ விதி. (ம)

அரிச்சந்திரன்.—ஏ ! மாதே ! நீ இரவில் ஒருவருமறியாமல், ஓர் மூலையில், உன் மகனைக் கொண்டுவந்து நீ சுடலைக்காப்போனுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுக்காமல் கொளுத்தயோசித்தாய். நான் அதைக்கண்டு தடுத்ததால் நீ துடுக்காக என்னைப்பேசி யழுகிறாய். நீ கொடுக்கவேண்டிய காற்பணமும் கொள்ளியாடையுங்கொடுத்து உன் மகனைக் கொளுத்துவாய்.

சந்திரமதி.—ஐயாவே ! நான் நாதியற்றவள், எனக்குப் பணமேது ! கொள்ளியாடை ஏது ! நீர் கேட்பதைக் கொடுக்க எனக்குச் சக்தி யிருக்குமாயினும், எனக்குச் சுற்றத்தார் இருந்தாலும், இவ்விரவில் என் மகனை நானே தோளில் தூக்கிக்கொண்டு வருவேனா ? எரிந்து மீதியாக விருக்கும் கட்டைகளைப் பொறுக்கி அவைகளால் வைத்துக்கொளுத்தத் துணிவேனா ? என்னுடைய நிற்பாக்கிய ஸ்திதியைப் பார்த்து என்மகனைக் கொளுத்த உத்தரவு செய்யவேண்டும். (அரிச்சந்திரன் காலைப் பிடித்தல்.)

அரிச்சந்திரன்.—ஏ ! ஏ ! மாதே ! என்னைத் தொடவேண்டாம். நீ என்னைப் புலையனென் றெண்ணினாய் ! நான் புலையனல்ல. நான் புலையனுக்கு அடிமையென அறிவாய். நீ ஏழையென்று சொல்வதால் என்னால் செய்யதக்கது ஒன்றுண்டு. அதாவது என் எஜமானுக்குச் சேரவேண்டிய காற்பணமும் முழத்துண்டும் நீ கொடுக்கவேண்டியது கட்டாயம். என் எஜமான் எனக்கென்று சொல்லிய வாய்க்கரிசியை வாங்காமல் விட்டுவிடுவேன். அதை நீ கொடுக்கவேண்டியதில்லை.

சந்திரமதி.—ஐயாவே! முழுத்துண்டும் காற்பணமும் கொடுக்க என்னிடம் பொருளிருந்தால், உமக்கு வாய்க்கரிசி கொடுப்பது பெரும்பாரமல்லவே!

அரிச்சந்திரன்.—ஏ! மாதே! நான் என் எஜமான் சொற்படி நடக்க வேண்டியவன். அவர் வார்த்தையைத் தள்ளி நடப்பதும் அவருக்குத் துரோகம் செய்வதும் முடியாத காரியம்.

சந்திரமதி.—ஐயாவே! நீர் உம்முடைய எஜமானுக்கு என்னுடைய நிர்பாக்கிய ஸ்திதியைச் சொல்லி என் மகனைக்கொளுத்தக் கருணைசெய்ய வேண்டும்.

அரிச்சந்திரன்.—ஆ! ஆ! அடி பாதகி.

இராகம். மோகனம். தாளம். சாபு. (மகனே மகனே என்ற ஜெகஜாலி.)

இரவில்தனித்து வந்து    இடுகாட்டில் பிணம் சுடும்
ஏ கள்ளிபொய் சொன்னது    யாரடி? அதை
விரைவாய் யெனக்கு நீ    ஓதடி?
கரைந்தாயுன் சொல் நம்பேன்    காசியிலுனைப்போல
ஒருவருமில்லை யென்று    தேரடி!    (இ)

படுமோசமாகவே    பகர்ந்தாய் திக்கில்லையென்று
பதறுதே என்னுடல்    பாதகி!
சதியாகச் சாற்றினாய்    காதகி!
விடுமோ இப்படிப் புன்மை    விளம்பாது உண்மையைக்
கொடுமையாய்ப்பொய் சொன்ன ரோதகி!    (இ)

பணத்தைக்கொடுக்காமலே    பார்க்கிறாய் எய்க்கவே
பலிக்காது உன்ஜபம்    போனது!
மலைக்காதே க்ஷணம்    வெளியானது!
மணமகனிருப்பதை    மாதேகழுத்தில் தாலி
அணிந்தாயதுபோது    மானது!    (இ)

சந்திரமதி.—ஆ! ஆ! (கீழ்விழுந்து புரளல், பின் எழுந்து உட்கார்ந்து)

இராகம். பியாக். தாளம். ரூபகம்.

ஐயையோ இதென்ன விதி!    அமைத்தானே பிரமனும்
அறியாத என்தாலி அறிந்தானே தோட்டியும்!
ஐயையோ! ஐயையோ! ஐயையோ! ஐயையோ! ஐயையோ!    (ஐ)



காசினிபோனாலும்    கணவனைப்பிரிந்தாலும்
காசிக்கு வந்தபின்    கற்புமாபோனது
கடவுளே! கடவுளே! கடவுளே!    (ஐ)
மன்னனன்றி யொருவர்க்கும்    வாய்க்காது காணவென்று
வரமளித்த ஈசனை    மாமுனியோ மிஞ்சினான்?
மாய்கையோ? மாய்கையோ? மாய்கையோ?    (ஐ)
முனியினாலிச்சூது    முடிந்தது எனத்திருந்தேன்
முடிவுநாள் வந்தது முடித்திட    எங்களை
மோசமோ! மோசமோ! மோசமோ!    (ஐ)
பாலகனைத்தேடியே    பாம்பு சினந்துவாய்
பட்டதோடிந்நாளே    பாவிகற்பும் போனது
பாதகம்! பாதகம்! பாதகம்!    (ஐ)
சுந்தரனரிச்சந்த்ரனுக்குத்    தோன்றுமென்தாலியும்
சுடலையிற் பிணஞ்சுடும்    தோட்டிகண்பட்டது
தோஷமே! தோஷமே! தோஷமே!    (ஐ)

அரிச்சந்திரன்.—அடடா! (ஓடிப்போய் தேவதாஸனைத் தூக்கிக் கொண்டு)

இராகம். இந்துஸ்தானி தாளம். ஆன். (சல்கியா ஒகு.)

நீயோமாண்டாய்    பாலனே
தாயோ கொணர்ந்தாள்    சீலனே    (நீ)

[சந்திரமதி எழுந்து நின்றுபார்க்கல்.]

பாம்புகடித்தோ    இறந்தாய்    (நீ)
பதற ஆவிதுறந்தாய்!
மீட்கேனென்று    எண்ணியே!
வெகுண்டாயோ    புண்ணியா!    (நீ)
காலாலுதை    பட்டாயே!
காசியிலுயிர்    விட்டாயே!    (நீ)

சந்திரமதி.—நாதா! நாதா! இதென்ன காலம் தாங்கள் சுடலை காக்கவேண்டிய காரண மென்ன?

அரிச்சந்திரன்.—பெண்ணே! சந்திரமதி! உங்களைவிற்று மாமுனி கடன் கொடுத்தபின், தரகன் தரகுவேண்டும் என்றதால், நான் புலையனுக் கடிமைப்பட்டு அவருக்குத்தரகு கொடுத்து, என் எஜமான் சொற்படிச் சுடலை காத்துக்கொண்டிருக்கிறேன்.

சந்திரமதி.—நமக்கிவ்விதமான விதியிருந்தால் அதை நாமே அனுபவிக்கவேண்டும். தாங்கள் கவலை கொள்வதிற் பிரயோசனமில்லை. நாம் நம்முடைய மகனைத் தகனம் செய்யவேண்டுமே அதற்கென்ன யோசனை.

அரிச்சந்திரன்.—யோசனை என்ன இருக்கிறது. நீ விரைவில் சென்று உன்னை விலைக்கு வாங்கிய மறையோரிடத்தில் காற்பணமும் துணியும் வாங்கி வந்தால் நம்முடைய குமாரனைத் தகனம் செய்யலாம்.

சந்திரமதி.—நாதா! மறையோராகிலும், அவர் மனைவியாகிலும், காசு கொடுப்பார்களென்று நான் நினைக்கவில்லை.

அரிச்சந்திரன்.—பெண்ணே! நாம் என்ன செய்யலாம்! எவ்விதமும் அவர்களைக் கெஞ்சியே வாங்கி வரவேண்டும்.

சந்திரமதி.—தங்களுடைய இஷ்டம்போல் கேட்டு வாங்கிவருவேன். நான் வருந்தனிலும் நமது அருமை தேவதாஸனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள். [சந்திரமதி போகல்.]

அரிச்சந்திரன்.—அடா! என் மண்மணி! பாம்புகடித்திறந்ததை யறியாமல், உன் தாயை நிந்தித்ததோடு, உன்னையும் உதைத்தேனே! என்னைப்போலும் துஷ்டர்களிருப்பார்களா?

இராகம். மாளவி. தாளம். ஆதி. (கௌருஞ்சிநானு.)

பல்லவி.

இருகண்மணியே இவ்விதியோ
இருந்தது உனக்கென் மகனே! (இ)

அநுபல்லவி.

உரைப்பாயே பாலா உனைப்பாம்புதீண்ட
உயிர்விட்டாய்! துயர்ப்படாய்! (இ)

சரணங்கள்.

மறையோர்க்கடிமை யாகவிற்ற
மனக்குறையோ சொல்வாய் மகனே நானும்
பறையனுக்கடிமையாய்ப் பாவிபோனதால்
குறைவாகவேகொண்டாய்! (இ)



பாம்புகடித்ததும் பதைத்துப்
பாவியால் வந்ததெனப் பகர்ந்தாயோ நீ
வேம்புபோலெனையப்பா வெறுத்திட்டாயோ
கூம்பியதோவாய் கூறாயோ! (இ)

விற்றநாளிலுனை வேதியனும்
வெகுண்டென்கண்முன்பாக மேனிவருந்த
பற்றியிழுத்ததையே பார்த்ததால் இடுக்
குற்றேவெறுத்தாய் குமரா (இ)

*Curtain falls.*

---

## Scene 10.—Street. சந்திரமதி, காவற்காரர்கள்.

[சந்திரமதி தோன்றல்.]

சந்திரமதி.—எங்களுக்கிவ்விதமான விதியிருந்தால் நாங்களே யனுபவிக்கவேண்டும். நான் அடிமைபட்டிருக்கும் மறையோர் பணங் கொடுக்க மஹாதேவனே துணைசெய்யவேண்டும். ஆ! இதென்ன! காலில் தட்டுப்பட்டது! (குனிந்துபார்க்கல் காசிராஜன் மகனை எடுத்துப் பார்க்கல்) இதென்ன இறந்த சிறுவன் வழியிற்கிடக்கிறான். என்னுடைய மகனாயிருப்பானோ. நான் என் நாயகனிடத்தில் என்னருமை மகனைப் பார்த்துக்கொள்ளச் சொல்லி வந்தேனே. சிலவேளை வேறு சவம் மயானத்துக்குவர அவ்விடத்தில் போயிருக்கும் சமயத்தில் நரிகளிழுத்துக் கொண்டு வந்து இவ்விடத்தில் போட்டுவிட்டனவோ! ஆ! மகனே! நீ இறந்தும் படாதபாடு படுகிறாயே.

[உட்கார்ந்து மடியில் வைத்துத் தேகத்தைத் தடவிக்கொடுத்தல்.]

[காவற்காரர் இருவர் தோன்றல்.]

1-வது காவற்காரன்.—அண்ணேன்! அதென்ன அங்கு யாரோ உட்கார்ந்திருக்கிறதுபோல் காண்கிறது.

2-வது காவற்காரன்.—ஆம்! ஒரு பெண்பிள்ளையே உட்கார்ந்திருக்கிறாள். அவள் மடியில் ஓர் பிள்ளையை வைத்திருக்கிறாள்.

1-வது காவற்காரன்.—ஆ! ஆ! அந்தப் பிள்ளையைக் கொல்கிறாள், பார்! பார்! (கைலாந்தரைக் காட்டல்.)

[சந்திரமதி பிள்ளையைத் தூக்கிக்கொண்டுபோக எத்தனித்தல்.]

1-வது காவற்காரன்.

இராகம்-தர்பார். தாளம்-ஆதி. (ஓ! சுகுண குண.)

ஒரு மகவை எடுத்தே போகிறாள்
உடனேபோய்ப் பிடித்திடுவோம்.
ஓடிவாடா.
இரவினிலே தனித்தவளாய்
ஏகுகிறாள்பார் ஏனோதெரியோம்.

மடியில்வைத்துச் சுற்றுமுற்றுமே
மாதுபார்த்தாளே! வதைத்திடவே!
மாபாதகி.
குடிகேடியே கொலைசெய்தாளோ:
கோதையைநாமே கொண்டேகுவோமே:

[காவற்காரர்கள்போய்ச் சந்திரமதியைப் பிடித்துக்கொள்ளல்.]

1-வது காவற்காரன்.—ஆ! ஆ! பாதகி! என்ன காரியம் செய்தாய்! (குழந்தையைப் பார்க்கல்) ஓ! ஓ! மோசம் செய்துவிட்டாள். நம்முடைய அரசன் குமாரனைக் கொன்றுவிட்டாள்.

2-வது காவற்காரன்.—ஐயையோ! காசிநகரை யரசாட்சி செய்யப் பிறந்த சிறுவனை வதைத்துவிட்டாளே! ஆ! ஆ! கொலை காரி! உன்னை என்ன செய்கிறது. (சந்திரமதியை யடித்தல்.)

1-வது காவற்காரன்.—இவ்விதக் கொலைசெய்ய இவளுக்கு எவ்விதம் மனந்துணிந்தது. இவளைக்கட்டி நமதரசன் முன் கொண்டு போகவேண்டும்.

2-வது காவற்காரன்.—ஆம்! ஆம்! இவளைக்கொண்டுபோய்ச் சுண்ணாம்பு காள்வாயில் போட்டுக்கொளுத்தினாலும் நமதரசன் கோபந் தீராதே!

1-வது காவற்காரன்.—இவளைத் துண்டு துண்டாய் வெட்டி எறிந்தாலும் தோஷம் வராது வாடி! நடவடி! (பிடித்திழுத்து அடித்தல்.)



சந்திரமதி.—அப்பா! காவற்காரர்களே! என்னை அடிக்கவேண்டாம். ஒரே தடவையில் என்னுயிர் போகும்படி கொன்றுவிடுங்கள். அது உங்களுக்குப் பெரும் புண்ணிய மாகும்.

2-வது காவற்காரன்.—அடி! கொல்லாமல் விடப்போகிறோ மென்றோ நினைக்கிறாய்? உன்னை அரசனே கொல்லுவான். வா! வா! நட! நட!

சந்திரமதி.—என்னைப் பற்றி யிழுக்கவேண்டாம். நீங்கள் அழைக்கிற இடத்திற்கு வருகிறேன்.

1-வது காவற்காரன்.—அடி! பழிகாரி! உன்னைப் பற்றியா, இழுக்கக் கூடாது (அடித்துத் தள்ளிக்கொண்டு போகல்.)

**Scene 11.—Interior.** காசிராஜன், மந்திரிகள்.

[சேவகன் & காவற்காரர்கள் சந்திரமதியோடு மாறித் தோன்றல்.]

சேவகன்.—ஆ! ஆ! காவற்காரர்களே! இது என்ன! அநியாயம்! நாங்கள் அரசனுடைய குமாரன் படுக்கையிலில்லை யென்று அரண்மனை முற்றிலும் தேடி அல்லலடைந்திருக்கும் ஸமயத்தில் இறந்த அரசகுமாரனைக் கொண்டு வந்தீர்கள்!

1-வது காவற்காரன்.—ஐயா! சேவகரே! நீர் விரைவில் அரசனை அழைத்து வரவேண்டும்.

சேவகன்.—இதோ ஒரு நொடியி லழைத்து வருவேன்.

2-வது காவற்காரன்.—அடி பாதகி! உன்னால் என்ன கெடுதி நேரிட்டிருக்கிறது.

[காசிராஜன் மந்திரிகளோடு தோன்றி விசனத்தோடு சொல்லல்.]

காசிராஜன்.—ஆ! இதென்ன அநியாயம்! ஐயோ! என் குமாரன் இறந்திருக்கிறானே! இதற்கென்ன செய்வேன்! (பிள்ளையைத் தூக்கிக்கொள்ளல்) ஆ! என் கண்மணி! நான் எவ்விதம் உயிரோடிருப்பேன். ஐயோ! நீ மஞ்சத்தில் நித்திரை செய்திருந்தவன் எவ்விதம் வெளியிற் போனாய். உன்னை யார் கொன்றது? ஆ! ஆ! குமாரா! உனக்காயுள் இவ்வளவுதானா!

காவற்காரன்.—ஸ்வாமி !

இராகம். பூரிகல்யாணி. தாளம். ரூபகம். (குடிகள் துஷ்டமிருகங்கள்.)

அரசே என்ன சொல்வோ மிந்த — அரிவை தேடியே
அடுக்காததொழில் புரிந்ததையே — அறிந்து கொணர்ந்தோம் (அ)
சிசுமடிய மடியில் வைத்துத் — திருகித்தலையைச்
செகுத்தபடி கண்டோம் வேந்தே — சினந்து பாவியே (அ)
பிடித்துடனே கேட்டிடவே — பேதை விழித்தாள்
பெரும்பாதகி கொலைபுரிந்து — பெருமை குலைத்தாள் (அ)
இரவில் மனைபுருந்திறைவா! — எந்தலைக்கொண்டு
எகியிதைச் செய்தான் கண்டு — இவளைக்கொணர்ந்தோம் (அ)

காசிராஜன்.—நீங்கள் சற்று நிதானியுங்கள் ஏ ! மாதே.

இராகம். ஆனந்தபைரவி. தாளம். ஆதி. (ஹிம்மாசலதனம்.)

பல்லவி.

கொலை செய்தாய் நீ எனவே
கூறுகிறுருண்மை சொல்வாயே (கொ)

அநுபல்லவி.

புலையருமிதைப் — புரிந்திட அஞ்சுவார்
பூவையே துணிந்து — புரிந்ததென் காரணம் (கொ)

சரணம்.

தகுமா — பழி — போமா
தருமமா — தலமாள் — சிறுவன்
தனைக்கொல்ல லாகுமா?
சாற்றுவாய் கோதாய் — சரியோ பேதாய் !
நீ தீதாய்! — ஓ! சூதாய்! — உடனேதாய் ?

என் குமாரனுல் என்ன தீங்கு உனக்கு நேரிட்டது. அவனை நீ கொலைசெய்தது உண்மையா?

சந்திரமதி.—(*Aside*) நாம் கொலை செய்யவில்லை யென்று சொல்லுவோமே யானால் நம்முடைய வார்த்தையை யொருவரும் நம்பாமல் நாம் சொல்லப்போகும் பொய்மைக்கு அவமானம் வந்துசேரும். நம்முடைய நாயகன் அடலைகாத்துக்கொண்டிருக்கவும்,



நம்முடைய செல்வக்குமாரன் பாம்பாலிறந்த பின்னும், நாம் உயிரோடிருப்பதும் நன்றல்ல. நாமிறப்பதே மேன்மை. (தன் கால் பெருவிரலைப் பார்த்துக்கொண்டு சொல்லல்) மஹாராஜனே, நீர் என்னைக் கேட்பது ஆச்சரியத்தைத் தருகிறது.

இராகம். பியாச். தாளம். ரூபகம்.

என்னைக் கேட்பதடுக்காது — இவர்கள் சொல்வதை நம்பாது (எ)
மன்று நரமாமிஸத்தை — மனம்விரும்பஉண்டேன்பிணத்தைத்
தின்ன இளந்தசையதைத் — தேடிக்கொன்றேனறி குணத்தை(எ)
கையில் சவம்பார்த்தீர் நீரும் — காவலர் சொல் உண்மை தேரும்
வையத்தில் நானரக்கி பாரும் — மயங்காதென்னைக் கொல்லக்கூறும்()
உன்மகனைக் கொல்லும்போது — உத்தமர் கண்டாரப்போது
பின் வருவதை யோசியாது — பேதை செய்தேன் உண்மையீது(எ)
பாதகத்தைச் செய்தேன் நானே — பகர்வீர் கொல்லவே யுடனே
போது போக்கவேண்டாம் நானே புகன்ற பின்னும் மலைப்பேன்
கோனே (எ)

மஹாராஜனே ! நான் நரமாமிஸத்தைத் தின்று வயிறு வளர்க்கும் ஓர் அரக்கி யென்றறியும். இன்று உமது மகன் இளந்தசையை விரும்பி அவனைக் கொலைசெய்தேன். இக்காவற்காரர்கள் சொல்வதை உண்மை யென மதித்து என்னைக் கொன்றுவிடும்படி உத்தரவு செய்யும்.

காசிராஜன்—மந்திரிகளே ! இம்மாது சொல்வதைக் கேட்டீர்களா ?

இராகம். லதாங்கி தாளம். சாபு. (ஈதினமே சுதினமு.)

பல்லவி.

நூதனமே ஓதுதலே — நோக மன முரைத்தல். (நூ)

அநுபல்லவி.

மாதிவளே தனித்து — மாளிகை யடுத்து
மகனை வதைத்தாளென்று — வழங்குதல் துணிந்து (நூ)

சரணங்கள்.

அடக்கமும் நல் — லொடுக்கமும் காணிலே
அரக்கியல — ளென்னுமே

துடுக்காயிவர்கள் தோகையைப் படுத்திய
துன்பத்தைக்காட்டவே சொன்னாள் துணிந்து குற்றம். (நா)
உயிர்க்கொலையை முகத்தினிற் காணலாம்
ஒழிந்தால் கண் குறிகாட்டும்
கையிற்குறியும் காட்டும் நாமறிந்ததே
காரிகை மேலயிர்ப்பில்லை கண்டாற்போலிவர் (நா)
இவள்மேல் குற்றம் எற்ற வேறுசாக்ஷி
இருந்தால் கொண்டுவருவீர்
பவமென் செய்தாள் பாதகம்தாங்க
பதற என்தனுடலே பழிசொலுதல். (நா)

இம்மாதைப்பார்க்க என்மனம் பரிதாபப்படுகிறது. காவற்காரர்கள் இவளையடித்துத் துன்பப்படுத்தியதைக் குறிப்பிக்கும்பொருட்டே இவ்விதம் சொல்லுகிறாள். இவளைப்பார்த்தால் இராக்ஷஸியென்று யாராகிலும் சொல்ல மனந் துணிவார்களா. காவற்காரர் சொல்லியதை நம்பேன். இவளே கொலை செய்தாளென்று மெய்ப்பிக்க வேறு சாக்ஷியிருந்தாலன்றி நான் இவளை ஒன்றும் செய்யமுடியாது.

1-வது காவற்காரன்.—ஸ்வாமி! நாங்கள் தேவரீருடைய அடிமைகள்: நாங்கள் இல்லாததை உண்டென்று சொல்லவேண்டிய அவசியமில்லையே! நாங்கள் தேவரீருடைய திருக்குமாரனை இவள் தன் மடியில்வைத்து உயிர் போக்கியதைக் கண்டே இவளைப் பிடித்துக்கொண்டு வந்தோம். தேவரீர் எங்கள் வார்த்தையை நம்பலாம். இவளை உயிரோடுவிட்டால் இன்னும் எத்தனை கொலை செய்வாளோ அறியோம்.

காசிராஜன்.—காவற்காரர்களே! நீங்கள் சொல்லியது போதுமானது. அதிகம் பேசவேண்டாம். மந்திரிகளே! உங்களில் ஒருவர்சென்று என்குமாரனைக் கொண்டுபோன வழியில் ஏதாகிலும் காலடி யடையாளம் இருந்தால் கண்டு வருவீர்கள்.

மந்திரி.—ஸ்வாமி! நான்போய்ப் பார்த்துவருகிறேன். [மந்திரிபோகல்.]

காசிராஜன்.—மந்திரி! என்மகன் இறந்த சமாசாரத்தை என் மனைவியிடம் சொல்லி அவளை யழைத்துவருவாய்.

2-வது மந்திரி.—பாக்கியம் ஸ்வாமி. [மந்திரிபோகல்.]



[மந்திரிதோன்றிச் சந்திரமதி பாதத்தை அளந்துபார்த்தல்.]

1-வது மந்திரி.—ஸ்வாமி! நானும் காவற்காரர்கள் வார்த்தையை நம்பாமலிருந்தேன். இனி சந்தேகங்கொள்ளக் காரணமில்லை. தரை பனியில்நனைந்து இம்மாதின் காலடி நன்றாய் நெடுந்தூரம் தெரிகிறது.

காசிராஜன்.—என் திருக்குமாரன் இறந்த துக்கத்தைவிட இவள் விஷயத்தில் எனக்கதிக துக்கமாக இருக்கிறது. ஏ! மாதே! நீ உண்மையைச் சொல்லித் தப்பித்துக்கொள்ளும் வழியைப் பார்.

சந்திரமதி.—மஹாராஜனே! நான் உம்முடைய மகனை எடுத்துப் போனதாகக் காலடியா லறிந்தீர். கொன்றதைக் காவற்காரரால் அறிந்தீர். நீர் சந்தேகங்கொள்ளாமல் என்னைக் கொன்றுவிடும்படி விரைவில் உத்தரவு கொடும்.

[காசிராஜன் மனைவி தோன்றல்.]

காசிராஜன் மனைவி.—ஆ! ஆ! என் அருமைச்செல்வமே! உன்னைக் கொண்டுபோய் இப்பாவியா கொன்றுவிட்டாள்! ஐயோ! நான் என்னசெய்வேன்.

இராகம். காம்போதி   தாளம். ஆதி.

பாலா நீமாளப் பார்த்திட விருந்தேனோ
பாவியித்தோஷி பதறவே கொன்றாளோ! (பா)
தாலத்தை யாள்மன்னன் தனையனைக் கொலைசெய்யத்
சார்ந்து அரண்மனையைத் தையல் தோன்றினளே!
பகைவரி வளைவிட்டு பதைத்திடக் கொல்லவே
பகர்ந்தாரோ சூதேதோ. பாலகா அறிந்திலேன்.
தந்தைக்குப் பின்னாகத் தவிசேறி யரசாளத்
தகுதி நீ என்றிருந்தேன் தடுத்தாரே ஐயையோ.
பாதகி உன்னைக்கொன்று பலனென்ன பெற்றனள்
பதைத்திட என்னுடல் பாலகாமாண்டனை.

காசிராஜன்.—பெண்ணே! எல்லாம் வினைப்பிரகாரம் முடியும். நாம் விசனப்படுவதால் இறந்தபிள்ளை எழுந்து வரப்போகிறதில்லை. மந்திரிகளே! இம்மாதை என்ன செய்யலாம்? இவள் இக்

கொலை செய்திருப்பாளென்றுசொல்ல என்மனந் துணியவில்லை. முன்வினையால் இவள்மேல் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

மந்திரிகள்.—ஸ்வாமி !

இராகம். தர்பார். தாளம். ரூபகம். (ஆசிலவே நல்ல.)

பல்லவி.

பவமே இவ்வுலகில் பாவை செய்தவமே. (ப)

அநுபல்லவி.

அவமே இது நவமே ! குறைதயமே ! இத்திவமே. (ப)

சரணங்கள்.

சற்புடையவள்போல் காணுமித்தோகையைக்
கடிநகர்தனையே நண்ணி
அற்புதமாகவே அரசன் மகனையே
அடைந்திடயோசனை பண்ணிப்
பற்றிசசு கொன்றதுவும் பார்க்க நம்முன் நின்றதுவும்
முற்று மிவள் சொன்னதுவும் மோசஞ்செயக் கண்டதுவும் (ப)
அரசன் சேய்பகைக்க அரிவை கொன்றாளென்று
அறைகிறாரிதுவென்ன நியாயம்
அரிவையடியன்றி அடியிலை யென்பதும்
அறிந்திலோ மிதுவென்ன மாயம்
வரும்வினையை நொந்ததுவும் வல்லியிவட்குற்றதுவும்
தரும் தண்டனை ஏற்றதுவும் சலிப்பிலாதுற்றதுவும் (ப)
மாதிவள் பாலனை வதைத்ததைக்கண்டதாய்
வழங்கினாரையனே பாரீர்
சோதனைசெய்ததில் தோன்றலைக்கொலைசெயத்
துணிந்தவளிவளாவாள். தேரீர்
பாதகத்தைச் செய்ததுவும் பாரில்சாக்ஷி சொன்னதுவும்
சாதனையாய்ப் பேசியதும் சாகமனங் கொண்டதுவும் (ப)

மஹாராஜனே ! தேவரீருக்குப் பின் இந்நாட்டை அரசாளவிருந்த தேவரீருடைய செல்வக்குமாரனைக் கொண்டுபோய்க் கொன்றதைப் பார்த்தோமென்ற வாக்கை நாம் நம்பாமற் போனாலும், இவளுடைய அடியைத்தவிர வேறு காலடி



இல்லாமலிருப்பதால், நாம் என்ன செய்யலாம். இவளுக்குத் தண்டனை விதிக்கவேண்டியதே !

காசிராஜன்.—நீங்கள் அவ்விதம் சொல்வதால் நான் என்னசெய்ய முடியும். விரைவில் வீரவாகுவை வரவழையுங்கள்.

மந்திரி.—சேவகா ! விரைவில் வீரவாகுவை அழைத்து வருவாய்.

சேவகன்.—பாக்கியம் ஸ்வாமி ! [சேவகன் போகல்.]

காசிராஜன்மனைவி.—அடி ! படுபாவி ! இச்சிறுவன் உனக்கென்ன கெடுதலைச் செய்தானென்று அவனைக் கொலைசெய்தாய். அடி ! இவனைக்கொல்ல உன்மனம் எவ்விதம் துணிந்தது ? அடி ! உன்னை என்ன செய்தால் எங்கள் மனம் குளிரும்.

[வீரவாகு தோன்றல்.]

வீரவாகு.—மஹாராஜா ! நமஸ்கரிக்கிறேன். (கீழ்விழுந்து நமஸ்கரித்தல்) அடியேனை அழைத்த காரியத்தை உத்தரவு செய்யவேண்டும், மஹாராஜனே.

காசிராஜன்.—அடா ! இம்மாது பாவச்செய்கைக்கே தலைமைபூண்டவளென்றும், இவள் என் மகனைக் கொன்றதை நேரில் பார்த்தோமென்றும், காவற்காரர் சொல்லியதாலும், மந்திரிகள் இவளைக் கொலை செய்யத் தூண்டுவதாலும், இவளைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோய் இவளை வெட்டிவிடு.

வீரவாகு.—பாக்கியம் ! ஸ்வாமி (சந்திரமதியைப் பார்த்து) அம்மா ! வாங்கோ.

[கயிற்றால் சந்திரமதியைக் கட்டிக்கொண்டு போகல்.]

காசிராஜன்.—மந்திரிகளே ! எனக்குப் பின் அரசாட்சி செய்வான் என்று எண்ணிய குமாரன் காலம் முடிந்ததால், அவனைக் கொண்டுபோய் அடக்கம் செய்துவிடலாம், வாருங்கள்.

[யாவரும் போகல்.]

## Scene 12.—Burial Ground. அரிச்சந்திரன், தேவதாஸன், காசிராஜன் மகன்.

[அரிச்சந்திரன் விசனத்தோடு நின்றுகொண்டிருச்கல். வீரவாகு சந்திரமதியுடன் தோன்றல்.]

வீரவாகு.—அடே! அரிச்சா!

அரிச்சந்திரன்.—எஜமானே! இதோ வந்தேன்.

வீரவாகு.—அடே! இவள் கொடும்பாவி! இவளைக் கொலைக்களத்துக்குக் கொண்டுபோய் இவள் தலை துள்ளிகுதிக்கும்படியாகவும் இவள் கவந்தம் பதைக்கும்படியாகவும் இவளை வெட்டிவிடு. இது அரசனுடைய ஆக்கினை. வாளைப் பெற்றுக்கொள்.

அரிச்சந்திரன்.—பாக்கியம் எஜமானே! (வாளைச் சந்திரமதியைக் கட்டிய கயிற்றோடு பெற்றுக்கொள்ளல்.) [வீரவாகு நீங்கல்]

அரிச்சந்திரன்.—பெண்ணே! இதென்ன விபரீதம்? நீ மறையோரிடத்தில் பணம் கேட்டுவாங்கப் போனவளுக்கு இவ்விதி நேரிட்ட காரண மென்ன?

சந்திரமதி.—நாதா!

இராகம். நாதநாமக்கிரியை. தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசொல்லுவேன் மன்னவா இதை
எவ்விதம் எடுத்துரைப்பேன். (எ)

சரணங்கள்.

மன்னு நம்முடைய மகனைத் தகிக்கவே
மறையோரிடம் சென்றேன் வாங்கவேபணம்
இந்நகர் வீதியில் இருக்கவோர் சவம்
எமதென்றெடுத்ததும் ஏற்றினாரேபழி (எ)

மகனிறந்த பின்னும் மாநிலத்திலிருக்க
மனங்கொள்ளாதியானுமே மரித்திடத் துணிந்தேனே
சகத்தில் நமக்குத்துன்பம் தருமுனி மகிழ்ந்திட
சடலத்தை விட்டுயிர் சடுதியலொழிப்பீரே (எ)



முடிவிது முடிவிது முடிவுநாள் வந்தது
முடித்திடு மென்தனை முனியாது விரைவாக
வடிவுள்ள சுதனோடு மன்னவா இறக்கவே
மன மூவந்திதையே மறுக்காது செய்வீரே (எ)

அரிச்சந்திரன்.—ஆ! என்பிராணநாயகி! நான் முன்போந்த ஜன்மத்தில் என்ன கொடுமை செய்தேனோ! என்னுயிர்க்குயிரான என்மகனைப் பாம்புக்குப் பலிகொடுக்கவும், நீயும் என்கையால் மாளவும், பிரமன் விதித்தானே! இக்கொடுமையை எவ்விதம் செய்யத் துணிவேன். ஏ! சம்போ! சங்கரா! இதெல்லாம் உன் திருவிளையாட்டா!

[விஸ்வாமித்திரர் தோன்றல்.]

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரா!

அரிச்சந்திரன்.—போற்றி! போற்றி! மாமுனியே!

விஸ்வாமித்திரர்.—அப்பா! அரிச்சந்திரா! உனக்கு நேரிட்டதையெல்லாம் பார்க்க எனக்கதிக கவலையாக இருக்கிறது. நீ வீணே இவ்வித கஷ்டங்களை அனுபவிக்கிறாய். வேண்டாம்! வேண்டாம்! நான் சொல்வதைக்கேள். நீ முன்னம் கொடுத்த நாட்டை எனக்கு கொடுக்கவில்லையென்று ஒரே ஒரு சொல் சொன்னால்; உன் நாட்டையுங் கொடுக்கிறேன், உன் மகனையும் எழுப்பித்தருகிறேன். நீ உன்மனைவி மகனோடு சென்று அரசாளலாம். நீ என் காதில் இரகசியமாகச் சொல்லிவிடு.

அரிச்சந்திரன்.—என்ன சொன்னீர்!

இராகம். கரகரப்பிரியாதாளம். ஆதி. (சாலு சாலு போரா.)

போதும் போது மிதையே முனியே! புகலலாமோ கதையே!
சூதாய்ப் புகலத் துணிந்து! முனிந்து! கனிந்து! (போ)

மாது விலைபட்டாள் மகனும் விட்டான்
மகிழ்ந்து பிணம் சுட்டேன்!
வழங்காது சூதையே! தீதையே! ஓதவே! (போ)

நாடும் நகர் விட்டேன் நாடும் புகழ்விட்டேன்
நானுமே விலைப்பட்டேன்
நயவஞ்சகம் பண்ணி! எண்ணி! நண்ணி! (போ)

பதியு மிழந்தேன் பாலனை யிழந்தேன்
கதியிழக்கினும்
கட்டுரையிழப்பேனோ? பொறுப்பாய்! விருப்பாய்! (போ)

மாமுனியே! எங்களுடைய முடிவு காலத்தில் தேவரீர் இதைச் சொல்லி எங்களைச் சோதிப்பது நியாயமல்ல நான் தேவரீருடைய வார்த்தையைக் கேட்காமல் மறுத்ததற்கு மன்னியும். எல்லாச் சாத்திரங்களும் நன்குணர்ந்த தேவரீர் அநித்யமான தேகத்தைப் பெரிதென வெண்ணிச் சத்தியந்தவறச் சொல்லுதல் அழகல்ல.

சந்திரமதி.—மாமுனியே! என்னுடைய முடிவில் இவ்விதம் சொல்ல வேண்டாம்.

விஸ்வாமித்திரர்.—அடா! அரிச்சந்திரா! நீ கொலையில் கைதேறிய பாதகன்! ஆனதால் நீ உன் மனைவியை வெட்டத் துணிந்தாய்! உன்னைப் பார்த்து வார்த்தையாடுதலே கூடாது.

[விஸ்வாமித்திரர் போகல்.]

சந்திரமதி.—நாதா! நீர் கவலை கொள்ளாமல் நான் சொல்வதைக் கேட்கவேண்டும்.

இராகம். எதுகுலகாம்போதி. தாளம். சாபு.

பல்லவி.

என்னுயிர்க் கிறைவரே ஏங்கி மனந்தளர்ந்து
இருப்பதேற்கா தேற்காதே!

அநுபல்லவி.

மின்னல் போல் காட்டி நீங்கும் மெய்யென்ற பொய்த்தேகம்
வினையால் தோன்றி மறையும் விதத்தை யறிந்திலன்னம் (ஏ)

சரணங்கள்.

சஞ்சித மரத்தில் தான் பழுத்த கனியைத்
தரணியில் புசிக்கவே சார்ந்தோ மிவ்வுடலோடு
எஞ்சிய வினைக்கு நாம் எடுக்க வேறு தேகம்
இருப்பதை யறியாமல் ஏங்குதல் நீதியோ? (ஏ)



எனக்காக வருந்திநீர் இருப்ப தடுக்காது
இறப்பதும் பிறப்பதும் இயல்பென்று நினையாமல்
அனைத்துயிர்க் குயிரான அரனால் வினைப்பலனை
அறியீரோ தவிர்த்திட அவராலு மாகாதே! (ஏ)

வினைப்போக மித்தேகம் வேந்தனே யானதால்
விடுக்காது அறத்தையே மேதினிபுகழவே
எனை யித்தறி வெட்டி என்மகனுடன்மாள
என்னுயிர்க்காதலா! இதைச்செய்யவேணுமே! (ஏ)

ஏ! பிராணநாயகா! நீர் அறத்தைப் பரிபாலிக்காது அதை நழுவவிடுவது ஆகாது. என்றைக்கிருந்தாலும் இறக்கவேண்டியதே! நீர் கவலைகொண்டு கலங்குவதைவிட்டு என்னைமுடித்து விடும்.

அரிச்சந்திரன்.—ஆ! என்கண்மணி! நீ என்கழுத்தில் பூமாலை சூடி மணந்து என்னைக் களிக்கச்செய்தாய். நான் அதற்குப்பதிலாக உன் கழுத்தைவெட்டி உயிரைப்போக்கி உன்னை இறக்கச்செய்வதோ? ஆ! ஆ! காலகண்டா! ஏ! திரிநேத்திரா!

இராகம். தேவகாந்தாரி. தாளம். ஆதி. (க்ஷீரசாகரசயனு.)

பல்லவி.

பாதி மதிபுனை வேதநாயம்!
பாரிலில்லை வேறுதாயகம் (பா)

அநுபல்லவி.

ஆதியந்தமிலா அரவாபரணா!
அகிலத்துக்கெல்லாம் ஆதிகாரணா! (பா)

சரணம்.

தேவர்கொடுமையைத் தீர்த்திடவே அன்று
திரிபுரம் வேகச் சிரித்தாய்!
ஆவலாய் நாரணன் அனுப்பியமதனை
அனல்விழியாலே எரித்தாய்!
ஓவெனத்தோன்றிய ஒப்பிலாயானையை
உத்தமாசினந்ததை உரித்தாய்!
மூவராய் நின்று முத்தொழில்புரிந்து
மொய்த்த வேதத்தின்பொருள் விரித்தாய்! (பா)

பெண்ணே! நாம் என்னசெய்யவிருக்கிறது. என்னை அடிமைகொண்டவரின் உத்தரவுபோல் நான் செய்யவேண்டியதே! ஆ! என்கண்மணி! நீ வழக்கப்படியே வணங்கத்தக்க தெய்வத்தை வணங்கிக்கொண்டு கிழக்கு முகமாக நிற்பாயாக.

சந்திரமதி.—(தன் நாயகனை விழுந்து நமஸ்கரித்து) நாதா! நீர்க் குமிழி போன்றதே இவ்வாழ்வென்று நினைத்து, உம்முடைய அருமையான தவத்தையும், தருமத்தையும், மெய்மையையும் விட்டு வருத்தமடையாமல் இருப்பீராக. உம்முடைய வமிசத்தில் நீர் சத்தியத்தில் சிறந்தவராக இருக்கத் திருவருள் துணை செய்யவேண்டும். இன்னும் காலம் போக்கவேண்டாம்! என் பிராணநாயகா!

அரிச்சந்திரன்.—உலகத்துயிர்களுக்கெல்லாம் பசுபதியே ஒப்பற்ற முதற்கடவுளானால்! அவருடைய சொல்லே வேதமானால்! அவ்வேதத்தில் விளங்கச்சொல்லுகின்ற தருமங்கள் பலவகைகளினும் சிறந்தது மெய்யேயானால்! அம்மெய்யைச் சொல்லுதலே விரதமாக நான் கொண்டிருந்தால்! அவ்விரதத்தைக்கொண்ட என்னை நீங்காத நிறைகுணம் இவளுக்குண்டாயிருந்தால்! இவள் சாவாமையைப் பெறக்கடவது. இவையெல்லாம் இல்லையென்றால் இவள் சாவைப் பெறக்கடவது. (சந்திரமதியை வெட்டல் வாள் பூமாலையாக விழல்.)

[தேவேந்திரன், வசிஷ்டர், விஸ்வாமித்திரர், தேவர்கள், சத்தியகீர்த்தி தோன்றல்.]

விஸ்வாமித்திரர்.—அரிச்சந்திரனுடைய நற்குணங்களெல்லாம் வெளி வந்ததால் என்னைப்போலிவனுக்கு நன்மை செய்தவர்களாரிருக்கிறார்கள். (கூத்தாடல்.)

வசிஷ்டர்.—(அரிச்சந்திரன் நமஸ்கரித்தல். வசிஷ்டர் அரிச்சந்திரனைத் தூக்கி அணைத்துக்கொண்டு) அரிச்சந்திரா! என்னால் அதிக துன்பங்களடைந்தாய்.

அரிச்சந்திரன்.—(வசிஷ்டரைப்பார்த்து) தேவரீர் இவ்விதம் சொல்லத் தகுமோ (விஸ்வாமித்திரரைப் பார்த்து) போற்றி! போற்றி! விஸ்வாமித்திர மாமுனியே!



ஸ்வாமித்திரர்.—வாழி! வாழி! அரிச்சந்திர மஹாராஜனே!

பன், பார்வதி, விநாயகர், சுப்பிரமணியர், எமன், அக்கினிபகவான், சுக்கிரன், தேவர்கள் தோன்றல்.]

ச்சந்திரன்.—ஏ! சிவலோக நாதனே! வேதத்துக்குத்தலைவனே ஏ! ஆறுவாகனா! ஏ! குமரகுருபரா! தேவர்களை என் க ளிக்கக் கண்டு வணங்க அடியேன் என்ன தவமிழைத்தே (நமஸ்கரித்தல்.)

திரமதி.—ஏ லோகமாதா! ஏ மஹேஸ்வரி! உம்மை நேரில் பார்க்க நான் செய்த நோன்புவதென்றறியேன்தாயே! (நமஸ்கரித்தல்.)

வன்.—அப்பா! உன்போலும் சிறந்த குணத்தையுடையவர்கள் இருப்பது அபூர்வம். முன்னிருந்த உத்தமர்களெல்லாரினும் நன்மார்க்கத்தில் நீயே உயர்ந்தவன். உன்னையொப்பாரொருவருமில்லை.

பார்வதி.—(சந்திரமதியை அணைத்துக்கொண்டு) நீயே கற்பில் சிறந்தவள்.

ப்பிரமணியர்.—அப்பா தேவதாஸா! நீ காசிராஜன் மகனே எழுந்துவருவாய். (தேவதாஸனும் காசி ராஜன்மகனும் எழுந்துவந்து சுப்பிரமணியர் முதலானவர்களுக்குக் கீழ்விழுந்து நமஸ்கரித்தல். தேவர் ஆசிகூறல்.)

வன்.—விஸ்வாமித்திரா!

விஸ்வாமித்திரர்.—ஸ்வாமி! (ஓடிப்போய் நமஸ்கரித்தல்.)

வன்.—நீ இந்திரன் சபையில் வசிஷ்டனோடு வாக்குவாதம் செய்து அரிச்சந்திரனை உன்னிஷ்டம்போல் சோதித்துப்பார்த்தாய் உங்களிருவரில் வென்றவர் யார்? தோற்றவர் யார்?

விஸ்வாமித்திரர்.—குற்றமில்லாத குணத்தைக்கொண்ட அரிச்சந்தி னுடைய நீதியும் சன்மார்க்கமும் அவன் மனத்திட்பமும் அ யாது அரிச்சந்திரனை யிகழ்ந்தேன். ஆனதால் வென்ற வசிஷ்டரே! தோற்றவன் நானே. முன் வாக்களித்தவண்ண நான் அருமையாய்ச் செய்த தவத்தில் பாதி அரிச்சந்திரமஹ

ராஜனுக்குக் கொடுத்ததோடு, அவன் எனக்குக்கொடுத்த அ சாட்சியும் அரிச்சந்திரனுக்கே கொடுத்துவிட்டேன்.

அரிச்சந்திரன்.—ஆ! ஆ! விஸ்வாமித்திர மாமுனியே! தேவரீர் இ விதம் சொல்லத்தகுமா! ஒருவர்கேட்கும் பொருளை மறைத் இல்லையென்று சொல்லத்தகுந்தவரும், கொடுத்த பொருளை வாங்கிக்கொள்ள மாட்டாரே. யாசித்தவர்க்குக் கொடுத்தவ மீண்டும் வாங்குவோர் இருக்கிறார்களென்று நான் கேட்ட மில்லை; கண்டதுமில்லை. கொடுத்ததை வாங்கிக்கொண்டா என்று உலகம் வசைகூற தேவரீருக்குக் கொடுத்ததைப் பெ அரசாளேன். எனக்குப் பழிப்பையுண்டாக்கத் தேவ நினைப்பது அடுக்காது.

விஸ்வாமித்திரர்.—என் தவத்தைவிட்டு உன்நாட்டை அரசா நினைத்திருப்பவனென்றோ நினைத்தாய்? நான் சொல்வதைக் க ளித்து கேட்பாயாக. நானும் வசிஷ்டரும் தேவேந்திர னுடைய சபையில் சபதம் செய்துகொண்டது நிமித்தம் உன் னரசைப் பெற்றும் உனக்குப் பல துன்பங்களைக் கொடுத்து சோதித்துப்பார்த்தேனே யன்றி வேறு கருத்தல்லவென் றறி வாய்.

அரிச்சந்திரன்.—மாமுனியே! என்மனைவியையும், மகனையும், மறை யோருக்கு அடிமையாக விற்றேன். நான் இழிவான நீச்சனுக் கடிமையாய்ச் சுடலைகாத்தேன். ஆனதால்! இனிநான் அர சாட்சி செய்யத் தகுந்தவனல்ல. தேவரீருக்கு அரசாட்சியே தகும். எனக்குச் சுடலைகாத்தலே தகுதி.

அக்கினிபகவான்.—அரிச்சந்திரா! என்னசொன்னாய்! உன் மனைவி யும் மகனும் விலைப்படப் போகிறார்களென் றறிந்து, நான் வேதியர்குலத்தில் பிறந்து உன்மனைவி மக்களை விலைகொண் டேன். என்னிடத்தி லவர்களிருந்ததோ இழிவு? நீ கொடுத் திருக்கிற கிரயச்சீட்டே இது. (என்று சிவன் முன்வைத் தான்.)

தர்மராஜன்.—அப்பா! அரிச்சந்திரா! நீ நீச்சனுக்கு அடிமைப்பட ப்போகிறாயென அறிந்து, நீச்சனாகத்தோன்றி உன்னை விலைக்கு



வாங்கியவன் நானே! நீ எழுதிக்கொடுத்த ஆவணச்சீட்டிது. நீ காத்திருந்தது சுடுகாடல்ல; இது யாகசாலை யென்றறிவாய். நான் சொல்லுவது உண்மையென்று உன் கண்ணால் காணு வாய்.

[...சந்திரன் சுடுகாட்டைப் பார்க்கல். அது யாகசாலையாகக் காணல்.]

...—இந்திரா! நீ முனிக்கூட்டங்களையும், காசிராஜனையும், அரிச் ...ந்திரனையும், அவன் மனைவி மகனையும் அயோத்திக் கழைத் ...ச் சென்று, அரிச்சந்திரனுக்கு முடிசூட்டித் தேவலோகம் ...பாவாயாக.

...திரன்.—தேவரீர் ஆக்கினையின் பிரகாரம் நடப்பேன் தேவாதி ...தேவா.

...—அப்பா! சத்தியகீர்த்தி! நீ சற்புத்திரன்! நீ அரிச்சந்திரனோ ...டிருந்து அரசாண்டு பின் சிவலோகம் சேருவாயாக.

...பகீர்த்தி.—(நமஸ்கரித்தல்) பாக்கியம் தேவாதி தேவா!

*Curtain falls.*

**...ne 13.—Interior King's Court.** தேவே, வசி, விஸ், அக்கீனி, எமன், காசிராஜன் மனைவி, மந்திரிகள்.

[...வேந்திரன் அரிச்சந்திரனை சிம்மாஸன மேற்றல். காசிராஜன் முடிதரித் தல். யாவரும் புஷ்பமிறைத்தல்.]

இராகம். இங்கிலீஷ் நோட். தாளம். ஏகம்.

வாழி! வாழி! வாழி! வாழி! நீடுவாழ் வீரே.
மாநிலம் ஏத்த மணிமுடிதாங்கி (வா)

இராகம். இங்கிலீஷ் நோட். தாளம். ஏகம்.

வேதமேதுதித்திடும் வித்தகனே! வித்தகனே வித்தகனே!
மாதவத்தோர்க்கருள்புரிபவனே! புரிபவனே! புரிபவனே!

மதியை முடித்தும் மறவியுதைத்தும்
மானைத் தரித்தும் மாரனை யெரித்தும்
நதியை முடித்தும் நாகம் தரித்தும்
நடனம் புரிந்த வித்தகனே !

ஜோதியாய் நின்ற வன்றுளே
தொல்வினையின்றொடு தொலைந்ததென்றெண்ணி
மேதினியில் நாம் இறைவனை
வேண்டுவோ மேயின்று வித்தகனே.

பொறையே நிறையப் புகழ உலகம்
போற்றும் ஐந்தாம் பூமான் ஜார்ஜின்
குறைகள் நீக்கும் செங் கோல் வாழவே நாம்
17d81
சோரியே துதிப்போம் வித்தகனே

கூறும் சுஜன ரஞ்சன
கூடும் சபையோங்கக் குற்றமெலா நீங்கப்
பூரித்தவரை நாம் வேண்டியே
போற்றுவோம் போற்றுவோம் வித்தகனே !

முற்றிற்று.

42577

